பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 18 செவ்வாய்க்கிழமை (04-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 341

## புலிகளின் வரைவு குறித்து அமெரிக்கா கருத்து

# இடைக்கால நிர்வாகத்துக்கு இணங்கி

# நிரந்தர சமாதானத் தீர்வு காணலாம்!

## நோர்வேயின் அனுசரணைக்குப் பாராட்டு

கொழும்பு.நவம்பர்4

**இலங்கை அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய இருதரப்பினரும் இடைக்கால நிர்வாக விடயத்தில் தங்களுக்குள் இணக்கம் காணமுடியும். அது நிரந்தர சமாதானத் தீர்வுக்குரிய அரசியல் முறைமையை எட்டுவதற்கும் வழி வகுக்கும்.**

**- இவ்வாறு தான் நம்புவதாக அமெரிக்கா அறிவித்திருக்கிறது.**

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பாக இலங்கை அரசின் யோசனைக்கு மாற்றீடான திட்ட வரைவை விடுதலைப் புலிகள் சமர்ப்பித்திருப்பதை கவனத்தில் எடுத்திருப்பதாகத் தெரிவிக்கும் குறிப்பு ஒன்றை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டிருக்கின்றது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்தப் படியைத் தக்க தருணமாகப் பயன்படுத்தி பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்குமாறு இருதரப்பையும் அமெரிக்கத் தூதரகம் கேட்டுக்கொள்கிறது.

இந்தப் பிணக்குக்கு ஆக்கபூர்வமான அணுகுமுறை மற்றும் இணக்கம் காண்பதற்கான விருப்பம் ஆகியவற்றின் மூலம் பேச்சு வழியிலான தீர்வுகாண்பது சாத்தியமே என்று நாங்கள் தொடர்ந்து நம்புகின்றோம்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக இருதரப்பும் ஓர் இணக்கத்துககு

(16ஆம் பக்கம் பார்க்க)



அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேரிலாண்ட் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவைப் பார்வையிட்டபோது எடுக்கப்பட்ட படம்.

## பிரதமர் ரணில் - ஜனாதிபதி புஷ் சந்திப்பு வெறும் கைகுலுக்கலுக்கான நிகழ்ச்சியல்ல!

### இப்படிக் கூறுகிறார் அமைச்சர் மிலிந்த

வாஷிங்ரன்,நவ.4

"பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமெரிக்க விஜயம் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷுடன் வெறும் கைகுலுக்கலுக்காக இடம்பெறவில்லை. அமெரிக்காவும் இலங்கையும் நீண்ட காலத்திட்டங்களைக் கொண்டு செயற்படுகின்றன. பிரதமர் ரணிலின் அமெரிக்க விஜயம் அமெரிக்காவும், இலங்கையும் மேலும் நெருங்கிச் செயலாற்ற உதவும்.

பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று வாஷிங்ரனில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு கூறினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமெரிக்க விஜயத்தை முன்னிட்டு அமைச்சர் மொறகொட வாஷிங்டன் வந்திருக்கிறார்.

த றிட்ஜ் கார்டன் ஹோட்டலில் அமைக்கப்பட்டிருந்த தகவல் மையத்தில் அவர் இந்த பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தினார்.

அப்போது அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை-அமெ. விமானப்படைகள் வளப்பரிமாறல் நடவடிக்கையில்!

கொழும்பு,நவ.4

அமெரிக்க விமானப்படைக்கும், இலங்கை விமானப்படைக்கும் இடையில் நிபுணத்துவ வளப்பரிமாறல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று இம்மாதம் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இத்திட்டத்தின்படி அமெரிக்க விமானப்படையின் 13ஆவது பிரிவின் 613ஆவது அணியைச் சேர்ந்த சுமார் முப்பது உறுப்பினர்கள் இலங்கை விமானப் படையினருடன் இணைந்து நிபுணத்துவ வளப்பரிமாறலில் ஈடுபட விருக்கின்றனர்.

விமானப்படையினருக்குப் பந்தோபஸ்து நிலைமை, மருத்துவ விவகாரங்கள், பொறியியல் விடயங்கள், படைக்குறிப்புப் பிரதேசத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## உயர் நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பாக விசேட சிறப்புரிமைப் பிரச்சினை!

### 6ஆம் திகதி கொண்டுவர அரசு தீர்மானம்

பாதுகாப்பு அதிகார இழுபறி தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை, நாடாளுமன்றத்தின் சிறப்புரிமையை மீறும் செயலாகக் கருதி அது தொடர்பாக எதிர்வரும் 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விசேட சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்புவதெனவும் அரச நாடாளுமன்றக்குழு தீர்மானித்திருக்கிறது.

உயர்நீதிமன்றம் வழங்கும் அந்தத் தீர்ப்பு தொடர்பாக ஒரு தீர்ப்பை வழங்குமாறு அன்று சபாநாயகரைக் கோருவதென அரசு எண்ணியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன வெளியிட்ட இராணுவ உயர் அதிகாரிகளின் சேவை நீடிப்பு தொடர்பான இரு வர்த்தமானி அறிவித்தல்கள் குறித்து உயர்நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புத் தொடர்பாக சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்பும்போது அநுரா பண்டாரநாயக்க சபாநாயகர் பதவி வகித்தபோது உயர் நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கு சவால் விடுத்து வெளியிட்ட கருத்துக்களையும் முன்வைப்பதென அரச நாடாளுமன்றக்குழு தீர்மானித்திருக்கிறது.

## ஜனாதிபதியைக் கொலை செய்வதற்கு அமைச்சர்கள் புலிகளுடன் பேசிச்சதி!

### ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சந்தேகம் தெரிவிப்பு

கொழும்பு,நவ.4

அமைச்சர்கள் நால்வர் வவுனியாவில் விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்து இரகசியமாக - பேச்சு நடத்தியமை ஜனாதிபதியைக் கொலை செய்ய அவர்கள் சதித்திட்டம் தீட்டியுள்ளனரா என்ற சந்தேகத்தை எமக்கு எழுப்பியுள்ளது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்றுமுன்தினம் அதிகாலை அரசின் உயர் மட்ட அமைச்சர்கள் வவுனியாவுக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்து இரகசியமாகப் பேச்சு நடத்தியமை எமக்குப் பெரும் சந்தேகத்தை உண்டு பண்ணியுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### பெற்றோரிடம் சிறுவன் ஒப்படைப்பு!

மட்டக்களப்பு,நவ.4

மட்டக்களப்பு - கறுவாக்கேணிப் பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைய முன்வந்த 14 வயதுடைய மாணவனை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு முன்னிலையில் நேற்று விடுதலைப் புலிகள் மீண்டும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வரைவு குறித்து பொ.ஐ.மு. இன்று ஆராயும்

கொழும்பு,நவ.4

பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தலைமையில் நடைபெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசுக்குச் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக வரைவு குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும்.

இதேவேளை, பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்குழுக் கூட்டம் நேற்று இரவு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

## பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவிசாரணை பிரேரணைக்கு தமிழ்க் கூட்டமைப்பினர் ஆதரவு

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு எதிராக அரசு கொண்டுவரவுள்ள குற்றவிசாரணைப் பிரேரணைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரண ஆதரவு வழங்கும் என்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அவிநாயகமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.தே.க. அரசைக் கலைப்பதற்கு கூட்டமைப்பு ஒருபோதும் ஆதரவு வழங்கப்போவதில்லை. இதை ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் அறிவித்துள்ளோம். அதேவேளை அரசின் சமாதான முயற்சிகளை குழப்பி இனவாதிகளைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு பொ.ஐ.முவை ஆட்சிக்கு கொண்டுவர அவர் முயல்வது பாரதூரமான விளைவையே ஏற்படுத்தும்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

### புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

**ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் இல.3 நாளைய உதயனுடன் வெளியாகும்.**

**வினாத்தாள்களின் மேலதிக பிரதிகளை பெற விரும்பும் பாடசாலைகள் வினாத்தாள் ஒன்றுக்கு 2ரூபா வீதம் செலுத்தி இல. 363, கஸ்தூரியார் வீதியில் உள்ள அருண் பிரிண்டேர்ஸ் அன் பப்பிளிஷேர்ஸ் நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

## சர்வஜன வாக்கெடுப்புக் குறித்த ஆட்சேபனைக்கு டிசெம்பரில் தீர்ப்பு

வடக்கு - கிழக்குக்கென இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்படுவதற்கு முன்பதாக வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தும்படி உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு சம்பந்தமான பூர்வாங்க ஆட்சேபனையின் மீது தீர்ப்பு வழங்குவது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்தப் பூர்வாங்க ஆட்சேபனையின் மீது டிசெம்பர் 18ஆம் திகதி தீர்ப்பு வழங்கும்.

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அதிகாரப் பரவலாக்கலையும் மீறி அப்பால் செல்கிறது புலிகளின் வரைவு!

## இப்படிக் கூறுகிறார் ஜனாதிபதி

அதிகாரப் பரவலாக்கலையும் மீறி அப்பால் செல்லும் விடயங்களை உள்ளடக்கிய ஆலோசனைகளை விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கிறார்கள் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறினார். ஆயினும், அதிகாரப் பரவலாக்கலே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பதை அவர் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

புலிகளின் ஆலோசனைகளை, தான் இன்னமும் ஆராய்ந்து வருவதாகவும் கட்சித் தலைவர்களுடன் கூடிப் பேசி, ஆலோசனைகள் பற்றிய தனது முடிவான கருத்தை ஓரிரு நாள்களில் வெளியிடுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேல்மாகாண சபையின் புதிய கட்டடத்தை பத்தரமுல்லையில் கடந்த ஞாயிறன்று திறந்துவைத்து ஆற்றிய உரையிலேயே ஜனாதிபதி இவற்றைக் கூறினார்.

அதிகாரப் பரவலாக்கலை விட இப்பிரச்சினைக்கு வேறு தீர்வு இல்லை எனவும் அதற்காக ஆகக்கூடுதலான முயற்சியை மேற்கொள்வதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அங்கு மேலும் கூறியதாவது:-

2001ஆம் ஆண்டுக்குப் பின் அரசு தனது செயற்பாடுகள் மூலம் சகவாழ்வை எடுத்துக்காட்டவில்லை. சகவாழ்வுடன் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து எனது தரப்பில் எந்த ஒரு குறைபாடும் இல்லை. நாடு குறித்த அர்ப்பணிப்புடன் செயற்படமுடியாவிடின் சகவாழ்வு நிலைபெறாது; நாட்டின் தலைவி என்ற முறையில் எனது பொறுப்பைத் தட்டிக்கழிக்கமுடியாது.

நாட்டில் 20 ஆண்டுகளாக யுத்தம் இழுபட்டுச் செல்கிறது. முக்கிய பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு கிட்டவில்லை. அதிகாரப் பரவலாக்கலை விட வேறு தீர்வு இல்லை. நாட்டின் இறைமையும் ஒருமைப்பாடும் காக்கப்படும் விதத்தில் அரசும் புலிகளும் செயற்படவேண்டும்.

நாடாளுமன்றத்திலும், மாகாண சபைகளிலும், உள்ளூராட்சி மன்றங்களிலும் உறுப்பினர்கள் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்துக்கு தாவுகின்றனர். அவ்வாறு தாவிய பலர் இந்த இடத்திலும் இருக்கின்றனர். பணத்துக்காகவோ அல்லது பதவிக்காகவோ அவ்வாறு செய்யக்கூடாது.

20 ஆண்டுகளாக நீடித்த யுத்தத்தை தற்காலிகமாக நிறுத்தி சமாதானத்தைக் கடைப்பிப்பது லேசான காரியமல்ல.

- இவ்வாறு அவர் கூறினார்.

# ஓயாத அலைகள் – 3 சமரின் 4ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு

ஓயாத அலைகள்-3 சமரின் 4ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும் அச்சமரில் வீரகாவியமான சாள்ஸ் அன்ரனிப் படை பிரிவின் சிறப்புத் தளபதி லெப்டினனட் கேணல் ராகவன், தாக்குதல் தளபதி லெப்டினனட் கேணல் நியூட்டன் ஆகியோரின் நினைவு நிகழ்வும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை எழுச்சியுடன் கடைபிடிக்கப்பட்டது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட பாசறை ஒன்றில் போராளி புரட்சி தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை 6.10 மணிக்கு நிகழ்வு ஆரம்பமாகியது. நிகழ்வில் பொதுச்சுடரினை தளபதி செல்வராசா ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக்கொடியை மூத்த தளபதி பொட்டு அம்மான் ஏற்றினார். மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கான ஈகச்சுடரினை மூத்த தளபதி கேணல் பானு ஏற்றிவைத்தார். லெப்.கேணல் ராகவனின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலையை தளபதி அஜந்தி அணிவித்தார். லெப்.கேணல் நியூட்டனின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலையினை தளபதி மாஸ் அணிவித்தார். தொடர்ந்து ஏனைய மாவீரர்களின் திருவுருவப்படங்களிற்கு மலர்மாலைகளை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி லெப்.கேணல் நகுலன் அணிவித்தார்.

தொடர்ந்து போராளிக் கலைஞர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் சிறப்புரைகளை கேணல் பொட்டு அம்மானும், சாள்ஸ் அன்ரனி சிறப்புத் தளபதி லெப். கேணல் நகுலனும் நிகழ்த்தினர். (ஒ-9)

# வீதியில் 'செல்போனில்' பேசியபடி வாகனம் செலுத்தியதால் விபத்து!

யாழ்ப்பாணம்,நவ.4

கையடக்கத்தொலைபேசியில் பேசியபடியே மோட்டார் சைக்கிளைச் செலுத்திய ஒருவர் எதிரே சைக்கிளில் சென்ற வயோதிபர் மீது மோதுண்டார். இந்த விபத்தில் அவர்கள் இருவரும் காயமடைந்தனர். யாழ். பண்ணைப்பாலம் பகுதியில் நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் கையடக்கத் தொலைபேசியில் பேசுவதில் கவனம் செலுத்தியதே விபத்து நேரிடக் காரணம் என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். குடாநாட்டில் தற்போது விபத்து தடுப்பு வாரம் அனுஷ்டிக்கப்படும் நிலையில் இத்தகைய விபத்து நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-15)

# சிரேஷ்ட அமைச்சர்கள் எவரும் புலித்தேவனைச் சந்திக்கவில்லை

## விடுதலைப் புலிகள் மறுப்பு

சிரேஷ்ட அமைச்சர்கள் நால்வர் வவுனியாவில் புலித்தேவனைச் சந்தித்துப் பேசினர் என்று ஊடகங்களில் வெளியாகிய செய்தியை விடுதலைப் புலிகள் மறுத்திருக்கின்றனர். தென்பகுதி ஊடகங்கள் வெளியிட்ட இந்தச் செய்தி நேற்றைய உதயனிலும் பிரசுரமாகியிருந்தது.

இது தொடர்பாக கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகம் அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சிறிலங்கா அரசின் நான்கு மூத்த அமைச்சர்கள் வவுனியாவுக்குச் சென்று விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகச் செயலர் புலித்தேவனுடனும் ஏனைய பிரதிநிதிகளுடனும் இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பாக கலந்துரையாடியதாக ஊடகங்களில் வெளிவந்த செய்தி முற்றிலும் தவறானது.

இடைக்கால நிர்வாக வரைவு கடந்த 31ஆம் திகதியன்று கிளிநொச்சியில் வைத்து தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனால் இலங்கைக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்ட நிகழ்வின்போது, எதிர்காலத்தில் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேச்சுக்களில் புலிகள் பங்குபற்றத் தயாராக இருப்பதாகவும், அதற்கான ஒழுங்குகளை நோர்வே அனுசரணையாளர்களே மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்டிருந்தார்.

இலங்கைத் தீவில் ஒரு நிரந்தரமான அமைதித் தீர்வை ஏற்படுத்துவதற்காக தொடர்ச்சியாக பாடுபட்டுக் கொண்டிருக்கும் நோர்வே அரசின் முயற்சிகளில் விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் பூரண திருப்தியும் நம்பிக்கையும் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் முற்றிலும் பொய்யான செய்திகள் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக வெளிவருவது தமிழ் மக்களையும் நோர்வே அனுசரணையாளர்களையும் சர்வதேச சமூகத்தையும் முற்றிலும் குழப்பத்தில் ஆழ்த்திவிடுவதற்கே துணைபுரியும்.

எதிர்காலத்தில் இடம்பெறும் எந்த விதமான சமாதானப் பேச்சுக்களும் நோர்வே அனுசரணையாளர்களின் பூரண ஆதரவோடும் ஒத்துழைப்போடும் இடம்பெறவேண்டும் என்பதே புலிகளினதும் தமிழ் மக்களினதும் முழுமையான விருப்பமும் நிலைப்பாடும்.

இனப்பிரச்சினைக்கான பேச்சுக்கள், தீர்வு முயற்சிகள் எதுவுமே அனுசரணையாளர்களுடனானதாகவும் அதிகாரபூர்வமானதாகவும் வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும் இருக்கும் என்பதை தெளிவாக முன்வைக்கிறோம். ஊடகங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் இதுபோன்ற உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிட்டு அனைவரையும் குழப்பத்தில் ஆழ்த்துவதையும் நம்பிக்கையைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் நாம் கண்டிப்பதோடு எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகளை தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஒரே இரவில் 4 வீடுகளில் திருட்டு!

மீசாலை கிழக்குப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நான்கு வடுகளில் பல லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் உட்பட பெறுமதியான பொருள்களும் திருடப்பட்டமை தொடர்பாக ஒருவரை சாவகச்சேரி பொலீஸார் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளனர்.

பொதுமக்கள் கொடுத்த தகவலை அடுத்து பொலீஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ.எரிக் றோகித தலைமையிலான பொலீஸ் குழு இந்த நபரைக் கைது செய்துள்ளது.

இந்த நபரிடமிருந்து மூன்று லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை மீட்டுள்ளதாகவும் -

இந்த நபர் ஏற்கனவே 16 திருட்டுக்கள் தொடர்பாக தேடப்பட்டு வந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இத்திருட்டுடன் தொடர்புடைய மேலும் மூவரை பொலீஸார் தேடிவருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு சைக்கிள் செயினை மின்விநியோகக் கேபிள்கள் மீது எறிந்து மின் தடையை ஏற்படுத்தி மீசாலை கிழக்கில் ஒரே வீதியில் நானகு வீடுகளில் திருட்டுக்கள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## பனம்விதைகள் நடும்விழா

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கற்பகச்சோலைத் திட்டத்தின் கீழான பனம்விதைகள் நடும் விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கைதடி மேற்கு ஊரியானில் சங்கத் தலைவர் மா.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலாளர் எஸ்.ஸ்ரீனிவாசன், பனைஅபிவிருத்திச் சபைத் தலைவர் பொ.சிவபாதம் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர். (ஒ-75)

## கலந்துரையாடல்கள்

பயணிகள் விடுதி நடத்தும் உரிமையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு பொற்பதி வீதியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் விடுதி நடத்தும் உரிமையாளர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் கேட்டுள்ளார். (எ-5)

★ ★ ★

யாழ். மாவட்டத்தில் உள்ள சுகாதாரத் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன் கிழமை பிற்பகல் 2மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல சுகாதாரத் தொண்டர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சுகாதாரத் தொண்டர் சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார். (எ-10)

# புலிகளின் வரைவை நிராகரிக்கும்படி சு.கவுக்கு ஜே.வி.பி. வற்புறுத்தல்!

கொழும்பு,நவ.4

புலிகளின் இடைக்கால நிர்வாக வரைவை முற்றாக நிராகரிக்கும்படி சுதந்திரக் கட்சியை ஜே.வி.பி. தொடர்ந்து வற்புறுத்தி வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்குழுவையும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுவையும் ஜனாதிபதி அவசர அவசரமாகக் கூட்டியுள்ளார்.

பொ.ஐ.முன்னணியின் செயற்குழுக் கூட்டம் நேற்று மாலை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது. பொ.ஐ.மு. நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்று மாலை ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும்.

கடந்த 2ஆம், 3ஆம் திகதிகளில் சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையில் நடைபெற்ற பேச்சுக்களிலேயே புலிகளின் வரைவை முற்றாக நிராகரிக்கும்படி ஜே.வி.பியினர் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, பொ.ஐ.முன்னணியில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக் கட்சி கம்யூனிஸ்ட் கட்சி என்பன புலிகளின் வரைவை வரவேற்றுள்ளன.

சுதந்திரக் கட்சி, வரைவு தொடர்பான தனது நிலைப்பாட்டை இன்றைய கூட்டத்தின் பின்னர் வெளியிடுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ)

# அனைத்து முஸ்லிம் எம்.பிக்களையும் சந்தித்து ஹக்கீம் ஆராய்வார்!

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக வரைவு குறித்து மு.கா. தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் முஸ்லிம் எம்.பிககளைச் சந்தித்து ஆராயவுள்ளார். இச்சந்திப்பு நாடாளுமன்றம் கூடவுள்ள எதிர்வரும் 6ஆம் திகதி அல்லது 7ஆம் திகதி நடைபெறுமென முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இதேவேளை, சிறுபான்மையினரின் அதிகார அலகுகள் குறித்து ஆராயவென பிரிட்டன் சென்றிருந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழு நேற்று மாலை நாடு திரும்பியது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் அதி உயர் பீடமும் இவ்வாரம் கூடி புலிகளின் இடைக்கால நிர்வாக வரைவு குறித்து ஆழமாக ஆராயவுள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ)

# கற்பிட்டியில் இன்று ஹர்த்தால்: மீனவர் போராட்டம் தீவிரமடையும்

கற்பிட்டி,நவ.4

கற்பிட்டியில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவிருப்பதாகவும் மீனவர் சுழற்சிமுறை உண்ணாவிரதப் போராட்டம சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டமாக இன்றுமுதல் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் 'லைலா' வலை மீன்பிடித் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சுழற்சி உண்ணாவிரதப் போராட்டம் கற்பிட்டிப் பிரதேச சபைக்கு முன்னால் நேற்று ஆறாவது நாளாகத் தொடர்ந்தது.

'லைலா' வலைத் தடையை நீக்கக் கோரி நடைபெறும் இப்போராட்டத்திற்கு கற்பிட்டிப் பகுதியில் உள்ள சின்னக்குடியிருப்பு, பெரிய குடியிருப்பு, வன்னிமுந்தல், ஆனவாசல் மற்றும் உச்சமுனை - டச்வே போன்ற இடங்களில் உள்ள மீனவ சங்கங்கள், இஸ்லாமிய இளைஞர் நலன்புரி ஒன்றியம், சமூக அபிவிருத்தி நலன்புரிச் சங்கம், வர்த்தக சங்கம் ஆகியன ஆதரவு வழங்கியுள்ளன.

# லண்டன் வீதி ஒன்றில் வைத்து தமிழ் இளைஞர் வெட்டிக்கொலை!

லண்டன்,நவ.4

லண்டன் வீதி ஒன்றில் வைத்து இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் கோடரியால் வெட்டிக்கொல்லப்பட்டார்.

அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் திருக்குமார் சோதிலிங்கம் (வயது-28) என்ற இளைஞரே கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டு உயிரிழந்தவராவார். அவருடன் கூடச்சென்ற மூன்று நண்பர்களும் இந்தக் கும்பலினால் தாக்கப்பட்டனர்.

உயிரிழந்த சோதிலிங்கம், அவரது சகோதரியுடன் கடந்த சுமார் 12 வருடங்களாக லண்டனில் வசித்து வந்ததாகவும் -

அவர் 'வைன்' உற்பத்தி நிறுவனமொன்றின் விநியோகஸ்தராக பணி புரிந்து வந்தவர் என்றும் -

தெரிவிக்கப்பட்டது.

இவர் கொல்லப்பட்டமைக்கு காரணம் தெரியவில்லை எனவும் கூறப்பட்டது. (ஒ-9)

# கொரிய மருத்துவக் குழுவின் இலவச சேவை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.4

கொரிய தூதரதகத்தின் அனுசரணையுடன் யாழ்.மக்களுக்கு இலவச மருத்துவ சேவையினை வழங்குவதற்கென 'கொம்ஸ்ரா' அமைப்பின் ஏற்பாட்டில் கொரிய நாட்டின் தேசிய வைத்திய நிபுணர்கள் 30 பேர் அடங்கிய குழுவொன்று நேற்று யாழ். வந்தது.

இக்குழுவுடன் ஆயுர்வேத திணைக்களத்தின் ஆணையாளர் அசோகா மலிமகே, செயலாளர் ஏ.எம்.சந்திரபால ஆகியோரும் வந்துள்ளனர்.

இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் இக்குழுவினரின் இலவச சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளது.

பாரிசவாதம், முதுகுத்தண்டு நோய்கள், மூட்டுவலி, கழுத்துவலி, நாரிப்பிடிப்பு, உயர் குருதி அழுத்தம், சலரோகம், மன அழுத்தம், நுரையீரல் சம்பந்தமாக நோய்கள் உட்பட பல விதமான நோய்களுக்கு இக்குழுவினர் சிகிச்சைகளை வழங்கவுள்ளனர்.

இம்மருத்துவ முகாமில் கலந்துகொள்வதற்கு பதிவினை மேற்கொண்டவர்கள் தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-8)

# ஆறுமுக நாவலர் குருபூசை தின கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ். சைவ பரிபாலன சபையினரால் வருடந்தோறும் நடத்தப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை சார்பான கட்டுரை, பேச்சுப் போட்டிகள் இம்முறையும் வழமைபோல் நடைபெறவுள்ளன.

கட்டுரைப்போட்டியில் தரம் 12, 13 ஆகிய வகுப்பு மாணவர்கள் பங்குபற்றமுடியும்.

பேச்சுப்போட்டி கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வீழ்த்தப்பட்ட ஹெலியின் சிதறல்களுடன் ஈராக்கியர்கள் வீதியில் மகிழ்ச்சி ஆரவாரம்!

## அமெரிக்கா முழுவதும் சோகமயம்!!

பக்தாத்,நவ.4

வீழ்த்தப்பட்ட அமெரிக்க ஹெலியின் சிதறிய துண்டுகளைத் தூக்கிக் காட்டியவாறு ஈராக்கியர்கள் வீதிகளில் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர். ஆனால், ஹெலி வீழ்த்தப்பட்டதால் அமெரிக்கா முழுவதும் சோகமயமாக இருக்கிறது.

நேற்றுமுன்தினம் தலைநகர் பக்தாத்தில் இருந்து 70 கி.மீ. தூரத்தில் உள்ள பலூஜா நகரில் ஹெலி வீழ்த்தப்பட்டது. ஈராக்கில் இருந்து விடுமுறையில் சென்ற 36 படையினரை ஏற்றிச் சென்ற 'சின்னூக்' ரக ஹெலியே சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில் 18 பேர் உயிரிழந்தனர் 17 பேர் காயமடைந்தனர்.

பேரீச்சம்பழ மரங்களின் தோப்புக்குள் பதுங்கியிருந்த கெரில்லாக்களே ஹெலியை ஏவுகணை மூலம் சுட்டுவழ்த்தினர் என்று அமெரிக்க இராணுவத் தலைமை அறிவித்துள்ளது.

ஹெலியின் பின்பகுதியை ஏவுகணை தாக்கியவுடன் அதிலிருந்து கரும்புகை கக்கியது. சில விநாடிகளுக்குள்ளேயே அது வழ்ந்து நொறுக்கிவிட்டது.

பக்தாத் சர்வதேச விமான நிலையத்திற்கு 50 படையினரை இரண்டு 'சின்னூக்' ரக ஹெலிகள் ஏற்றிச் சென்றன. அவற்றில் ஒன்றே கெரில்லாக்களின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்கானது.

ஹெலி சுட்டுவீழ்த்தப்பட்டதும் அவ்விடத்தை அமெரிக்கப் படையினர் சூழ்ந்து கொண்டனர். அங்கிருந்து காயமடைந்த படையினர் அனைவரும் இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். கொல்லப்பட்ட படையினரின் சடலங்கள் பக்தாத் விமான நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

ஹெலி வீழ்ந்த இடத்திலிருந்து படையினர் அகன்றதும், அங்கு நூற்றுக் கணக்கான ஈராக்கியர்கள் குழுமினர். வீழ்த்தப்பட்ட ஹெலியின் சிதறல்களைக் கையில் தூக்கி வைத்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். வீதிகளில் ஆரவாரம் செய்தனர்.

'பேராசை பிடித்த ஆக்கிரமிப்பாளருக்கு இது நல்ல பாடம். ஈராக்கை விட்டு அவர்கள் வெளியேறும் வரை இவ்வகையான தாக்குதலுக்கு முகம் கொடுக்க நேரிடும்' - என்று ஈராக்கிய ஒருவர் தெரிவித்தார்.

அதேநேரம், அமெரிக்கா முழுவதும் சோகத்தில் மூழ்கியுள்ளது. அரச அலுவலகங்களில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கிறது. சம்பவத்தில் கொல்லப்பட்ட படையினருக்கு பிரார்த்தனை நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் இது குறித்துக் கூறுகையில்:-

நீண்டதும், கொடூரமானதுமான போரில் இவ்வாறான துக்கரமான சம்பவங்களைச் சந்திக்க நேரிடலாம். ஆனால், அதற்காக சளைத்துவிடக்கூடாது.

- இவ்வாறான சம்பவங்களே தீவரவாதத்திற்கு எதிரான போரை மூர்க்கமுடன் முன்னெடுக்க உதவும்.

ஈராக்கில் தற்போது சிக்கல் மிக்க சண்டை நடக்கிறது. வெளிநாடுகளில் இருந்து தீவரவாதிகள் ஈராக்கினுள் நுழைந்துள்ளனர். அவர்களே சண்டையை தீவிரமாக்கியுள்ளனர்.



ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்ட இடத்தில் தேடுதல் பணியில் ஈடுபடும் அமெரிக்கப் படையினர்.

குறிப்பாக சிரியா, ஈரான் ஆகிய பகுதிகளுக்கு ஊடாகவே தீவிரவாதிகள் ஈராக்கினுள் ஊடுருவுகின்றனர். எனவே, மேற்படி இரு நாடுகளும் ஈராக்குடனான தமது எல்லையை உடன்மூட வேண்டும்.

சுதந்திரத்தின் எதிரிகள் எமது படையினரைக் கொல்வதற்கு நவீனமயமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றனர் - என்றார்.

அமெரிக்கப் படையினருக்கு எதிராக தாக்குதல்கள் அதிகரித்திருப்பதையடுத்து படையினர் விரக்தியுற்றுள்ளனர். இதனைச் சமாளிக்கும் விதத்தில் படையினருக்கு வழங்கப்படும் விடுமுறை நாள்கள் அதிகரிக்க பென்ரகன் தீர்மானித்திருக்கிறது. அத்துடன் அவர்களுக்கு பொழுது போக்கு அம்சங்கள் அதிகரிக்கவும் பென்ரகன் தீர்மானித்திருக்கிறது.

ஈராக்கில் இருந்து தற்போது தினமும் 280 படையினர் விடுமுறைக்காக அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகின்றனர். இனிமேல், தினமும் 480 பேரை விடுமுறையில் அமெரிக்காவுக்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஈராக் போர் முடிந்துவிட்டது என்று ஜனாதிபதி புஷ் கடந்த மே முதலாம் திகதி அறிவித்த பின்னர் இதுவரை 139 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். போர் ஆரம்பமான நாள் முதல் இன்றுவரை 380 அமெரிக்க மீட்புப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

பக்தாத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள சந்தை ஒன்றுக்குச் சென்ற படையினர் மக்களுடன் மோதலில் ஈடுபட்டனர். சந்தையைவிட்டு அனைவரையும் வெளியேறுமாறு படையினர் கோரினர். ஆனால், மக்கள் அங்கிருந்து வெளியேற மறுத்தனர்.

இச்சமயத்தில் படையினர் மீது கிரனேட் ஒன்று வீசப்பட்டது. படையினர் பதிலுக்கு துப்பாக்கிச் சூடு நடத்தினர். இச்சம்பவத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து தெரியவரவில்லை.

மேற்படி சம்பவம் நடந்து சில மணி நேரங்களுக்குள் பக்தாத்தில் அமெரிக்கப் படைவீரர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். பலூஜாவில் பொறியியல் பிரிவில் கடமையாற்றி வந்த இரண்டு அமெரிக்கப் படையினர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

## 'மொபைல் போன்' வெடித்து தாய்லாந்தில் ஒருவர் காயம்!

தாய்லாந்தில் மொபைல்போன் வெடித்துச் சிதறியதால் ஒருவர் காயமடைந்தார்.

கதவைத் திறப்பதற்காக ரிமோட் கொன்ரோல் என நினைத்து தவறுதலாக மொபைல் போனை பயன்படுத்தியதால் அது வெடித்துச் சிதறியது.

இது குறித்து காயமடைந்தவர் தெரிவிக்கையில்.

நான் என்னுடைய வீட்டின் முன் கதவைத் திறப்பதற்கு 'ரிமோட் கொன ரோலை' இயக்கினேன். கதவு மிக அருகில் இருந்தும் அது திறக்கவில்லை. கதவு திறக்காததால் பட்டரி முடிந்திருக்கலாம் என்று கருதி மீண்டும் மீண்டும் இயக்கிப்பார்த்தேன்.

அப்போது திடீரென்று என்கையில் இருந்த மொபைல்போன் வெடித்துச் சிதறியது. அப்போது தான் தெரிந்தது, நான் இயக்கியது ரிமோட் கொன்ரோல் அல்ல மொபைல் போன் என்று.

போன் வெடித்த போது நான் கையில் உறை அணிந்திருந்ததால் அது என் கைகளில் சிறிய காயத்தை மட்டுமே ஏற்படுத்தியது நல்ல வேளை போன் வெடிக்கும் போது அதை நான கன்னத்தில் வைத்து பேசிக கொண்டிருக்கவில்லை. வெடித்துச் சிதறிய

### உலக அரங்கில்

மொபைல் போனின் துகள்கள் மூன்று மீற்றர் சுற்றளவுக்கு சிதறிக் கிடந்தன. போன் வெடித்ததற்குக் காரணம், நான் லோக்கல் பட்டரியைப் பயன்படுத்தியதாக இருக்கலாம் - என்றார்.

அண்மையில் தான் இவர் தனது போனுக்கு புதிய பட்டரி வாங்கிப் பொருத்தினாராம். பட்டரி விலை அதிகமாக இருந்ததால் மலிவு விலைக்கு கிடைத்த பட்டரியை வாங்கித் தனது போனின் பொருத்தியுள்ளார். அது தான் போன் வெடித்ததற்கு காரணம் என்று செல்போன் நிறுவனம் விளக்கம் அளித்திருக்கிறது. (ஐ)

# சுற்றுலாப் பயணிகள் 75 பேரை வெள்ளம் அள்ளிச் சென்றது!

## 66 சடலங்கள் மீட்பு; இந்தோனேஷியாவில் பரிதாபம்

இந்தோனேஷியாவில் சுற்றுலாப் பயணிகள் 75 பேர் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டனர்.

இவர்களில் 66 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும், பலரைக் காணவில்லை என்று கூறப்படுகிறது.

சுமத்திரா தீவில் சுற்றுலாப் பயணிகளின் பூங்கா ஒன்றில் நேற்றுமுன்தினம் மாலை இந்த அனர்த்தம் நடந்தது. அங்குபெய்த பெரும் மழையால ஆறுகள், குளங்கள் உடைப்பெடுத்து நகருக்குள் பாய்ந்த வண்ணமுள்ளன.

சுமத்திரா தீவிலுள்ள 'ஓம்குட்டான்' என்ற ஒதுக்குப்புற பகுதியை பார்வையிடுவதற்காக ஆற்றங்கரையொன்றில் அமைந்திருந்த பூங்காவொன்றில் தற்காலிக குடிசைகளை அமைத்து தங்கியிருந்தவர்களே வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.

"அங்கிருந்த ஆறு திடீரென பெருக்கு எடுத்ததும் செய்வதறியாது நின்ற சுற்றுலாப்பயணிகள் அப்படியே வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்"- என்று பூங்காவில் இருந்து உயிர் தப்பிய ஒருவர் தெரிவித்துள்ளார். மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இறந்தவர்களில் ஒருவர் ஜேர்மனியர், ஒருவர் ஆஸ்திரேலியர், இருவர் சீனர், ஒருவர் சிங்கப்பூர் பிரஜை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இறந்தவர்களின் உடல்கள் அங்குள்ள பள்ளிவாசல் ஒன்றின் முன்பாக போடப்பட்டுள்ளன. சடலங்களை அடையாளம் காண்பதற்காக அங்கு பெருமளவானோர் கூடியுள்ளனர்.

வெள்ளப்பெருக்கு நகர்களுக்கு பரவாமல் இருக்க பொலீஸார் மரக்குற்றிகளைப் போட்டு வீதிகளில் தடை ஏற்படுத்தியுள்ளனர். (ஐ)

# விநாயகரை இழிவுபடுத்தி அமெரிக்காவில் புத்தகம்!

ஹூஸ்டன்,நவ.4

புத்தகம் ஒன்றின் அட்டையில விநாயகரை இழிவுபடுத்தும் வகையில் நிர்வாணத் தோற்றத்துடன் விநாயகர் படம் அச்சிடப்பட்டுள்ளது. இதற்கு அங்குள்ள இந்துக்கள் கடும் ஆட்சேபனை தெரிவித்தன்னர்.

ஹூஸ்டன் பகுதியிலுள்ள எமர் பல்கலைக்கழகப் பேராசிரியரான போல் கோர்ட்ரைட் என்பவரே இந்தப் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்.

'வினைதீர்க்கும் விநாயகர்' என்று இப்புத்தகத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது. இதன் அட்டையில் நிர்வாண நிலையில் விநாயகர் அமர்ந்திருக்கும் படம் அச்சிடப்பட்டுள்ளது. புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் விடயங்கள் அர்த்த மற்றவையாகவும் இந்துக்களின் மனதைப் புண்படுத்தும் வகையிலும் உள்ளன என்று அங்குள்ள இந்துக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் இப்புத்தகத்திற்கு தடை விதிக்கக்கோரி இந்துமத அறிஞர்கள் கையெழுத்து வேட்டையை ஆரம்பித்திருக்கின்றனர். (ஐ)

# 116 வயது மூதாட்டி ஜப்பானில் மரணம்!

## மூன்று நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்

டோக்கியோ,நவ.4

ஜப்பானைச் சேர்ந்த உலகின் மிகவும் வயதான மூதாட்டி கமோடோ ஹோங்கோ தனது 116 ஆவது வயதில் கடந்த 31 ஆம் திகதி காலமானார்.

உலகின் மிகவும் வயதான பெணமணியான இவர் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றிருக்கிறார். இதற்கு முன்பு உலகின் வயதானவராக இருந்த அமெரிக்காவின் 115 வயது மூதாட்டி மௌட் பாரிஸ் - லூஸ் கடந்த மார்ச் மாதம் காலமானார். அதையடுத்து ஜப்பான் மூதாட்டி கின்னஸ் சாதனைப்புத்தகத்தில் இடம்பிடித்தார்.

இவர் தொடர்ந்து இரண்டு நாள்களுக்குத் தூங்குவார். தொடர்ந்து இரண்டு நாள்கள் தூங்காமல் விழித்திருப்பார். இதனால் இவரது புகழ் ஜப்பானில் மட்டுமன்றி உலகம் முழுவதும் பரவியிருந்தது.

தெற்கு ஜப்பானில் உள்ள சிறிய தீவில் 1887 இல் பிறந்த இவர் உருளைக் கிழங்கு விவசாயம் செய்து வந்தார்.

இவர் இறந்ததை அடுத்து உலகிலேயே அதிக வயதான மனிதர் என்ற பெருமை ஜப்பானைச் சேர்ந்த 114 வயது யூகிசி சுகஞ்கீக்கு கிடைத்திருக்கிறது.

உலகிலேயே மிகவும் அதிக ஆயுளைக் கொண்டவர்கள் ஜப்பானியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஜப்பான் ஆண்களின் சராசரி ஆயுள் காலம் 85 ஆண்டுகள். பெண்களின் ஆயுள் காலம் 78 ஆண்டுகள்.

ஜப்பானில் இந்த ஆண்டு வயதானவர்கள் நாள் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் பொது விடுமுறை விடப்பட்டது. அப்போது எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 24 கோடி பேர் 65 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது. இது ஜப்பானிய மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்காகும்.

அதேநேரத்தில் ஜப்பானில் பிறப்பு விகிதம் 1.32 ஆகக் குறைந்துள்ளது. இதன் மூலம் ஜப்பான் பெண்கள் குழந்தை பெற்றுக்கொள்வதை விட தங்களது உடல் நிலை முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவது தெரிய வந்துள்ளது.

(ஐ)

போஸ் காகிதாதியாளர்கள்
3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நிச்சயமாக திருமணங்கள் சொர்க்கத்தில் தான் நிச்சயிக்கப்படுகின்றன
உங்கள் அழைப்பிதழ்கள் அதனை நிரூபிக்கட்டும்

திருமண அழைப்பிதழ்கள்

போஸ்கோ ஆட்ரோன் பிரிண்டேர்ஸ்,
252, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.



## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:- 196, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (24392)

### வீடு வாடகைக்கு

தட்டாதெரு, அரசடி ஒழுங்கையில் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு:- 74, தாளைக்காடு லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (24390)

### காணி விற்பனைக்கு

நக்காறோட், நக்கா ஒழுங்கையில 3½ பரப்புக்காணி பயன்தரு மரங்களுடன், கிணறு, குளியல் அறையுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ப.தேவகுமார், மூளாய் வீதி, மாவடிச்சந்தி. T.P.: 077 6143541. (சி-31019)

### சேவை

அமெரிக்காவில் சட்டபூர்வமாக உழைக்கவாழ Green Card Lottery இல் பங்குபற்றுங்கள். விவரங்களுக்கு 0777 871617 தொலைபேசி எண்ணிற்கு அழையுங்கள்.

பாலா
தெஹிவளை.
(24196) (24-25-12)


## வலுவூட்டல் பயிற்சி வகுப்பு

சண்டிலிப்பாய்,நவ.4

தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் கமக்காரர் அமைப்பிற்கான வலுவூட்டல் பயிற்சி வகுப்பு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் விவசாயம், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் வங்கி ஆகியன தொடர்பான விடயங்களில் துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவார்கள்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்து பயன்பெறுமாறு இப்பிரிவு கமக்காரர் அமைப்புகளை தொல்புரம் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.

(எ-135)

## கால்நடை பராமரிப்பு குறித்து பயிற்சி

வலி.தெற்கு,நவ.4

திருநெல்வேலியிலுள்ள விவசாய கால் நடைபயிற்சிப் பாடசாலையில் 'கன்று பராமரிப்பு' பற்றிய பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு மாதமும் முதலாம், நான்காம் வாரங்களில் ஒருநாள் இப் பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகின்றது.

கால்நடை மாகாணப் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய கால்நடை வைத்தியர்களால் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்பில் கால்நடை வளர்ப்போர் கலந்து கொண்டு கன்று பராமரிப்பு முறைகள் பற்றி அறிந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(எ-152)

## சான்றிதழ் பெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில 2001 ஆம் ஆண்டு பயிற்சிநெறிகளைப் பூர்த்திசெய்து கொண்டவர்களுக்கான சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் -

உரியவர்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் - தொழில்நுட்பக் கல்லூரி பதிவாளர் அறிவித்துள்ளார்.

தொழில்நுட்பக்கல்லூரிப் பயிற்சித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தச் சான்றிதழ்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

## பசுவும் கன்றும் ஏலத்தில் விற்பனை

தென்மராட்சி,நவ.4

சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு ஒன்றில் சான்றுப் பொருள்களாக பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்ட பசுமாட்டையும் கன்றையும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யுமாறு நீதி மன்றப் பதிவாளரை பணித்துள்ளார்.

இந்தப் பசுவும் கன்றும் நாளை புதன்கிழமை காலை 11.00மணிக்கு சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படுமென நீதிமன்றப் பதிவாளர் செ.விக்கினேஸ்வரமூர்த்தி அறிவித்துள்ளார்.

(ஒ-117)

# வவுனியா, மன்னார் மாவட்டங்களில் ரூ.5 கோடி செலவில் மின்வழங்கும் பணி

## விரைவில் ஆரம்பம் என அறிவிப்பு

வவுனியா,நவ.4

தீபலோக மின்வழங்கல் திட்டத்தின் கீழ் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் 5 கோடியே 70 லட்சம் ரூபா செலவில் மின்வழங்கல் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவின் பணிப்பின் பேரில் இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்மூலம் மன்னார் மாவட்டத்தில் ஆயிரம் குடும்பங்களும், வவுனியா மாவட்டத்தில் 750 குடும்பங்களும் பயனடையவுள்ளன.

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, மின்சக்தி எரிபொருள் பிரதி அமைச்சர் சாகர ரத்னாயக்க ஆகியோரினால் இத்திட்டங்கள் விரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன என்று புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மன்னார் மாவட்டத்தில் பாவிலுபாட்டான்குடியிருப்பு, பெரிய பண்டிவிரிச்சான், உமாநகரி, கோவிந்தன்குளம், கட்டுக்கரை குடியிருப்பு, ஊறுத்தொடுவாய், சின்னப் பண்டிவிரிச்சான், வட்டபித்தன்மடு ஆகிய பிரதேசங்களும் -

வவுனியா மாவட்டத்தில் கிடச்சேரி, குகன்நகர், பம்பைமடு, பொன்னாவரசன்குளம், பெரியகுளம், நேரியகுளம், கப்பச்சி ஆகிய கிராமங்களும் மின் வசதி பெறவுள்ளன.

(எ-10)

# பத்து மாத காலப்பகுதியில் 929 வாகனங்கள் கடத்தல்

கடந்த பத்துமாத காலப்பகுதியில் நாடு முழுவதிலும் 929 வாகனங்கள் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளன என பொலீஸ் தலைமையகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

இவ்வாறு கடத்தப்பட்ட வாகனங்களுள் பஜிரோ, இன்ரகூலர், பிராடோ மற்றும் சுப்பர் கஸ்டம் ஆகிய சொகுசு வாகனங்களும் அடங்குகின்றன.

ஆயுதம் தரித்த குழுக்கள் மற்றும் கொள்ளையர்களால் இந்தக் கடத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொள்ளையிடப்பட்ட 140 சொகுசு வாகனங்களில் 88 வாகனங்கள் குறித்து தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை.

இவற்றுள் சில வாகனங்கள் சாரதியுடன் கடத்திச் செல்லப்பட்டுப் பின்னர் சாரதிகள் கொலை செய்யப்பட்டுள்ளனர். சில வாகனங்களின் சாரதிகள் கொள்ளையர்களால் தாக்கப்பட்டு அவர்கள் வெளியே தூக்கி எறியப்பட்ட பின்னர் கடத்தப்பட்டுள்ளனர்.

வாகனக் கொள்ளைகள் அதிகரிப்பதால் பொலீஸாருக்கு மட்டும் தொல்லையாக அமையவில்லை. காப்புறுதி நிறுவனங்களும் இதனால் சிரமங்களை எதிர்நோக்குகின்றன.

பாதாள உலகக் கும்பல்களாலும் வாகனங்கள் இவ்வாறு கடத்தப்படுகின்றன. அத்துடன், மேற்படி கும்பல்களால் மேற்கொள்ளப்படும் கொலைகள் மற்றும் கொள்ளைகளின்போது இவ்வாறு கடத்தப்பட்ட வாகனங்களே பயன்படுத்தப்படுகின்றன.

கடந்த 10மாதங்களில் 206 முச்சக் கரவண்டிகள், 495 மோட்டார் சைக்கிள்கள், 39லொறிகள், 24கார்கள், 3வான்கள், 7ஜீப்கள், 14 உழவு இயந்திரங்களும் இவ்வாறு கடத்தப்பட்டுள்ளன - என்று தெரிவிக்கப்பட்டது.

(எ)


## 'குலம் கிறீம் ஹவுஸ்' ஸ்தாபனம் மூடும் அறிவித்தல

யாழ்ப்பாணம், இல.226, ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வந்த எமது "குலம் கிறீம் ஹவுஸ்" என்னும் வியாபார ஸ்தாபனத்தை 31.10.2003ஆம் திகதியுடன், மூடிவிட்டோம் என்பதை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

ஆலடிச்சந்தி,
மானிப்பாய். (24387)(35-12-15)

உரிமையாளர்
திருமதி குலசிங்கம் செல்வராணி

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அகில உலக அஞ்சல் தினத்தையொட்டி அஞ்சல் திணைக்களத்தால் நடத்தப்பட்ட சிறந்த அஞ்சலகத்திற்கான பிராந்திய ரீதியிலான தெரிவில் கைதடி அஞ்சலகமும், சிறந்த அஞ்சல் அதிபர் தரம் II இல் கைதடி அஞ்சல் அதிபர்

### திரு. சிற்றம்பலம் அம்பலவாணபிள்ளை

அவர்கள் தெரிவுசெய்யப்பட்டமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன், மேன்மேலும் இவரின் பணி சிறந்து உயர்வுபெற இறையாசிவேண்டி வாழ்த்துகிறோம்.

அஞ்சலகம்,
கைதடி. (24386) (25-12)

உதவி தபாலதிபரும்,
உப அஞ்சலதிபர்களும்,
ஊழியர்களும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட வ.பி.போ.ச. சிரேஷ்ட சாலைப் பரிசோதகரும் தேசிய ஊழியர் சங்க அமைப்பாளரும் சிவசிகளரி சனசமூக நிலைய முன்னாள் தலைவரும் சிறந்த சமூகசேவையாளருமாகிய

### செல்வரத்தினம் செல்வராசா

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையையிட்டு அவரை நாம் மகிழ்ச்சியோடு பாராட்டுகின்றோம்.

எமது ஆலய வளர்ச்சிக்கும் திருப்பணி வேலைகளுக்கும் கடற்றொழிலாளர்களின் முன்னேற்றத்துக்கும் உதவி, மக்களது தேவைகளை உணர்ந்து சேவையாற்றும் திறனும் தொடர்ந்து சமூகசேவைகள் செய்திட எல்லாம்வல்ல இறைவன் திருவருட் கடாட்சம் அவருக்குக் கிடைக்கவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

(24384) (26-12-25)

ஐயனார் ஆலய பரிபாலன சபை
சுழிபுரம்.

## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

### சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AB/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567

(சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-33408)(24-13-16)

## கண்ணீர் அஞ்சலி

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மனைப் பொருளியல் ஆசிரியர் திருமதி சிவச்செல்வமணி சிவநேசன் அவர்களது அன்புத் தந்தையார்

### நாகலிங்கம் செல்லையா

அவர்களது மறைவு குறித்து துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

கரவெட்டி. (24394) (34-14-17) - கல்லூரிச் சமூகம்.

## நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### சின்னத்தம்பி கதிர்காமநாதன்

(தமிழீழ காவல்துறையின் தலைமைக் காவலர்)

ஒளிதருள் மாணிக்கமாய் மாண்புடன் மாநிலத்தில் திகழ்ந்தீர்
ஒளிதருள் ஒருவராய் போற்றுகின்றோம் உம்மை நெஞ்சினில் வைத்து
ஆத்மசாந்திக்காய் ஆண்டவனை வேண்டுகிறோம்.

இன்று (04.11.2003) செவ்வாய்க்கிழமை நடைபெறுகின்ற அந்தியேட்டிக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து (06.11.2003) வியாழக்கிழமை அன்னாரின் மல்லாவி இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி கதிர்காமநாதன்,
அனிஞ்சியன்குளம்,
மல்லாவி. (26-14-17)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(C/31112)

## துயர் பகிர்கின்றோம்



எமது அன்பிற்கும் மதிப்புக்குமுரியவரான

### முத்து சின்னத்துரை

அவர்களின் மறைவையிட்டு துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

6A, கனால் லேன்,
வெள்ளவத்தை, கொழும்பு-6. (24389)(12-15-25) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### முத்து சின்னத்துரை

குருவீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்து சின்னத்துரை அவர்கள் 02.11.2003 ஞாயிறுக்கிழமை மாலை கொழும்பில் இறைபதமடைந்தார்.

அன்னார் முத்து - நாகமுத்து ஆகியோரின் அன்பு மகனும் பண்டிதர் மகாலிங்கசிவம் - அன்னமுத்து ஆகியோரின் அருமை மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் புவனராணி, சாந்தி, நிர்மலா, சிவபாலன், உமைபாலன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும் காலஞ்சென்ற வைரவப்பிள்ளை, செல்லையா மற்றும் செல்லம்மா காலஞ்சென்ற முருகுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் புலவர் ம.பார்வதிநாதசிவம், காலஞ்சென்ற பிரபாவதி ஆகியோரின அன்பு மைத்துனரும் கணேசமூர்த்தி (வர்த்தக வங்கி), காலஞ்சென்ற சுரேந்திரன் மற்றும் ஜெகதீஸ்வரன், இந்துமதி, சாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜபதி, இமயவன், தினேஷ், கோபிநாத், கஸ்தூரி, அபிராமி, சந்தோஷ், ஜனிக்கன், ஆர்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.11.2003) செவ்வாய் கல்கிசை, மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (05.11.2003) புதன் காலை 10.00 மணியளவில் இறுதிக்கிரியைகளின் பின்னர் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கா.கணேசமூர்த்தி,
6A, கனால் லேன்,
வெள்ளவத்தை, கொழும்பு.06.

தகவல்:
மக்கள், மருமக்கள்.

(24389) (34-12-15)

உதயன்

## அரசியல் சூட்டுக்கு மத்தியில் வெளிநாட்டுப் பயணங்கள்

தென்னிலங்கை அரசியல், அளவுக்கு அதிகமாகவே சூடு பிடித்திருக்கின்றது. எத்தகைய திருப்பங்களும் - அதிரடி மாற்றங்களும் - எந்நேரமும் நிகழலாம் என்ற நிலைமை.

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக புலிகள் சமர்ப்பித்துள்ள -'இடைக்கால தன்னாட்சி அதிகார சபை' தொடர்பான - திட்ட வரைவு ஏற்படுத்தியுள்ள அதிர்வலைகள் ஒருபுறம். அதை எதிர்ப்பதற்காகவும், அத்திட்டவரைவு முயற்சி முன்நகராமல் தடுப்பதற்காகவும் பல சக்திகள் ஒன்று திரண்டு வருவது தெளிவாகத் தென்படுகின்றது.

வடக்கு - கிழக்கு இணைப்பை நீடிக்கவிடாமல் செய்யும் விதத்தில், அந்த இணைப்புக்கு வழிசெய்யும் உத்தரவைக் காலாவதியாக விட்டு, தமிழர் தாயகத்தில் பெருங்குழப்பத்தை ஏற்படுத்த ஜனாதிபதி தரப்பில் வகுக்கப்படும் திட்டம் மற்றொருபுறம்.

அடுத்தவாரம் வரவு- செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரே, ஐ.தே.முன்னணி அரசை வீட்டுக்கு அனுப்ப பொ.ஐ.முன்னணி' மறைவில் விரித்துவரும் சதிவலை மறுபுறம்.

இதற்காக எம்.பிக்களை விலைக்கு வாங்கும் 'குதிரையோட்டப்' பேரங்கள் ஏற்கனவே மும்முரமாக இடம்பெற்று வருகின்றன என்று தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் பிரதம நீதியரசருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்ற விசாரணைப் பிரேரணை சமர்ப்பித்து, அவரது நடவடிக்கைகளை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணைக்கு உட்படுத்த அரசுத் தரப்பு மேற்கொண்டுவரும் முஸ்தீபுகள் பிறிதொருபுறம்.

பாதுகாப்பு அமைச்சரின் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பான நடவடிக்கை குறித்து உயர்நீதிமன்றத்தின் தலையீட்டுக்கு ஜனாதிபதி வழிவகுத்திருப்பது நாடாளுமன்ற சிறப்புரிமைகளில் தலையிடும் செயற்பாடு எனத் தெரிவித்து, அதற்கு எதிராக சபாநாயகர் மூலம் நாடாளுமன்ற நடவடிக்கை மேற்கொள்ள அரசுத் தரப்பில் ஏற்பாடுகள் செய்யப்படுவது வேறு ஒரு புறம்.

தென்னிலங்கை அரசியல் இவ்வளவு 'சூடு' பறக்க, மூத்த அரசியல் தலைவர்கள் இருவரோ வெளிநாட்டு அரசியல் பயணத்திலும் முனைப்புக் காட்டுகின்றார்கள்.

ஒருவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அவர் தற்போது அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

மற்றவர் ஜனாதிபதி குமாரதுங்க. அவர் எதிர்வரும் 7, 8, 9 ஆம் திகதிகளில் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்யவுள்ளார்.

இலங்கை அரசின் தலைவர்கள் என்ற முறையில் இச்சுற்றுப் பயணங்களை அவர்கள் மேற்கொண்டாலும் உண்மையில், உள்நாட்டில் தங்களின் அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு இச்சுற்றுப் பயணங்களைப் பயன்படுத்திக்கொள்வதும் அவர்களின் முக்கிய நோக்கங்களில் ஒன்று.


தற்போதைய சமாதான முயற்சிகளில் புலிகள் முரண்பட்டு, அவற்றிலிருந்து விலகினால் அப்போது புலிகளை உரியமுறையில் எதிர்கொள்ளும் தனது நடவடிக்கைக்கு அமெரிக்க வல்லாதிக்கத்தின் பக்க பலம் என்றும் உண்டு என்ற நம்பிக்கையை தென்னிலங்கை மக்கள் மனதில் வேரூன்றச் செய்ய முனைகிறார் ரணில். அதற்கு, புஷ்ஷைச் சந்தித்து அவருடன் தாம் கைகுலுக்கும் படம் நன்கு உதவும் எனக் கருதுகிறார் அவர்.

அதேபோன்று, வடக்கு - கிழக்கு இணைப்பு உத்தரவை காலாவதியாவதற்கு விட்டுவிடும் திட்டத்தில் இருக்கும் ஜனாதிபதி குமாரதுங்க, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட அந்த இணைப்பைத் துண்டிக்க முன்னர், இந்தியாவை 'சரிக்கட்ட' விரும்புகிறார். அத்தோடு பிரதமர் ரணில், அடிக்கடி இந்தியாவுக்குப் பறந்து வந்தாலும், அமெரிக்க வல்லாதிக்கத்தின் வழி நடத்தலிலேயே அவர் செயற்படுகின்றார் என்றும் - இந்திய உபகண்டப் பிரதேசத்தில் அமெரிக்கா காலூன்ற வழி சமைக்கின்றார் என்றும் - இந்தியத் தலைவர்களிடம் பிரதமர் ரணில் குறித்து 'அள்ளி வைக்கவும்' ஜனாதிபதி குமாரதுங்க எண்ணுகின்றார்.

இந்த இந்திய விஜயத்தின்போது பிரதமர் வாஜ்பாயையும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் அவர் சந்தித்துப் பேசுவார் எனத் தெரிகின்றது. பிரதமர் ரணில் - பிரபாகரன் இணக்க முயற்சிக்கு வேட்டு வைப்பதற்கான புறச்சூழலை உருவாக்குவது ஜனாதிபதியின் இந்தப் பயணத்தின் முக்கிய உள்நோக்கமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இரு தலைவர்களின் வெளிநாட்டு விஜயங்களும் பூர்த்தியாகும்போது தென்னிலங்கை அரசியலின் சூடு உச்சத்தைத் தொடும் என எதிர்பார்க்கலாம்.

## காலத்தின் பதிவு



இங்கிருந்து எங்கோ....? படம் : நாமாக

# சங்கரியை பதவி விலகக் கோருவது எவருடைய வற்புறுத்தலாலும் அல்ல!

### சந்திரநேரு எம்.பி. தெரிவிப்பு

அம்பாறை,நவ.4

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பதவியிலிருந்து ஆனந்தசங்கரி இராஜினாமாச் செய்யவேண்டும என்ற தீர்மானம் எவருடைய வற்புறுத்தலாலும் கொண்டுவரபபட்டதல்ல.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்க் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அம்பாறை மாவட்டக் கிளையின் கூட்டம் நேற்றுமுன்தினம் ஆலையடி வேம்பு கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கூட்டணியின் தலைமைப் பதவியிலிருந்து ஆனந்தசங்கரி இராஜினாமாச் செய்யவேண்டும் என்றும் -

அன்றேல், அவரை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கு கூட்டணியின் மத்திய குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய போதே சந்திரநேரு எம்.பி. இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மேற்படி தீர்மானம் எவருடைய வற்புறுத்தலாலும் கொண்டு வரப்படவில்லை. உலக நாட்டுத் தலைவர்களே, இலங்கைத் தமிழர்களின் தலைவர் வே.பிரபாகரனே என்று ஏற்றுக்கொண்டுள்ளனர்.

கடந்த தேர்தலில் ஆனந்தசங்கரி உட்பட கூட்டணியின் அனைத்து வேட்பாளர்களும் விடுதலைப் புலிகளே தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் என்று கூறி நாடாளுமன்றம் சென்றுவிட்டு, இன்று ஆனந்தசங்கரி மட்டும் அதை மறுத்துக் கருத்துத் தெரிவிப்பது, கூட்டணிக்குப் பெரும் அவமானத்தையும் தமிழ் மக்களுக்கு அநீதியையும் ஏற்படுத்தும் செயலாகும்.

ஆகவே, ஆனந்தசங்கரியின் இக்கூற்றின் மூலம் கூட்டணிக்குள் எழுந்துள்ள முரண்பாடு காரணமாகவே இக்கூட்டம் கூட்டப்பட்டு மக்களின் கருத்துக்கமைவாகத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது - இப்படி அவர் கூறினார்.

இந்நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பாளர் சிவஞானமூர்த்தி, மத்திய குழு உறுப்பினர் ஏகாம்பரம் மற்றும் பல பிரமுகர்கள் உரையாற்றினர்.

இறுதியாக மத்திய குழு உறுப்பினர்களாக பிரதேச செயலகத்திற்கு இருவர் வீதம் தெரிவும் இடம்பெற்றது. ஆனந்தசங்கரியைக் கூட்டணித் தலைமைப் பதவியிலிருந்து நீக்கக்கோரி கூட்டணியின் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டக் கிளைகள் ஏலவே தீர்மானம் நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது. (எ)

# மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பரப்பிலேயே உருளைகிழங்கை செய்கை பண்ணுக!

### மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,நவ.4

மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பரப்பில் இம்முறை உருளைக் கிழங்குச் செய்கையை மேற்கொள்ளுமாறு குடாநாட்டு விவசாயிகளுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில் உருளைக் கிழங்குச் செய்கை தொடர்பாக ஆராயப்பட்டதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாயிகள், 'தென்பகுதியில் இருந்து உருளைக்கிழங்கு எடுத்து வரு வதைக் கடந்த ஆண்டுகள் போன்று இம்முறையும் அரச அதிபர் தடைசெய்ய வேண்டும்' - என்று கேட்டுக்கொண்டனர். இதற்குப் பதிலளித்த அரச அதிபர் செ.பத்மநாதன் 'நடைமுறையில் உள்ள திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்ப கடந்த வருடங்களைப் போன்று இம்முறை உருளைக்கிழங்கு இறக்குமதியைத் தடைசெய்ய முடியாது' - என்று தெரிவித்தார்.

கடந்த வருடம் குடாநாட்டில் உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்பட்ட காலப்பகுதியில், தென்னிலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்குகள் இங்கு எடுத்துவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

இவற்றின் காரணமாக, உள்ளூர் கிழங்கின் விலை சந்தையில் வீழ்ச்சி கண்டது. இதனால், கடந்த ஏப்ரல் மாதம் வரை உருளைக்கிழங்கை குடாநாட்டுக்கு எடுத்து வருவதை யாழ். அரச அதிபர் தடைசெய்திருந்தது தெரிந்ததே.

இதேவேளை - உருளைக்கிழங்குக்குப் பதிலாக பீற்றூட், வெங்காயம், மிளகாய் மற்றும் முந்திரிகைச் செய்கையில் ஈடுபடலாம் என்றும் - இந்தக் கூட்டத்தில் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. (எ-10)

**நாளை**

ஐப்பசி 19
புதன்கிழமை
(05.11.2003)
திதி : துவாதசி
பின்னிரவு 2.32 வரை.
நட்சத்திரம்: பூரட்டாதி
முற்பகல் 8.26 வரை
சுபநேரம்: 4.34-6.04
ராகுகாலம்: 12.04-1.34
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

நல்ல சட்டங்களால் ஆளப்படுவதைக் காட்டிலும் ஒரு நல்ல மனிதனால் ஆளப்படுவதுதான் ஒரு நாட்டின் சிறப்பு.

# 422 நிலையங்களில் இம்முறை சைவசமய பாடப் பரீட்சை

### தேர்வுச் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.4

யாழ். சைவபரிபாலன சபையினரால் வருடாந்தம் நடத்தப்படும் சைவநெறித் தேர்வு எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, சிலாபம் ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைக்கு சுமார் 82 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளனர் என்றும் -

மேற்படி பரீட்சைக்கென 422 பரீட்சை நிலையங்களும், 30 இணைப்பு நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன என்றும் -

சைவ பரிபாலன சபையின் தலைவரும், சபையின் பரீட்சைச் செயலாளருமான சைவப் புலவர் வசந்தசாமி அறிவித்துள்ளார்.

தரம் 12 மாணவர்களுக்கு இந்துநாகரிகம், இந்துசமயம் ஆகிய பாடங்களில் பரீட்சை நடைபெறும் என்றும் -

பரீட்சைக்கு விண்ணப்பித்த பாடசாலைகளுக்கு சுட்டிலக்கம், இணைப்பிரதி என்பன தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் - அவர் மேலும் கூறினார். (எ)

# பெரும்போக நெற்செய்கையில் விவசாயிகள் கவனிக்க வேண்டியவை




**குடாநாட்டில் தற்பொழுது பெரும்போக நெற்செய்கைக் காலம் ஆரம்பித்துள்ளது. இதன்போது விவசாயிகள் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.**

பொதுவாக எல்லாவகை நெல்லினங்களினதும் வாழ்க்கைக் காலத்தை பதிய வளர்ச்சிக்காலம் (முளைத்த



தில் இருந்து குடலை உருவாக்கம வரை), இனப்பெருக்கக் காலம் (குடலையின் உருவாக்கத்தில் இருந்து கதிர் வெளித்தள்ளப்படல் வரை), முதிர்ச்சிக் காலம் (கதிர் வெளித்தள்ளப்பட்டதில் இருந்து அறுவடை வரை) என மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். இவற்றிலே எந்தவொரு நெல்லினமும குடாநாட்டின் காலநிலையில் தமது இனப்பெருக்கக் காலம், முதிர்ச்சிக் காலம் என்பவற்றுக்கு தனித்தனியாக ஒவ்வொரு மாத காலத்தை எடுத்துக கொள்கின்றன. எனவே, இப்பயிரின் மொத்த வளர்ச்சிக்காலத்தில் அவற்றின் பதிய வளர்ச்சிக்காலமே வேறுபட்ட இனங்களுடன் மாறுபடக் கூடிய தொன்றாகும். பதியவளர்ச்சிக காலத்தில் கிட்டத்தட்ட முளைத்ததில் இருந்து 25 நாள்கள் அளவில் அதாவது, நெறபயிர் தனது ஐந்தாவது இலையைத் தோற்றுவிக்கும் போதே நெல்விளைவைத் தீர்மானிக்கும் காரணிகளில் முக்கியமானதொன்றாகிய மட்டங்கள தோன்றுதல் ஆரம்பமாகின்றது.

மூன்று, மூன்றரை மாத வயதுடைய நெல்லினங்களை எடுத்துக் கொண்டால் அவற்றின் பதிய வளர்சசிக் காலம் 30-45 நாள்கள் வரையிலானதாகவே இருக்கும். ஆனால், 25 நாள்கள் அளவிலேயே மட்டங்கள் தோன்ற ஆரம்பிப்பதனால் இவ்வினப் பயிர்களினால் தோற்றுவிக்கப்படும் மட்டங்களில் இருந்து அவற்றின் விளைச்சல் காலத்தினுள் வினைத்திறனான கதிர்களை தோற்றுவிக்க முடியாது. ஏனெனில், குறித்தளவு எண்ணிக்கையான மட்டங்கள் தோற்றுவிக்கப்பட முன்னர் பயிர் இனப்பெருக்க வளர்ச்சி நிலையை (குடலை உருவாக்கம்) அடைந்துவிடுகின்றது. இதன் காரணமாக குறுகியகால நெல் இனங்களை செய்கை பண்ணும்போது நாற்றுநடுகை முறையைப் பயன்படுத்துவது ஒரு பிரயோசனமற்ற செயலாகும். எனவே, இந்த இனங்களுக்கு நெருங்கிய விதைப்பினை மேற்கொண்டு குறித்த நிலப்பரப்பில் உள்ள பயிர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் உயர்விளைச்சலை எதிர்பார்க்க முடியும். அத்துடன் மொட்டைக் கறுப்பன், பச்சைப்பெருமாள், பெரிய வெள்ளை போன்ற வர்க்கங்கள் யாழ்ப்பாண விவசாயிகளால் பரம்பரை பரம்பரையாக விரும்பிச் செய்கை பண்ணப்படுகின்றன. பெரும்பாலான நீண்ட கால வயதுடைய பழைய நெல்லினங்கள் பரம்பரையியல் ரீதியாகவே மட்டங்களை தோற்றுவிக்கும் ஆற்றல குன்றியனவாகக் காணப்படுகின்றன. இவற்றிற்கும் ஓரளவிற்கேனும் மேற்குறித்த நடைமுறையை பயன்படுத்துவதே சிறந்தது.

நான்கு அல்லது நான்கிற்கு மேறபட்ட மாதவயதுடைய நெல்லினங்களை பொறுத்தமட்டில் இவை குறிப்பிடத்தக்களவு பதிய வளர்ச்சிக் காலத்தை கொண்டுள்ளதால் (2 மாதத்திற்கு அதிகமான பதிய வளர்ச்சிக் காலம்) முதிர்ச்சிக் காலத்தினுள் இவற்றினால் குறிப்பிடத்தக்களவு வினைத்திறனான கதிர்களை தோற்றுவிக்கக் கூடிய ஆற்றலுள்ள மட்டங்களை உருவாக்க முடியும். இககாரணத்தினால் இந்த இனங்களுக்கு குறுகிய கால இனங்களைப் போன்று நெருங்கிய விதைப்பினை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அத்துடன், நாற்று நடுகையை மேற்கொள்வதற்கும் மிகப் பொருத்தமான இனங்களாகும்.

அடுத்தபடியாக நெற்பயிருக்கான வளமாக்கி பிரயோகத்தை எடுத்து நோக்கினால் நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் என்பன முக்கியமான போசணைக் கூறுகளாகும் நெல்விதைகக்கும்போது அடிக்கட்டுப் பசளையாக இடப்படும் நெற்கலவை (V.Mixture) பொஸ்பரஸ்,நைதரசன், பொட்டாசியம் என்பவற்றை பயிரின் ஆரம்ப வளர்ச்சிக்கு வழங்குகின்றது. இதில் குறிப்பாக பொஸ்பரஸ் அதிகளவில் இருப்பதுடன், பயிரில் அதிகளவு வேர்களின் உருவாக்கத்தைத் தூண்டுகின்றது. இது மண்ணில் உள்ள போசணைக் கூறுகளின் சீரான அகத்துறிஞ்சலுக்கு உதவுவதனால் பயிர் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் அத்தியாவசியமான தொன்றாகும். பொதுவாக பொஸ்பரஸின் கரைதிறன் குறைவாக இருப்பதனால விதைப்பின்போது இடப்படும பொஸ்பரசினை பயிரினால் உடனடியாக அகத்துறிஞ்ச முடியாதிருக்கும் இதன்காரணமாக இக்கலவையை ஆரம்ப நிலப் பண்படுத்தலின்போது வயலில் இட்டு மண்ணுடன் கலந்து விடுவதன் மூலம் மேற்குறிப்பிட்ட பிரச்சினையை ஓரளவிற்கு குறைக்கலாம்.

நைதரசன், பயிரின் பதிய வளர்சசிக்கு முக்கியமானதொரு கூறாகும். அத்துடன் இது அதிக எண்ணிக்கையில் வினைத்திறனான, வீரியமான மட்டங்கள் தோன்றுவதையும் தூண்டுகின்றது. நெற்பயிர் முளைத்ததில் இருந்து 15 - 20 நாள்கள் அளவில் நைதரசன் வளமாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ள ஆரம்பிக்கலாம். நெற்பயிரின் பதிய வளர்ச்சிக்காலத்தில் அக்காலத்தின் அளவைப்பொறுத்து இடப்படும் வளமாக்கிகளை ஓரிரு தடவைகளில் இடாமல் சிறுசிறு கூறுகளாகப் பிரித்து பலதடவைகளில் பிரயோகிப்பதன் மூலம் மண்ணில் ஏற்படவிருக்கும் நைதரசனின் தேவையற்ற இழப்பைக் குறைத்து இடப்படும வளமாக்கியின் பெரும்பகுதியை பயிரினால் உள்ளெடுக்கச் செய்யலாம். இதைவிட, நெல் வயலில் நிற்கும் நீரின அளவு குறைவான வேளைகளில வளமாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்வதன் மூலம் நைதரன் மூலக்கூறுகள நீருடன் சேர்ந்து கசிதல், உட்செல்லுகை, தாழ்வான உட்செல்லுகை என பவற்றின் ஊடாக வீண் இழப்புக்கு உள்ளாவதை தடுக்க முடியும். அத்துடன், நெல் வயலில் இடப்படும் நைதரசன் வளமாக்கித் துணிக்கைகளை சேற்றினுள் செலுத்துவதற்கான எந்த விதமான செயல்முறையும் வளமாக்கியின் வினைத்திறனை அதிகரிக்க ஏதுவாகும்.

நெற்பயிரில் குடலை உருவாக்கம நடைபெறும் காலம் அதன் விளைவை தீர்மானிக்கின்ற பிரதான காலப்பகுதி ஆகும். இக்காலப் பகுதியில் பயிருக்குக் கிடைக்கின்ற, பயிரிலுள்ள, பயிரினால் உற்பத்தி செய்யப்படுகின்ற போசணைக் கூறுகளின் அளவிலேயே நெற் கதிரில் உருவாகும் நெற்பூக்களின் எண்ணிக்கை தங்கியுள்ளது. பொதுவாக எல்லா நெல்லினங்களிலும் அறுவடைக்கு 2 மாதங்களிற்கு முன்னரே குடலை உருவாக்கம் நடைபெறும். உதாரணமாக ஒரு 5மாத வயதுடைய நெல்லினத்தை எடுத்தால் அதன் கடைசி ஒரு மாத காலத்தில் முதிர்ச்சி நிகழும். அதற்கு முந்திய ஒரு மாத காலத்தில் இனப்பெருக்க வளர்ச்சி நிகழும். இந்த இனப்பெருக்க வளர்ச்சி ஆரம்பமாகும் காலமே குடலை உருவாகும் காலமாகும். எனவே, இவ்வயதுடைய நெல் இனங்களில் பயிர் முளைத்ததில் இருந்து 3 மாதங்களில் (90 நாளில்) குடலை உருவாக்கம் நடைபெறும். மேற்குறிப்பிட்ட கருத்துக்களைக் கவனத்திற்கொண்டு சரியான இக்காலப் பகுதியைக் கண்டுபிடித்து இதற்கு சற்று முன்னதாக இறுதி வளமாக்கியான ரீ.டி.எம்.(TDM) கலவையை (இது நைதரசன், பொட்டாசு என்பவற்றைக் கொண்டது) இடுவதன் மூலம் ஒரு கதிரில் உருவாக இருக்கும் நெற்பூக்களின் எண்ணிக்கையை அதிகரித்து விளைவைக் கூட்டமுடியும். இக்கலவை மூலம் வழங்கப்படும் நைதரசன் கதிர் உருவாக்கத்தின் போதும அதன் பின்னரும் தொழிற்பட்டு ஒவ்வோர் தண்டிலும் தொழிற்படு நிலையிலுள்ள இலைகளை நீண்ட நாள்களுக்கு பச்சையாகவும் ஒளித்தொகுப்புச் செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவையாகவும் இருப்பதற்கு வழிவகுக்கும்.

இப்பயிரைப் பொறுத்தமட்டில் விளைச்சலின் 60 வீதமான பங்கு பயிரில் நெற்கதிரின் தோற்றத்துக்குப் பின் நடைபெறும் ஒளித்தொகுப்பிலேயே தங்கியுள்ளது. அதனிலும் குறிப்பாக Flag Leaf எனப்படும் கடைசியாகத் தோன்றும் இலையே அதிகளவு ஒளிதொகுப்பு விளைபொருள்களை உற்பத்தி செய்யும் ஆற்றல் உள்ளதாகக் காணப்படுகின்றது. எனவே, இந்த இலைகளை அதிக நாள்களுக்குப் பச்சையாக வைத்திருக்கவேண்டியது அவசியமான ஒரு தேவையாகும். பொட்டாசியம் ஆனது பயிரின் இலைகளில் இருந்து நேரடியாகவும், தண்டின் சேமிப்புக்களிலிருந்தும் ஒளித்தொகுப்பு விளைபொருள்கள் கதிருக்குக் கடத்தப்படுவதைத் தூண்டுகின்றது. மேற்குறித்த செயற்பாடுகள் மூலம் ஒரு நெற்கதிரில் உள்ள எல்லா நெற்பூக்களும் முழு நிரம்பல் அடைந்த நெல்மணிகளாக உருவாக்கப்படும் வாய்ப்பேற்படுகிறது.

யூரியாவுக்குப் பதிலாக அமோனியம் சல்பேற் பாவிக்கப்பட்டால், யூரியாவின் அளவிலும் இருமடங்கு பாவிக்கப்படவேண்டும். பழைய நெல்லினங்களிற்கு மேற்குறிப்பிட்ட அளவைவிடக் குறைந்த அளவில் பாவிப்பது நன்று. ஏனெனில், இவை பொதுவாக நீண்ட நலிவான தண்டுகளைக் கொண்டவை. இவற்றில் அதிகரித்த நைதரசன் நிலைமைகளில் மிகக்கூடுதலான தண்டு நீட்சி நிகழ்வதனால் கதிர் உருவாக்கத்தின் பின்னர் பயிர் நிலத்தில் சரியவேண்டிய நிலைமை ஏற்படும். இது விளைவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு செயற்பாடாகும். ☆

**எஸ். சத்தியசீலன்**
**வெளிக்கள உதவியாளர்**
**(யு.என்.எச்.சி.ஆர்.)**

### இடப்படவேண்டிய வளமாக்கியின் அளவு (Kg/பரப்பு)

| நெல்லின வயதுப்பிரிவு (மாதங்கள்) | முதலாம் மேற்கட்டு வளமாக்கி | 2ஆம் மேற்கட்டு வளமாக்கி | 3 ஆம் மேற்கட்டு வளமாக்கி | 4 ஆம் மேற்கட்டு வளமாக்கி |
|---|---|---|---|---|
| 3-3½ | யூரியா 2Kg 15 நாள்கள் அளவில் | ரீ.டி.எம். 2Kg 25-30 நாள்கள் அளவில் | - | - |
| 4-4½ | யூரியா 1.5Kg 15-20 நாள்கள் அளவில் | யூரியா 0.75Kg 35-40 நாள்கள் அளவில் | ரீ.டி.எம்.2Kg 55-60 நாள்கள் அளவில் | - |
| 5-5½ | யூரியா 1.5Kg 15-20நாள்கள் அளவில் | யூரியா 0.75Kg 35-40 நாள்கள் அளவில் | யூரியா 0.75Kg 60-65 நாள்கள் அளவில் | ரீ.டி.எம். 2Kg 85-90 நாள்கள் அளவில் |

# விவசாய சம்மேளனங்களை புனரமைக்க நடவடிக்கை

யாழ். மாவட்டத்திலுள்ள விவசாய சம்மேளங்களை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். கமநல அபிவிருத்தித் திணைக்களம மேற்கொண்டு வருவதாக அதன் உதவி ஆணையாளர் க.சுந்தரரேசன தெரிவித்தார்.

எனவே, விவசாய சம்மேளன அமைப்புக்கள் அமைக்கப்பட்டதன் பயனை விவசாயிகள் அனுபவிக்கின்ற வகையில் அவற்றைப் புனரமைக்க வேண்டியது உடன் தேவையாக உள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள 60 விவசாய சம்மேளனங்களைப் புனரமைப்பதற்கான கூட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள விவசாய சம்மேளனங்களில் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# சமுர்த்தித் திட்டத்தின் கீழ் அபிவிருத்திப் பணிகள்

வலி.தெற்கு,நவ.4

சமுர்த்தி அதிகார சபையின் மக்கள் கருத்திட்டத்தினூடாக வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவில் சுமார் மூன்று லட்சத்து 30ஆயிரம் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள புன்னாலைக்கட்டுவன் வடக்கு விவசாய வீதி, குப்பிளான் தெற்கு விவசாய வீதி, ஏழாலை மத்தி விவசாய வீதி என்பன புனரமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும், உடுவில் மத்தியில் பொதுக் கிணறு ஒன்றும், சங்குவேலியில் கல்வெட்டு ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றன.

சமுர்த்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள நிதியைக் கொண்டு மேற்படி வேலைகள் நடைபெற்று வருவதாகக் கூறப்பட்டது. (எ-152)

# விவசாய உற்பத்திகளின் விற்பனைக்கு விசேட மையம்

## உடுவிலில் விரைவில் அமையும்

வலி.தெற்கு,நவ.4

உற்பத்தி - கொள்வனவு - விற்பனவு மையம் ஒன்று விரைவில் உடுவிலில் திறந்து வைக்கப்படவுள்ளது.

உடுவில் கமநலசேவை நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள இக்கட்டடத்தில் இரண்டு பகுதிகளாக இவை இயங்கவுள்ளன.

ஒரு பகுதியில் விவசாயிகளுக்குத் தேவையான விவசாயப் பொருள்கள் விற்பனை நிலையமும் -

மறுபகுதியில் விவசாய உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கு உதவும் முகமாக விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்து தேவையானவர்களுக்கு விற்பனை செய்யும் நிலையமும் அமையவுள்ளது.

(எ-152)

# '...மீண்டும் யுத்தம் வரப்போவதில்லை

15 ஆவது செவ்வி

**அரசு - புலிகள் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் தமிழர் பகுதியில் போர் நின்றதைத் தவிர வேறு ஏதாவது முன்னேற்றங்கள் இருக்கின்றனவா என்பது பற்றிய அலசல் இந்தப் பகுதியில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.**

**இதுவரை செவ்வி வழங்கியவர்களின் கருத்துக்களின்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டதன் படியான மக்களின் இயல்பு வாழ்க்கை தமிழர் தாயகப் பகுதியில் ஏற்படவில்லை என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட பல விடயங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது செவ்விகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.**

**அந்தவகையில், தமிழ் மக்களுக்காக நாடாளுமன்றத்தில் நீண்டகாலமாக குரல் கொடுத்து வரும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வரின் செவ்வி இன்று வெளியாகின்றது.**



# தலைமைகளிடையே நல்ல புரிந்துணர்வு...'

## அமைச்சர் அஸ்வர் நம்பிக்கை

*கேள்வி:-* அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து 20 மாதங்கள் பூர்த்தியான போதும், வடக்கு - கிழக்கில் மக்கள் இயல்பு வாழ்க்கை உறுதிப்படுத்தப்படவில்லை என அரசு மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக் குறித்து நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?

*பதில்:-* வடக்கு - கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீராக்க, பிரதமர் தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதற்காக பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

காட்டில் இருந்து யுத்தம் புரிந்தவர்கள் இன்று பேச்சு மேசைக்கு வந்துள்ளார்கள். பாடசாலைகளுக்குச் செல்லமுடியாத நிலையில் இருந்த அவர்கள் இன்று வரைவு எழுதும் நிலைக்கு வந்துள்ளனர்.

இன்று பாடசாலைகளுக்குச் செல்கிறார்கள்; திருமணம் முடிக்கிறார்கள்; சாதாரண வாழ்க்கையோடு ஒன்றறக்கலந்து விட்டார்கள். அப்படி நிலை மாறிவிட்டது.

அயர்லாந்தில், பிலிப்பைன்ஸில் 25 வருட கால யுத்தங்கள் முடிவுக்கு வந்து சமாதான சூழ்நிலை ஏற்பட்டது போன்று இங்கும் யுத்தம் ஓய்ந்து சமாதான சூழ்நிலை ஒன்றில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இன்றுள்ள சமாதான சூழலில் முழுமையான சமாதானத்தை நோக்கிய நகர்வு ஒன்றை நாம் மேற்கொண்டுள்ளோம். இந்த நகர்வில் பிரதமர், அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ராஜித சேனரத்ன, பாக்கீர் மாக்கார், நான் ஆகியோர் முழுமையாக அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுள்ளோம்.

மக்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியாக பிரதமரின வழிகாட்டலில் இங்கு நாம் வருகின்றோம். அவர்களின் பிரச்சினைகளை ஆராய்கின்றோம். அவர்களின் பிரச்சினைக்கு முழுமையாகத் தீர்வுகண்டு, அவர்கள் எதிர்பார்க்கும் இயல்பு வாழ்க்கையை முற்றுமுழுதாக வழங்கமுடியாத போதும் ஓரளவாவது வழங்கமுடிகின்றது என்று கூறவிரும்புகின்றேன். யுத்தத்தால் அழிந்து சகல சேவைகளும் ஸ்தம்பித்திருந்த நிலை ஓரளவு சீராக்கப்பட்டுள்ளது.

சகஜ நிலையை உருவாக்க பிரதமர் பகீரத முயற்சியில் ஈடுபட்டுள்ளார். நிச்சயம் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும் என நம்புகின்றோம்.

ஒரு மணிக்கூடு இயங்கி நேரத்தைக் காட்டுகின்றது என்றால், அந்த மணிக்கூட்டில் இருக்கும் சகல சிறு இயந்திரங்களும் சரியாக இயங்கவேண்டும். அத்தகைய நிலைதான் சமாதான முயற்சிகளிலும் இருக்கின்றது. சிறு சிறு இயந்திரங்களாக பலர் ஈடுபட்டுள்ளனர். அவை சரிவர இயங்கும் போது சமாதான முயற்சி உரிய பலனைத் தரும். இந்தப் பயணத்தில் சில முரண்பாடுகள் காலத்துக்குக்காலம் ஏற்பட்டாலும் அவை சீராக்கப்படும்.

தமிழர்களின் உரிமைகள் வழங்கப்படும் சூழலில் முஸ்லிம் மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் விடுதலைப் புலிகள் சரியான நிலைப்பாட்டை எடுப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்கள் எமது மூத்த சகோதரர்கள். அவர்களின் தம்பிமார்கள் நாங்கள். எங்கள் தலைகளைத் தடவி விடுங்கள், தலையை வாரி விடுங்கள். அப்படியானால் அவர்கள் இராணுவத்தினரிடமோ அல்லது வேறு எவரிடமோ போக மாட்டார்கள். அவர்களின் உதவியை எதிர்பார்க்கமாட்டார்கள்.



*கேள்வி:-* அரசு - புலிகள் பேச்சில் தனித்தரப்பாக முஸ்லிம்கள் பங்குபற்றக் கோருவது குறித்து....?

*பதில்:-* பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்ற வேண்டும் என்று கோரும் பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட சமயம் எந்த எதிர்ப்பும் இருக்கவில்லை. முஸ்லிம் மக்களின் பிரச்சினை என்று வரும்போது அந்தப் பக்கத்தில் நாம் நிற்கத்தான் வேண்டும். தமிழர் பிரச்சினை என்று வரும்போது தமிழர் எல்லோரும் அந்தப் பக்கத்தில்தான் நிற்பர். முஸ்லிம்களும் தமிழர்களும் முட்டிமோதுவதற்காக அல்ல. இனம் என்ற ரீதியில் ஒன்றுபட்டு நிற்கத்தான் வேண்டும்.

சுமுகமான தீர்வு ஒன்றை எட்ட வேண்டுமானால் முஸ்லிம் தரப்பும் சரிவர அங்கம் வகிக்கத்தான் வேண்டும். இது ஏற்கப்பட வேண்டிய ஒன்றுதான்.

நாம் நாட்டைப் பிரிக்கக் கேட்கவில்லை. வேறு இராணுவம் வேண்டும் என்று கேட்கவில்லை. மக்கள் மீளக்குடியமர வசதி செய்ய வேண்டும் என்றே கேட்கிறோம். யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவேண்டும். முஸ்லிம் மக்களை மனதார வரவேற்று, அவர்களை மீளக் குடியமர விடுதலைப் புலிகள் அனுமதிக்க வேண்டும். இறுதித் தீர்வு ஒன்று எட்டப்படும்போது, அந்த மக்களின் ஆதரவு கிடைக்கும். இல்லாவிட்டால் வெளியில் இருந்து அவர்கள் கோஷம் போடும் நிலையே வரும். அப்படி அவர்கள் கோஷம் போட்டுக் கொண்டிருந்தால் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது கடினமாகவே இருக்கும். முஸ்லிம் மக்களை மீளக் குடியமர அனுமதிக்கும் விடயத்தில் அரசோ, விடுதலைப் புலிகளோ, தமிழ் மக்களோ தப்பமுடியாத நிலை உருவாகிவிடும்.

வடக்கிலும், கிழக்கிலும் தமிழ்பேசும் முஸ்லிம் மக்களே வாழ்கின்றார்கள், ஆகவே, அவர்களும் தமிழர்கள் என்ற வகையில் அவர்களுடன் இணைந்து வாழ சகலதரப்புக்களும் முன்வரவேண்டும்.

*கேள்வி:-* தமிழ் - முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் கிழக்கில் அடிக்கடி இருதரப்பினருக்கும் இடையில் கலகம் ஏற்படுகின்றது. இதன் அடிப்படைக் காரணம் என்ன?

*பதில்:-* தற்போதைய சமாதான வழியை திசை திருப்புவர்கள், வழிகெட்டுப் போனவர்கள், வேண்டுமென்றே இரு இனங்களுக்கும் இடையில் பிளவுகளை ஏற்படுத்த முனைபவர்கள் ஆகிய தரப்பினரே நெருக்கடி ஏற்படக் காரணகர்த்தாக்கள். நெருக்கடிகளை ஏற்படுத்தி, இரு இடங்களின் பின்னிப்பிணைந்த உணர்வுகளை உடைப்பதுதான் அத்தகையோரின் திட்டமாகும். இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எதிராகச் செயற்படும் தென்னிலங்கை இனவாதிகளும் இந்தச் சம்பவங்களுக்கு காரணமாவர். அத்தகையோரை இனங்கண்டு வருகின்றோம்.

தொப்பிகளைப் போட்டுக் கொண்டு முஸ்லிம்களாக தம்மை காட்டிக்கொண்டு இரு சமூகங்களையும் பிரிக்க மோதல்களை உருவாக்கி வருகின்றனர். தமிழர்களின் கடைகளைத் தாக்குவது, மாட்டு வண்டிகளைக் கடத்துவது போன்ற செயற்பாடுகளில் அந்தச் சக்திகள் ஈடுபட்டுள்ளன. இது ஒரு சர்வசாதாரண நிகழ்வாகப் போய்விட்டது. இவற்றைப் பார்க்க நீதி மன்றங்கள், காவல்துறை என்பன இருக்கின்றன. ஆனால் அதைவிடுத்து, தமிழனைத் தாக்குவதா? ஒரு முஸ்லிம் பாதிக்கப்படுவதற்காக, ஒட்டுமொத்தமாக ஓர் இனத்தைத் தாக்குவதா? இது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயம் அல்ல.

கிழக்கில் தமிழ் - முஸ்லிம் தலைவர்கள் பலர் உருவாகினார்கள். அவர்கள் மிக அன்னியோன்னியமாக நட்புடன் செயற்பட்டனர். அவர்கள் காலத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே உறவுகள் பலமாக இருந்தன. அந்த உறவுகள் அண்மைக காலமாக சீராகப் பேணப்படவில்லை. இந்த நிலை மாற வேண்டியது அவசியம்.

*கேள்வி:-* சமாதான முயற்சிகளுக்கு எதிராக தெற்கில் வலுப்பெற்றுவரும் எதிர்ப்பு அலைகள் குறித்து....?

*பதில்:-* இடைக்கால வரைவு சமர்ப்பிக்கப்படும் முன்னரே, அந்த வரைவில் என்ன இருக்கின்றது என்று தெரியாத நிலையில் அந்த வரைவுக்கு எதிராக இனவாதிகள் கிளர்ந்து எழுந்துள்ளனர். தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்க முயற்சி எடுக்கப்படும் போதே, இனவாதிகள் தமது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்துவிடுவர். உண்மையில் அந்தத் தீர்வில் என்ன இருக்கின்றது என்று கூட ஆராயாமல், நாடு பிளவுபடப் போகின்றது என்று அவர்கள் கூச்சல் போடுகின்றனர். தீர்வு எத்தகையது என்று ஆராய்ந்து, தமது ஆலோசனைகளைத் தெரிவிக்காமல், தமிழரை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்படுகின்றனர்.

*கேள்வி:-* மீண்டும் யுத்தம் ஒன்று வரும் என எதிர்பார்க்கின்றீர்களா?

*பதில்:-* யுத்தம் ஒன்று மீண்டும் வரப்போவதில்லை. அரசு, விடுதலைப் புலிகள் தரப்புக்களின் உயர்மட்டத்தில் உள்ளவர்கள் 'யுத்தம் வேண்டாம். சமாதானமே வேண்டும்' என்ற உறுதிபாட்டில் இருக்கின்றனர். யுத்த நிறுத்தத்துடன் நாட்டில் மன மாற்றம் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதியும் யுத்தம் வேண்டாம் என்று கூறுகிறார். எதிர்கட்சிகள் விடுதலைப் புலிகளுடன் பேசுமாறு கோருகின்றன. ஆனால், ரணில் பேசினால் மட்டும் நாடு பிளவுபட்டுவிடும் என எதிர்க்கட்சிகள் கோஷமிடுகின்றன. இது ஒரு பெரும் பகிடியாகும்.

யுத்தம் யாருக்கும் தேவையில்லை. யுத்தத்தில் யாரும் வெல்வதில்லை. எல்லோருக்கும் தோல்விகள் ஏற்படும்.

யுத்தத்தின் அழிவின் சின்னங்கள் இன்னமும் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றன. அந்த அழிவுகள் மீளப்புனரமைக்கப்பட வேண்டும். அழிந்த மனைகள் மீள உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் உண்மையான சமாதானம் வந்ததாகக் கூறமுடியும். யுத்தம் மீண்டும் வரக்கூடிய சாத்தியமே இல்லை.

*கேள்வி:-* நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு ஜனாதிபதி உத்தரவிடுவாரா?

*பதில்:-* ஜனாதிபதிக்கும் - பிரதமருக்கும் இடையில் நல்ல புரிந்துணர்வு நிலவுகின்றது. இந்நிலையில், பிரதமருக்கு எதிராக ஜனாதிபதி எதையும் செய்யமாட்டார் என்றே கூறவேண்டும்.

நாடு வளர்ச்சியடைந்துவரும் இந்த நேரத்தில் நாடாளுமன்றக் கலைப்பு என்பது இடம்பெற வாய்ப்பு இல்லை. சர்வதேச சமூகம், சமாதான நாட்டையே காணவிரும்புகின்றது. இதற்கு முரணாக ஜனாதிபதி முடிவுசெய்ய வாய்ப்பு இல்லை.

**செவ்விகண்டவர் : குகா**

இதற்குப் புறம்பாக, ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தால் அராஜகந்தான் உருவாகும். சமாதான சூழ்நிலை பாதிக்கப்படும். அரசுக்கும் தமிழ்மக்களுக்கும் இடையில் உள்ள நிலைப்பாடு தற்சமயம் மாறினால் பெரிய விபரீதமான விளைவுகள்தான் ஏற்படும். தெற்கில் கூட யுத்தம் வருமா என்பது சந்தேகந்தான்.

*கேள்வி:-* குடாநாட்டில் மக்கள் மீளக்குடியமர வசதியாக அதிஉயர்பாதுகாப்பு வலயங்களைக் குறைக்குமாறு விடுக்கப்படும் கோரிக்கைகளை அரசு உதாசீனம் செய்கின்றது. இந்தப் பிரச்சினைக்கு அரசு ஏதாவது உருப்படியான நடவடிக்கைகளை எடுக்குமா?

*பதில்:-* அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிமுறைகள் குறித்து பாதுகாப்புக் கவுன்ஸில் ஆராய்ந்து வருகின்றது. பாதுகாப்புத் தரப்பு ஒருவிதமாகவும், மக்கள் தரப்பு வேறு விதமாகவும் கூறிவருகின்றன. இரு தரப்புக்களின் நியாயங்களையும் ஆராய்ந்து தீர்வு ஒன்றைக்காண அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

**...ஆயுதங்களைக் கொண்டு சண்டை செய்தவர்கள் இன்று பேனா பிடித்து வரைவு ஒன்றைத் தயாரிக்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இது ரணில் விக்கிரமசிங்க தலைமையான அரசுக்குக் கிடைத்த வெற்றி என்றே கூறலாம். "இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை" ஒன்றை வழங்குவதற்கான அந்த வரைவின் மூலம் விடுதலைப் புலிகள் ஈழம் கோரவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு ஒன்றைத்தான் கேட்கிறார்கள். அரசு இந்த வரைவை ஆராய்ந்து விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும். அந்த வரைவில் திருத்தம் ஏதும் இருந்தால், மாற்று யோசனைகளை அரசு முன்வைக்க வேண்டும். பேசி அதற்கு முடிவு ஒன்றை எட்டவேண்டும்.**

முழுக் குடாநாடுமே முன்பு அதி உயர் பாதுகாப்பு வலயமாக இருந்தது. மதவாச்சிக்கு இப்பால் வடக்கே வரமுடியாது இருந்த நிலை இன்று மாறிவிட்டது. இவர்களுக்கும் விரைவில் தீர்வு கிட்டும்.

*கேள்வி:-* விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள புதிய வரைவு குறித்து....?

*பதில்:-* ஆயுதங்களைக் கொண்டு சண்டை பிடித்தவர்களை இன்று பேனா பிடித்து வரைவு தயாரிக்கும் நிலைக்கு கொண்டு வந்துள்ளோம். இது ரணில் தலைமையிலான அரசுக்குக் கிடைத்த வெற்றி எனக் கருதுகின்றேன்.

இந்த வரைவின் மூலம் விடுதலைப் புலிகள் ஈழம் கேட்கவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு ஒன்றைத்தான் கேட்கின்றார்கள். அரசு இந்த வரைவை கவனத்தில் எடுத்துப் பேசவேண்டும். விடுதலைப் புலிகள் கேட்பதில் நூறுவீதத்தையும் கொடுப்பது என்பதில்லை. அரசு மாற்று யோசனையை முன்வைக்க வேண்டும். புலிகள் அதை மீள்பரிசீலனை செய்து தீர்வு ஒன்றைக் காணவேண்டும். தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க தன்னாட்சி அதிகாரம் ஒன்றை வழங்குவதில் பிரச்சினை ஏதும் வந்துவிடப்போவதில்லை. ★

# சமாதான முன்னெடுப்பிலேயே ஜனாதிபதி ஈடுபடவேண்டும்

## மல்வத்தை மகாநாயக்கர் கோரிக்கை

கொழும்பு,நவ.4

"சமாதானத்தை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஈடுபட வேண்டும் அதைவிடுத்து தூரநோக்கில்லாத செயற்பாட்டில் அவர் ஈடுபட்டால அது பாரிய விளைவையே ஏற்படுத்தும்" என்று மல்வத்தை மகாநாயக்கர் ரம்புக்வெல்ல விபஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகளின் திட்டவரைபு நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு பாதகத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பின் அது தொடர்பாக பேச்சுக்கள் மேற்கொண்டு பிரச்சினைக்குத் தீர்வுகாண முயல வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான அரசியல் சூழ்நிலையில் நாட்டின் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி பொறுப்புணர்ச்சியுடன் செயற்படவேண்டியது கட்டாயமாகும்.

விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் பிரேரணை தொடர்பாக சட்டவல்லுநர்கள் மற்றும் கல்விமான்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு தீர்வு காணவேண்டும். சமாதான முயற்சிக்கு அதரவு நல்கும் வகையிலேயே இந்த யோசனைகளை முன் வைத்திருக்கிறேன்.

- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (எ)

# இலங்கைப் பிரிவினைக்கு எதிராக இந்தியா நடவடிக்கை எடுக்கும்

## இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை இலங்கை தடுக்கும்

கொழும்பு,நவ.4

இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இடம்பெறவேண்டிய பல விடயங்கள் குறித்து இரு நாடுகளிடையேயும் இணக்கம் காணப்பட்டிருப்பதாக பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது.

இந்த இணக்கத்தின்படி இலங்கைப் பிரிவினைக்காக இந்தியாவில் மேற்கொள்ளப்படும் எல்லா நடவடிக்கைகளையும் சட்டரீதியாகத் தடை செய்யவும் - இலங்கைக்குள் இந்தியாவுக்கு எதிராக எதுவும் மேற்கொள்ளப்பட்டால் அதனைத் தடை செய்யவும் வழிவகைகள் செய்யப்படும்.

இரு நாடுகளிடையேயும் அரசியல் மட்டத்திலும் அதிகாரிகள் மட்டத்திலும் நடைபெற்ற பேச்சுக்கள் வெற்றியளித்திருப்பதாக அரசாங்க உயர்மட்டத் தகவல்கள் குறிப்பிட்டிருப்பதாகவும் அச்செய்தி தெரிவித்திருக்கிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடல் எல்லையின் பாதுகாப்புக்காக இந்திய கடற்படையின் அதிநவீன கப்பல்களை பயன்படுத்தவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இருநாடுகளினதும் பாதுகாப்புத் தேவைக்காக இருநாடுகளிலுள்ள பிரதான விமான நிலையங்களையும் துறைமுகங்களையும் பயன்படுத்த ஒப்பந்தத்தின் மூலம் இடமளிக்கப்படும்.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து கிடைக்கும் ஆயுதங்களுக்கு மேலதிகமாக தேவையின் பேரில் இந்தியாவிடமிருந்து நவீன ஆயுதங்களை இலங்கை பெற்றுக்கொள்ளவும் ஒப்பந்தத்தில் வழிசெய்யப்படும்.

இவற்றைவிட, சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு கூட்டுஇராணுவப் பயிற்சியில் ஈடுபடவும் புதிய ஒப்பந்தத்தில் வழி செய்யப்படும் எனவும், இந்த ஒப்பந்தத்துக்கு உதவக் கூடியதாக இந்திய - ரஷ்ய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒபபந்தத்தின் பிரதியொன்று இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கிறது - இவ்வாறு செய்தி கூறுகிறது. (எ)

# புலிகளின் வரைவு, சமாதான முயற்சியில் ஒரு முக்கிய முன்னேற்ற நடவடிக்கை

## ஐரோப்பிய யூனியன் நாடுகள் வரவேற்பு

கொழும்பு,நவ.4

விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்கால நிர்வாக ஆலோசனை வரைவு, 'சமாதான முயற்சியில் ஒரு முக்கிய முன்னேற்ற நடவடிக்கை' என்று ஐரோப்பிய சங்க அங்கத்துவ நாடுகள் வருவேற்றிருக்கின்றன.

ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தூதரகம் விடுத்திருக்கும் அறிக்கை ஒன்றில் இந்த வரவேற்பு தெரிவிக்கப்பட்டிருப்பதோடு, கடந்த ஏப்ரல் முதல் தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாக இந்த வரைபு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையையும் தெரிவித்திருக்கிறது.

சர்வதேச நாடுகள் வழங்கும் உதவிகளுக்கும் சமாதான முயற்சியின் முன்னேற்றத்துக்குமிடையிலான தொடர்பை ஐரோப்பிய யூனியன் வலியுறுத்துவதாகவும் அறிக்கை தெரிவித்திருக்கின்றது. (எ)

# முள்ளியில் குடியமர குடும்ப விவரம் பதிவு

யாழ்ப்பாணம், நவ.4

அரியாலை, முள்ளி பிரதேசத்தில் தற்காலிக குடிசைகள் அமைத்து மீளக்குடியமர தெரிவுசெய்யப்பட்ட நூறு குடும்பங்களும் தமது விவரங்களை உடனடியாக அரியாலை மத்தி தெற்கு கிராம அலுவலரிடம் (ஜே96) பதிவுசெய்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குடிசைகளை அமைப்பதில் ஏதாவது பிரச்சினைகள் இருப்பின் அவற்றையும் -

அரியாலை, முள்ளிப் பகுதியில் காணி இல்லாதவர்கள் வேறு தனியார் காணிகளில் குறுகிய காலத்துக்கு குடிசை அமைத்து குடியமர்வது குறித்தும் -

நாளை புதன்கிழமைக்கு முன்னதாக கிராம அலுவலரிடம் தெரிவிக்க முடியுமென நல்லூர் பிரதேச செயலாளர் வி.வி.முருகையா தெரிவித்துள்ளார். (ஜ-9)

# கால்நடைகளை கட்டி வளர்க்க வேண்டுகோள்

தென்மராட்சி,நவ.4

தென்மராட்சி பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மற்றும் மேட்டுநிலப் பயிர்ச்செய்கை ஆகியவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால கால்நடைகளைக் கட்டி வளாக்குமாறு பெரும்பாக உத்தியோகத்தர் கே.எஸ்.சத்தியேந்திரன் கால்நடை வளர்ப்போரைக் கேட்டுள்ளார்.

பயிர்களை அழிக்கும் கட்டாக்காலி கால்நடைகள் அந்தந்த விவசாய சம்மேளனங்கள் மூலம் பிடிக்கப்பட்டு கட்டாக்காலிகள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (ஒ-117)


## பதவி வெற்றிடங்கள்

1) அலுவலக உதவியாளர்கள்
2) நிறுவன மேற்பார்வையாளர்

உரிய கல்வித் தகைமைகள், அனுபவச் சான்றிதழ்களின் பிரதியுடன் விண்ணப்பிக்கவும். (நிறுவன பழைய மாணவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

The Express Institute - அதிபர்.
Irupalai, Kopay.
(24365) (34-12-21-)

## விற்பனைக்கு

MD-90, Dawn, RK
லாண்ட் மாஸ்ரர்
விற்பனைக்குண்டு.
தொடர்பு:
060-2212649.
(24378) (34-12-21)

## பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதிக்கு கீழ்வரும் பணிநிலைக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து வேண்டுகை கோரப்படுகின்றது. ஆர்வமுடையோர் தங்களது தன்வரலாறு அடங்கிய (சுயவிவரம்) வேண்டுகைகளை 10.11.2003 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

**ஆய அலுவலர் (ஆண்கள் மட்டும்)**

கல்வித்தகைமை:
க.பொ.த. (உ/த) அல்லது க.பொ.த. (சா/த) உடன் ஈராண்டிற்குக் குறையாத துறைசார் பட்டறிவு.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
வருவாய்ப்பகுதிச் செயலகம்,
கிளிநொச்சி.

நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்:
11.11.2003 காலை 10.00 மணி.

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:
வருவாய்ப்பகுதிச் செயலகம்
யாழ். சாலை
கிளிநொச்சி.

குறிப்பு: நேர்முகத் தேர்வுக்கு கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத்தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும். (25-13-18-24) (சி-31072)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 12 - 09 - 1952



சிவன் அடியில் 05 - 10 - 2003

**திருமதி சிவக்கொழுந்து சிவராசா**

திதி: 04-11-2003 செவ்வாய்க்கிழமை

அன்பின் திருவுருவே...
பாசத்தின் உறைவிடமே...
உணர்வாய் எம்மோடு வாழும்
இதயதெய்வமே! நீ பிரிந்து
முப்பத்தொரு நாள்கள் சென்றாலும்
உம் நினைவலைகள் என்றும் ஆறாது

*உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

05.10.2003 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி சிவக்கொழுந்து சிவராசா அவர்களின் சிவபதப்பேறு குறித்து இன்று (04-11-2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகக் கலந்துகொண்டவர்களுக்கும், பல வழிகளிலும் ஆறுதல் கூறி உறுதுணை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் தந்தி, தபால், தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*கலுந்தில்,*
*கரவெட்டி மத்தி,கரவெட்டி.* (24340) (34-21-12)

- குடும்பத்தினர்.

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 07 - 12 - 1927



இறைவன் அடியில் 15 - 11 - 2002

# கந்தையா விஸ்வலிங்கம்

(ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகர், Rt.PHI)

திதி: ஏகாதசி 04.11.2003

*அன்பே!*

நீங்கள் எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு சென்று ஓராண்டு கடந்து
விட்டாலும் உங்கள் நினைவுகள்
எம் இதயங்களில் என்றும் வாழும்.
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

உங்கள் பிரிவால் என்றும் துயருடன் வாழும்:
மனைவி, மகள் - பாலகௌரி,
மருமகன் - இளங்கோ, தங்கை, மைத்துனர்
பெறாமக்கள், மருமக்கள், உறவினர்கள்.

456, மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(சி-31106) (26-12-34-21)

தகவல்: வி. அமிர்தசுரபி (மனைவி)


# இசை மூலம் விடுதலைப் போராட்டத்துக்கு வலுச்சேர்த்ததையிட்டு நிறைவடைகிறேன்

## பிரபல எழுச்சிப் பாடகர் சாந்தனுடன் நேர்காணல்

தமிழீழத்தின் முன்னணிப் பாடகர்களில் ஒருவராக இருந்து சுமார் நூற்றிஐம்பதுக்கும் மேற்பட்ட பாடல்களை பாடி லட்சக்கணக்கான தமிழ் நெஞ்சங்களில் நீங்கா இடம் பிடித்திருப்பவரான "இந்தமண் எங்களின் சொந்தமண்.." புகழ் எஸ்.ஜீ.சாந்தன் உதயன் 'கலைச்சுடர்' பகுதிக்கு வழங்கிய செவ்வி இன்றைய கலைச்சுடரை அலங்கரிக்கின்றது.

*கேள்வி:-* முதலில் உங்களைப் பற்றிக் கூறுங்களேன்?

*பதில்:-* என்னுடைய முழுப்பெயர் குணரத்தினம் சாந்தலிங்கம். நான் பிறந்த ஊர் புங்குடுதீவு. புங்குடுதீவு சண்முகநாதன் மகாவித்தியாலயத்தில் தான் கல்விகற்றேன். எனது தந்தையார் கொழும்பில் கடை ஒன்று வைத்திருந்தார். சிறுவயதில் எங்களது ஊரில் உள்ள கோயில்களில் நடக்கின்ற



இசை நிகழ்ச்சிகள் மற்றும் சின்ன மேளம் போன்ற கலை நிகழ்வுகளை ஆர்வத்துடன் பார்ப்பேன். அப்போது அந்த நிகழ்வுகளில் பாடுபவர்கள்போல நானும் பாடவேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் எழும். சிறுவயதில் நண்பர்களுடன் சேர்ந்து விளையாடும்போது நாங்கள் எங்களுக்குத் தெரிந்த சினிமாப் பாடல்களைப் பாடுவோம். பாடசாலையில் நடைபெறுகின்ற நிகழ்வுகளில் நானே விரும்பிக்கேட்டுப் பாடல்களைப் பாடுவேன். சிறுவயதில் பாடசாலையில் பல நாடகங்கள் நடித்திருக்கிறேன்.

ஒரு தடவை சாம்ராட் அசோகன் என்ற நாடகத்தில் புத்தபிக்குவாக நடித்தேன். அந்த நாடகம் அப்போது பல போட்டிகளில் வென்று தேசிய மட்டப் போட்டிவரை சென்றது. அப்போட்டி அனுராதபுரத்தில் நடந்தது. தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றது. அதில் நான் சிறப்பாக நடித்ததாக என்னை எல்லோரும் பாராட்டினார்கள். எனது குரலும் சிறப்பாக இருந்ததாகப் பலர் கூறினார்கள்.

*கேள்வி:-* நீங்கள் சிறந்த பாடகராக வருவதற்கு வேறு ஏதாவது பின்னணிக் காரணங்கள் இருக்கின்றனவா?

*பதில்:-* நான் முறைப்படி சங்கீதம் கற்றுக்கொள்ளவில்லை. ஆனால், எமது ஊரில் இருப்பவர்களெல்லாம் பெரும்பாலும் நன்றாகப்பாடக்கூடியவர்கள். இயற்கைஞானம் அவர்களுக்கு




நிறையவே இருந்தது. தாயாகவே அவர்கள் ஒரு பாடலைப் பாடினால் அதில் ஒரு வகையான இராகம் இருக்கும். காலையில் தேவாரம் பாடினால் அதில் 'பூபாளம்' கட்டாயம் இருந்தே ஆகும். அது அவர்களை அறியாமலே வந்த ஞானம். அதைப்போலவே எனக்கும் அவர்களைப் பார்த்து அவர்களைப் போலவே பாடவேண்டும் என்ற உந்துதல் எனக்குள் ஏற்படும்.

எனது தந்தையார் கொழும்பில் வியாபாரம் செய்ததால் நான் சிறுவயதில் விடுமுறைக்காலங்களில் அப்பாவோடு கொழும்புக்கு போய்வருவேன். அப்போது எனக்கு 12 வயதிருக்கும். சிவராத்திரி தினத்தன்று அப்பாவோடு கொழும்பில் நின்றிருந்தேன். அன்று கொழும்பு கதிரேசன் கோயிலில் இரவு ஆர்மோனியம் போன்ற இசைக் கருவிகளுடன் இசை நிகழ்வு ஒன்று நடந்தது.

நான் ஊரில் பாடுவதுபற்றி ஏற்கனவே அறிந்திருந்த எனது அப்பாவின் நண்பர்கள் அதில் என்னையும் பாடவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அதற்கமைய "மருதமலை மாமணியே முருகையா.." என்ற பாடலை பாடினேன். அப்போது அங்கிருந்த அனைவரும் என்னைப் பாராட்டினார்கள். பின்னர் அடிக்கடி என்னை அழைத்து பாட வைத்தார்கள். என்னைப் பொறுத்தவரை இது ஒரு விபத்து என்றுதான் கூறுவேன்.

*கேள்வி:-* இத்துறையில் தொடர்ந்து உங்களது வளர்ச்சி எப்படி அமைந்தது?

*பதில்:-* சிறுவனாக இருந்தபோது ஒருதடவை எனது பாடலைக் கேட்ட முகத்தார் வீடு எஸ். ஜேசுரட்ணம் அவர்கள் என்னை இலங்கை வானொலியின் 'சிறுவர்மலர்' நிகழ்ச்சியில் பாட வைத்தார். அங்கு பிரபல பாடகர்களான ஸ்ரீதர் பிச்சையப்பா, சீத்தாராமன், நித்தியகல்யாணி, காரளபிள்ளை போன்றோருடன் இணைந்து பாடக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

இளைஞனானதும் இசைக் குழுக்களில் பாடத்தொடங்கிய பின்னர் தனியாக ஓர் இசைக் குழுவையே ஆரம்பித்து நடத்தினேன். இவற்றின் ஊடாக மெல்ல மெல்ல இசை உலகிற்குக் காலடி வைக்கத் தொடங்கினேன்.

*கேள்வி:-* புரட்சிப்பாடல்களுக்குள் புகுந்துகொண்டது எப்படி?

*பதில்:-* ஆயுதப்போராட்டம் இந்த மண்ணில் ஆரம்பித்த காலப்பகுதியில். அதாவது, பல இயக்கங்கள் ஆரம்பித்த காலத்தில் பழைய சினிமா படங்களில் வந்த புரட்சிப்பாடல்களை ("தோல்வி நிலை என நினைத்தால்...", "நேருக்கு நேராய் வரட்டும்...") மேடைகளில் பாடுவேன். (எனது இசைக் குழுவில்).

பின்னர் இந்திய இராணுவம் இருந்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது மாவீரர் நாள் கிளிநொச்சி கோணாவிலில் நடைபெற ஏற்பாகி இருந்தது. அப்போது அதற்கு பொறுப்பாக இருந்தவர் தன்னை வந்து சந்திக்கும்படி என்னிடம் ஆள் அனுப்பினார். அது மிகவும் நெருக்கடியான காலகட்டம். இந்திய இராணுவம் ஒருபுறம், ஏனைய தமிழ்க்கட்சிகள் மறுபுறமாக இருந்த சூழல் நான் இசைக்குழு வைத்திருந்தபடியால் அவர்களில் பெரும்பாலானோருக்கு என்னைத்தெரியும். ஒருபுறம் மனதுக்குள் பதட்டம் இருந்தாலும், மாவீரர்நாளில் கலந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படவே அங்கு சென்றேன். கணேஸ் மாஸ்ரர் என்பவர் எழுதிய "வானம் பூமியானது பூமி வானம் ஆனது..." என்ற பாடலுக்கு மெட்டு அமைத்து அந்த மேடையில் பாடினேன்.

பின்னர் இந்தியப்படைகள் இங்கிருந்து வெளியேறிக்கொண்டிருந்த காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து பாடல்கள் சிலவற்றை ஒலிப்பதிவு செய்து கொண்டுவந்தார்கள்.

"நடந்து வந்த பாதை தன்னை திரும்பி பாரடா....", "வீரன் மண்ணில் புதையும் போது...." போன்ற பாடல்களை வந்திருந்த காலத்தில் இங்கிருக்கின்ற பாடகர்களைக்கொண்டு பாடல் செய்ய வேண்டும் என்ற நோக்கில் என்னிடமும் அணுகினார்கள்.

அப்போது முதன்முதலாக கண்ணன் மாஸ்ரர் அவர்களுடைய இசை அமைப்புடன் "இந்த மண் எங்களின் சொந்த மண்...." என்ற பாடலைப் பாடினேன். இசை அமைப்பும் நன்றாக அமைந்ததால் அது மிகவும் வெற்றியாக அமைந்துவிட்டது. அதைத் தொடர்ந்துதான் தமிழீழ எழுச்சிப் பாடல்களுக்குள் பிரவேசித்தேன்.

*கேள்வி:-* இன்றைவரை எத்தனை பாடல்களைப் பாடினீர்கள்? அது பற்றிய அனுபவங்களைக் கூறமுடியுமா?

*பதில்:-* இதுவரை சுமார் நூற்றிஐம்பதுக்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ளேன்.

"இந்த மண் எங்களின் சொந்த மண்" பாடும்போது எனக்கு பயம் இருக்கவில்லை. ஏனென்றால், அப்போது பாடத்தெரியுமே தவிர தாளம், இராகம், லயம் என்ற எதுவுமே தெரியாது. "லயம் இல்லாதவனுக்கு பயம இல்லை" என்பார்கள். அந்த வகையில என்னிடம் லயம் இருக்கவில்லை. அதனால் பயமும் இருக்கவில்லை.

எனக்குத தெரிந்ததுதான் சங்கீதம் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால், பின்னர் கண்ணன் மாஸ்ரர் போன்ற இசை மேதைகளைக் கண்டு அவர்களுடைய இசையில் பாடத் தொடங்கியபோதுதான் இசை என்பது பெரியகடல்... அதிலே ஒருதுளியைக கூட நான் எடுக்கவில்லை என்பது எனக்குப்புரிந்தது. எனவே, பிறகு பாடியபோதெல்லாம் மிகுந்த பதட்டத்துடன் - பயபக்தியுடன் - அவதானத்துடன் தான் பாடினேன்.

முதலாவது பாடலில் எடுத்துக் கொண்ட பெயரை விட்டுவிடக்கூடாது என்ற உணர்வுடன் ஏனைய பாடல்களையும் பாடினேன். அதற்கேற்ப புதுவை அண்ணா போன்றோரின் உணர்வுமிக்க பாடல்களைப் பாடும்போது அது சிறப்பாக அமைந்துவிடும்.

கண்ணன் மாஸ்ரர், புதுவை அண்ணா போன்றோர் நான் பாடகனாக வருவதற்கு முக்கிய காரணமானவர்கள்.

*கேள்வி:-* தமிழீழ எழுச்சிப் பாடலகளை பாடும்போது உங்களது மன உணர்வு எப்படியிருக்கும்?

*பதில்:-* ஆரம்பத்தில் அந்த உணர்வுகள் பெரிதாக ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால், பின்னர் என்னை அறியாமலே எனக்குள் அந்த உணர்வுநிலை ஏற்பட்டது. பெரும்பாலும் 'நெய்தலு'க்குப் பிறகே அத்தகைய நிலை ஏற்பட்டது. "ஆழக்கடல் எங்கும்..", "வெள்ளி நிலா விளக்கேற்றும் நேரம்..." போன்ற பாடல்கள் உண்மையிலேயே எமது உணர்வுகளின் உச்சத்தில் நின்று பாடிய பாடல்களாகத்தான் அமைந்தன.

ஒவ்வொரு பாடலையும் ஒவ்வொரு சம்பவங்களாக மனதில் வைத்துத் தான் நாங்கள் பாடுவோம்.

*கேள்வி:-* மாவீரர்களின் நினைவான பாடல்களைப்பாடும் போது ஏற்படும் மனநிலை வேறுபாடுகள் பற்றிக் கூற முடியுமா?

*பதில்:-* அதனை விவரிக்கவே முடியாது. எனது மூத்த மகன் மாவீராகி விட்டார். அத்துடன் என்னுடைய அருமை நண்பனும், சக பாடகருமான சிட்டு மற்றும் அவரைப்போல இன்னும் எத்தனையோ நண்பர்கள், உறவினர்கள் இன்று மாவீரர்களாகி விட்டார்கள்.

மாவீரர்களின் நினைவாக பாடலைப் பாடும்போது எனது மகனும் நண்பர்களும் கண்ணுக்குள் தெரிவார்கள். அப்போது சோகம் நெஞ்சை அடைக்க உச்சஸ்தாயியில் பாடுவேன்.

'சிட்டு' அவர்கள் சண்டைக்கு போகும்போது மாங்குளத்தில் தனது நண்பர் ஒருவரிடம் "இந்தச் சண்டையில் நான் வீரச்சாவடைந்தால் எனக்காகவும் ஒரு பாட்டுப்பாடுமாறு சாந்தனிட்டைச் சொல்லுங்கோ" என்று கூறி விட்டுச் சென்றாராம்.

சிட்டுவின் நினைவாக பாடல் பாடியபோது பெரியதொரு பாரத்தை தூக்கி நெஞ்சில் வைத்துக்கொண்டு பாடுவது போன்ற உணர்வு ஏற்பட்டது.

கரும்புலிகளோடு நான் உரையாடியிருக்கிறேன்; உறவாடியிருக்கிறேன். ஆனால், அவர்கள் வெடித்தபின்புதான அவர்கள் கரும்புலிகள் என்பது எமக்குத் தெரியவரும். அதன்பிறகு அவர்களின் நினைவாக பாடல் பாடும்போது எங்களை அறியாமலேயே சிலவேளைகளில் கண்களில் நீர்வழியும்.

இவ்வாறான பல சம்பவங்கள் எங்களது மனதை மிகவும் உருக்கியதாக இருந்தன.

*கேள்வி:-* தேசியத் தலைவரிடம் விருதுபெற்ற அனுபவங்கள் பற்றி....?

*பதில்:-* தேசியத் தலைவரை முதலில் நாங்கள் சந்தித்தபோது இது கனவா? நனவா? என்றுதான் யோசித்தோம். ஏனென்றால், பலவருடங்களாக போராளிகளாக இருப்பவர்கள் சிலருக்குக்கூட தலைவரைச் சந்திக்கின்ற வாய்ப்பு ஏற்படாது.

எங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைத்ததை எங்களாலேயே நம்பமுடியவில்லை. அவர் எமக்கு அருகில் வந்திருந்து கேட்டார். "நீங்கள் கலைஞர்கள் நகைச்சுவையாக பேசக் கூடியவர்களாக இருப்பீர்கள் பேசுங்கள்" என்றார். ஆனால், எங்களுக்கு மகிழ்ச்சிப் பிரவாகத்தினால் எதைக் கதைப்பது என்று தெரியாமல் இருந்தது. கடவுள் எங்களுக்கு முன்னால் வந்திருந்தால் கூட அவ்வாறான ஓர் உணர்வு ஏற்பட்டிருக்காது என்றுதான் கூறவேண்டும்.

அவரது கையினால் பலதடவை



கள் பரிசுகளைப் பெற்றிருக்கின்றேன். ஒவ்வொரு கசெற்றுக்கும் அவரது கையினால் பரிசு கிடைக்கும். அவரை ஓர் உறவினருடன் சந்திப்பதுபோல நாங்கள் சந்திப்போம். கலைஞர்களாக இருப்பதால் அந்தப் பாக்கியம் எமக்குக் கிடைத்திருக்கிறது.

அண்மையில் நாங்கள் வெளிநாட்டில் நிகழ்ச்சிக்காகப் போகும்போதும் எங்களை அழைத்து ஆசிகூறி வழி அனுப்பினார். நன்றாக அங்கு நிகழ்ச்சிகளைச் செய்யவேண்டும். இயக்கத்தினுடைய பெயரைக் காக்கவேண்டும் என்று கூறி அனுப்பிவைத்தார்.

மொத்தத்தில் அவரைச் சந்தித்த, அவரது கைகளினால் பரிசுபெற்ற சந்தர்ப்பங்களை வாழ்நாளிலே எங்களால் மறக்கமுடியாது.

*கேள்வி:-* அண்மையில் புலம் பெயர்ந்த நாடுகளுக்குச் சென்று வந்தீர்கள் அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுங்களேன்?

*பதில்:-* நாங்கள் வெளிநாடுகளுக்கு போகும்போது அங்கு எம்மவர்களின் நடை உடை பாவனையில் மாற்றங்கள் இருக்கும். அவர்கள் ஓர் அரை வெள்ளைக்காரர்களாக மாறியிருப்பார்கள் என்ற உணர்வுடன்தான் சென்றோம்.

ஆனால், அங்கு போனபின்புதான் தெரிந்தது அது முற்றிலும் தவறானது என்பது. அவர்கள் இன்னமும முகம் அழியாத தமிழர்களாகவே இருக

**சந்திப்பு : சந்திரமதனா**

கின்றார்கள். எமது தமிழ் கலாசாரத்தை உறுதியாகப் பின்பற்றுகிறார்கள். அதனை அழியவிடாது பாதுகாக்க எவ்வளவோ கஷ்டப்படுகின்றார்கள். அவர்களுக்கு நான் தலை வணங்குகின்றேன்.

இன்று வடபகுதியில் எவ்வளவோ மேலைத்தேய கலாசார, பண்பாட்டு, நாகரிகங்கள் புகுந்துவிட்டன. நடை உடை பாவனையில் இங்கு பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. ஆனால், வெளிநாடுகளில் எமது மக்கள் இன்னமும் இறுக்கமாக எமது கலாசாரங்களைப் பின்பற்றுகிறார்கள்.

மிகவிரைவாக தமிழீழம் கிடைக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். ஏனென்றால், தமது அடுத்த சந்ததி அங்கு மேலைத்தேய கலாசாரங்களை பழகிவிடுமோ என்ற கவலை அவர்களுக்கு இருக்கிறது. அதனால், விரைவில் தமிழீழம் மலர்ந்து இங்கு திரும்பிவந்து வாழவே அவர்கள் விரும்புகிறார்கள்.

பாடசாலைகளில் அவர்களது பிள்ளைகள் வேறுமொழியில் பாடங்களை படித்தாலும் கிடைக்கும் நேரத்தில் அவர்களுக்கு தமிழைப் படிப்பதற்கு அவர்கள் முயற்சி செய்கிறார்கள். தமிழ்க் கலைகளைக் கற்பிக்கின்றார்கள். அதனை பார்த்தபோது ஆச்சரியப்படாமல் இருக்கமுடியவில்லை. நோர்வே, டென்மார்க், ஹொலண்ட், ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்றோம். அங்கெல்லாம் எமது தமிழ்மக்கள் போராட்டத்தில் மிகுந்த விசுவாசத்துடன் இருப்பதை உணரமுடிந்தது.

எம்மைச் சிறப்பாக வரவேற்று உபசரித்தார்கள். இசை நிகழ்ச்சிகளை மிகவும் ஆர்வத்துடன் வந்து பார்த்து ரசித்தார்கள்.

சுவிஸிலே ஒரு தடவை நான் ஓர் அன்பருடைய காரிலே சென்றுகொண்டிருந்தேன். அப்போது காருக்குள் 'கல்லறைகள் விடை திறக்கும்...' என்ற பாடல் போடப்பட்டிருந்தது.

எனது குரலில் அமைந்த அந்தப் பாடலைக்கேட்டு அந்த அன்பருடைய கண்களில் கண்ணீர் வழிவதை அவதானித்தேன்.

எனக்கு அச்சரியமாக இருந்தது. ஏன் அழுகின்றீர்கள் என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் இந்தப் பாடலை எப்போது கேட்டாலும் என்னை அறியாமலே நான் அழுதுவிடுவேன் என்றார்.

இப்படியாக அங்குள்ள மக்கள் தலைவர் மீதும் மாவீரர்கள், போராளிகள் மீதும் மிகுந்த விசுவாசமாக இருக்கின்றார்கள்.

*கேள்வி:-* ஒரு கலைஞர் என்ற வகையில் விடுதலைப் போராட்டத்தில் உங்களது பங்களிப்பு எப்படி அமைந்தது?

*பதில்:-* விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை குறிப்பாக கடந்த 7 வருட வன்னி வாழ்க்கையில் நெருக்கடிகள் மிகுந்த நேரத்தில் மிகுந்த உணர்வோடு எம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்தோம்.

போர் உச்சமாக இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது தமிழர்களிடம் ஆயுதபலம் நிறையவே இருந்தாலும். ஆள்பலம் குறைவாகவே இருந்தது. அந்த ஆள்பலத்தை திரட்டுவதற்காக நாங்கள் எல்லாக் கலைஞர்களும் இணைந்து இரவுபகலாக மக்களிடம் சென்று ஆள்களைத் திரட்டினோம்.

இசை நிகழ்ச்சிகள் ஏனைய கலை நிகழ்ச்சிகள் பலவற்றை செய்து அதன் மூலம் ஆள்திரட்டியதில் எங்களுக்கு நிறையப் பங்கு இருக்கிறது என்றே நான் கருதுகின்றேன். அதுகுறித்து நான மன நிறைவடைகின்றேன்.

*கேள்வி:-* புலிகளின் யாழ்ப்பாணம மீளுகையின் பின்னர் மீண்டும் இங்கு வந்து பாடும்பொழுது எப்படியான உணர்வு ஏற்பட்டது?

கடந்த 7 வருடங்களாக யாழ். மக்கள் பல நெருக்கடிகளுடன் இருந்திருக்கிறார்கள். இளைஞர்கள் மத்தியில் இப்போது இங்கு சில தவறான நடவடிக்கைகள் தெரிகின்றன. நாங்கள் 95ஆம் ஆண்டுக்கு முன்னர் இங்கு இசை நிகழ்ச்சி செய்யும்போது இருந்த நிலைமைக்கும் இப்போது செய்யும் போது இருக்கும் நிலைமைக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது. அண்மையில் தீபாவளி தினத்தன்று கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பாடினேன்.

(11ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாக வரைபை கட்சிகள் பலவும் வரவேற்பு

## தே.ஐ.முன்னணி கூடி ஆராயும்

கொழும்பு,நவ.4

விடுதலைப் புலிகளின் ஆலோசனை வரைவு குறித்து பல கட்சிகளினதும் தலைவர்களும் சிரேஷ்ட தலைவர்களும் கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர். மலைய மக்கள் முன்னணி, மேல்மாகாண மக்கள் முன்னணி, இலங்கை சமசமாஜக் கட்சி ஆகியவை இந்த வரைவை வரவேற்றிருக்கின்றன.

**சந்திரசேகரன்**

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் கருத்துத் தெரிவிக்கையில், புலிகளின் வரைவைப் பார்க்கையில், இறுதி அரசியல் தீர்வுக்கு கூடுதலான வாய்ப்பு இருப்பதாகத் தெரிவதாகவும் ஆலோசனை வரைபின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் முற்றிலும் நியாயமானவை எனவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

புலிகளின் இந்த வரைபை அரசமைப்புத் தொடர்பான நிபுணர்களை இணைத்துக்கொண்டு மலையக மக்கள் முன்னணி ஆய்வுசெய்யும் எனவும் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்திருக்கிறார்.

**பட்டி வீரக்கோன்**

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பட்டி வீரக்கோன் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக வரைவு வரவேற்கத்தக்கது. அந்த சட்ட வரைபில் உள்ள குறைபாடுகளைப் பேச்சின் மூலம் தீர்த்துக் கொள்ளமுடியும்.

புலிகள் தங்களது மாற்று ஆலோசனைகளை முன்வைத்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். அந்த ஆலோசனைகளில் உள்ள சிக்கல்களை பேச்சின் மூலம் தீர்த்துக்கொண்டு நிரந்தர சமாதானத்துக்கான பேச்சுக்களை ஆரம்பிக்கலாம்.

**விக்கிரமபாகு கருணாரட்ண**

புதிய இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்ததாவது:-

தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டு, விடுதலைப் புலிகள் ஒன்றுபட்ட நாட்டுக்குள் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள இடைக்கால நிர்வாக வரைபை முன்வைத்திருப்பது வரவேற்கத்தக்கது.

அந்த வரைபில் வரவேற்கத்தக்க அம்சங்கள் இருக்கின்றன. சிக்கலான பிரச்சினைகளும் இருக்கின்றன. இப்பிரச்சினைகளை இருதரப்பும் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டுக்கு வரமுடியும்.

**அலவி மௌலானா**

ஸ்ரீலங்கா முஸ்லிம் சம்மேளனத் தலைவரும் மேல்மாகாண ஆளுநருமான அலவி மௌலானா தெரிவித்ததாவது:-

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இதுவரை சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொண்டது அர்த்தமற்றதாகிவிட்டது. புலிகள் முன்வைத்துள்ள ஆலோசனை வரைபுகளில் முஸ்லிம்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம்களின் அபிலாஷைகள் உள்ளடக்கப்படவில்லை.

அமைச்சர் ஹக்கீம் இங்கே இருந்து அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளுடனும் கூடிப்பேசி ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**ஹிஸ்புல்லாஹ் எம்.பி.**

தேசிய ஐக்கிய முன்னணி எம்.பியும் வடக்குகிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிய செயலாளருமான ஹிஸ்புல்லாஹ் கூறியதாவது:-

புலிகளின் வரைபு தொடர்பாக எமது ஒன்றியம் நாளை 5ஆம், 6ஆம் திகதிகளில் கூடி ஆராயும். அதன் பின்னரே எமது நிலைப்பாட்டைத தெரிவிக்க முடியும். இது ஒரு தேசிய பிரச்சினை என்பதால் தனிப்பட்ட முறையில் கருத்து வெளியிடுவது உசிதமாகாது.

**மனோ கணேசன்**

மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்திருப்பதாவது:-

அதிகாரசபை பிரதிநிதித்துவத்தின் அறுதிப் பெரும்பான்மை புலிகளிடம் தரப்பட வேண்டும் என்பது கொள்கை ரீதியாக மாத்திரமல்லாமல் நடைமுறையிலும் அவசியமானதொன்றாகும். ஏனெனில், இன்றும் வடக்கு - கிழக்கின் 60% நிலப்பரப்பு அவர்களது நிர்வாகத்திலேயே இருக்கின்றது. மதசார்பின்மை, வடக்கு - கிழக்கின் சிறுபான்மை மக்களது பாதுகாப்பு ஆகியவை நம்பிக்கை தருகின்றன. புலிகளின் நிர்வாகத்தின் கீழ் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கான சம உரிமைகள் மற்றும் கலாசார சுயாட்சி என்பவை வடக்கு - கிழக்கிற்கு வெளியில் வாழும் சிறுபான்மை மக்களுக்கு முன்னுதாரணமாக விளங்கும் என மேல்மாகாண மக்கள் முன்னணி எதிர்பார்க்கின்றது.

இலங்கை அரசமைப்பிற்குள் இந்த வரைபை நடைமுறைப்படுத்த முடியுமா என்ற வினா எழுப்பப்படுகிறது. இது தென்னிலங்கையில் ஓர் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தலாம். இது எதிர்பார்க்கக் கூடியதே. (எ)

# வலிகாமம், தென்மராட்சி வலய கணித - விஞ்ஞான போட்டி முடிவுகள்

வலிகாமம், தென்மராட்சி வலயப் பாடசாலைகளிடையில் வலய மட்டத்தில் நடத்தப்பட்ட கணித - விஞ்ஞானப் போட்டி முடிவுகள் வருமாறு:-

**வலிகாமம்**

வகுப்பு ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ தரம் 6:- வே.ஸ்ரீதேவி (மாதகல் சென்.ஜோசேப் வித்), து.புவனா (சுதுமலை சின்மய பாரதி வித்தி.), பு.திருமாறன் (மகாஜனக் கல்லூரி), சி.இந்துஜா (உடுவில் மகளிர் கல்லூரி - மூன்றாமிடம் இருவர்).

★ தரம் 7:- ந.தர்சிகா (யாழ்ப்பாணக் கல்லூரி), வெ.வைஷ்ணவி (மகாஜனக் கல்லூரி), க.கபீர்த்தனா (யூனியன் கல்லூரி).

★ தரம் 8:- சி.சிவவேணுகா (விக்ரோரியாக் கல்லூரி), உ.சாகனா (உடுவில் மகளிர் கல்லூரி), சி.முரளீதரன் (மகாஜனக் கல்லூரி).

★ தரம் 9:- ந.சாகினி (இளவாலை கன்னியர் மடம் ம.வி.), பா.கிரிபரன் (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), ப.தவப்பிரியன் (பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தி.),

★ தரம் 10:- ஆ.அனுசியா (மகாஜனக் கல்லூரி), ச.ஜெயந்தன் (யூனியன் கல்லூரி), கு.நிறோஜன் (மகாஜனக் கல்லூரி), சு.சௌதாமினி (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி. - மூன்றாம் இடம் இருவர்).

★ தரம் 12, 13:- ஆர்.செந்தூரன் (யாழ்ப்பாணக்கல்லூரி), எஸ்.பகீரதி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), சீ.சொ. தவஜீவ் (இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி).

**தென்மராட்சி**

கனிஷ்ட, சிரேஷ்ட, உயர்நிலைப் பிரிவு ரீதியான முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ கனிஷ்ட இடைநிலைப் பிரிவு - (தரம் 6,7,8)

வ.கோபிகா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), நா.லக்ஸனா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சு.பகீரதன் (மீசாலை வீரசிங்கம் ம.வி.).

★ சிரேஷ்ட இடைநிலை (தரம் 9,10,11)

சி.பத்மஜா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), சி.கருணதீபா (விடத்தற்பளை கமலாசனி வித்தி.), அ.கார்த்திக் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ம.தினேஸ் (மீசாலை வீரசிங்கம் ம.வி. - இரண்டாம் இடத்தை மூவர் பெற்றுள்ளனர்.).

★ உயர்நிலை (தரம்12,13)

ச.காயத்திரி (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), சி.கலைவதனி (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, முதலாம் இடத்தை இருவர் பெற்றுள்ளனர்).(எ-152-117)

# முன்பள்ளி இணைப்பாளர்களுக்கு 20 நாள் வதிவிடப் பயிற்சி

வடக்கு-கிழக்குப் பிராந்திய முன்பள்ளிகளின் இணைப்பாளர்களுக்கான இருபது நாள் கொண்ட வதிவிடப் பயிற்சி இன்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4மணிக்கு வதிவிடப் பயிற்சியின் ஆரம்பநிகழ்வு இடம்பெறும்.

வடக்கு-கிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் 'போரூட்' நிறுவனம் ஆகியவற்றின் ஆதரவுடன் இந்தப் பயிற்சி நடைபெறவுள்ளது.

வடக்கு- கிழக்கு ரீதியில் முதன்முறையாக மூவின மக்களையும் உள்ளடக்கியதாக நடைபெறும் முதலாவது பயிற்சியாக இது உள்ளது. (எ-6)



மூத்த கவிஞர் மன்னவன் கந்தப்புக்கு நெல்லியடி கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கலாசார பெருமன்றத்தினால் நடத்தப்பட்ட கௌரவிப்பு விழாவில் கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி வே.அம்பலவாணர் கவிஞருக்கு 'நகைச்சுவை மைந்தன்' என்ற பட்டத்தை வழங்கி பொன்னடை போர்த்து ஞாபகச் சின்னம் ஒன்றை வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

# தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு உப்பு மூடைகளுக்குள் ஹெரோயின் கடத்தும் முயற்சி முறியடிப்பு

தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு 7 கோடி ரூபா மதிப்புள்ள ஹெரோயின் போதைப்பொருளைக் கடத்த முயன்ற உப்பு ஏற்றுமதி கம்பெனி உரிமையாளர் உட்பட 6 பேரை சுங்கப் பகுதியினர் கைது செய்துள்ளனர். தூத்துக்குடி துறைமுகம் வழியாக இலங்கைக்கு போதைப்பொருள கடத்திச் செல்லப்படுவதாக நெல்லையில் உள்ள சுங்கப்பகுதி அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து, அதிகாரிகள் கடந்த 30 ஆம திகதி தூத்துக்குடி பழைய துறைமுக வாசலில் சோதனை நடத்தினர்.

உப்பு மூடைகளை ஏற்றிக்கொண்டு வந்த இரண்டு லொறிகளை சோதனை செய்தபோது 6 மூடைகளில் உப்புக்கு இடையில் ஒரு பொட்டலம் ஹெரோயின் போதைப்பொருள் வீதம் 6 பொட்டலங்களில் 7.21 கிலோ எடையுள்ள ஹெரோயின் மறைத்து வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

உப்பு ஏற்றுமதி கம்பெனி உரிமையாளர் தனசேகரன் (வயது51), அவரது உறவினர் கோடீஸ்வரன் (வயது45), சுங்கமுகவர் ராமதியாகராஜகுமார் (வயது23), லொறி டிரைவர்கள் முருகன் (வயது45), சக்திவேல் (வயது38) போதைப்பொருளை மதுரையில் வாங்கி இலங்கைக்குக் கொண்டு செல்ல முயன்ற இலங்கை மட்டக்குளியைச சேர்ந்த புஷ்பராஜ் (வயது32) ஆகிய ஆறு பேரையும் கைதுசெய்தனர். (எ)

## அடிக்கல் நடும் நிகழ்வு

நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலையின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை பாடசாலையின் சுவிஸ் அபிவிருத்தி இணையத்தின் முகவர் வெறேனா நோசர் நட்டுவைப்பார். (எ-4)

# 'குமுதினி' மீண்டும் சேவைக்கு திரும்புவது எப்போது?

குமுதினி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரேயொரு மோட்டார்ப் படகு. நெடுந்தீவு - குறிக்காட்டுவான் சேவையில் உள்ள இப்படகு, பழுதடைந்து நெடுந்தீவுத் துறைமுகத்தில் தரித்து விடப்பட்டுள்ளது. இது விரைவில் மீண்டும் சேவைக்கு வரும்போல் தெரியவில்லை.

1976இல் நெடுந்தீவுச் சேவையில் இப்படகு சேர்ந்து கொண்டாலும், 1962 ஆம் ஆண்டு முதல் கொழும்பு துறைமுகத்துள் அது பணியாற்றியுள்ளது. உண்மையில் அதன் வயது தற்சயம் 42இற்கு மேல் இருக்கலாம்.

நெடுந்தீவுச் சேவைக்கென பின்னாளில் அனுப்பிவைக்கப்பட்ட வடதாரகை, மணிமேகலை போன்ற படகுகள் 1985இல் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்து சேதமடைந்தும், படையினரின் பாவனைக்கென கொண்டு செல்லப்பட்ட பின்னர் இடம்பெற்ற தாக்குதலில் உடைந்தும் போக, குமுதினி மட்டுமே நெடுந்தீவு மக்களுக்கு உள்ள ஒரேயொரு அரச போக்குவரத்துச் சாதனமாக இதுவரை இருந்து வருகின்றது.

குமுதினிப்படகு அடிக்கடி நோய்வாய்ப்படுவதும் திணைக்கள வைத்தியர்களின் பார்வை படும்வரை கவனிப்பாரின்றித் தண்ணீரில் கிடந்து அவர்களின் கருணை பிறந்ததும் சிகிச்சை நிலையத்திற்கு அதாவது ஊர்காவற்றுறை நீலங்காடு பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுவதும் -

மருந்து வகைகளுக்கு (உதிரிப்பாகங்களுக்கு) தட்டுப்பாடு, கொழும்பில் இருந்து வரவேண்டும் எனக்கூறி அவற்றை எடுத்துவர மேலதிகமாக இன்னும் ஒரு இரண்டொரு மாதங்களாவது காலதாமதம் ஏற்படுவதும் வழமை. இப்படியான முறைகளில் தான் திருத்த வேலைகள் பெரும் சிரமத்துக்குள்ளாக ஆரம்பிக்கப்படும்.

ஒருதடவை திருத்த வேலைகளுக்கென எடுத்துச் செல்லப்பட்டால் குணமாகிவர நீண்ட மாதங்கள் பிடிக்கும் என்பது வழமையாகிவிட்டது.

2000ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதியில் இருந்து 22.08.2000ஆம் திகதி வரையும் -

பின்னர் 29.04.2002 முதல் 10.05.2002 வரை என பழுதடையும் ஒவ்வொரு காலப்பகுதியிலும் நீண்ட நாள்கள் இழுத்தடித்தே திருத்த வேலைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. படகு திருத்தத்திற்குகென அவ்வப்போது கணிசமான நிதி ஒதுக்கீடுகள் இடம்பெற்றாலும் கூட, நோயின் தன்மையைக் கண்டறிந்து உரிய சிகிச்சை முறைகளை மேற்கொள்வதை விடுத்து பாம்புக் கடிக்கு பனடோல் கொடுப்பது போன்ற சிகிச்சை முறைகளே அதாவது திருத்த முறைகளே கூடுதலாக நடைபெற்று வந்துள்ளது என்பது பொதுமக்களின் அபிப்பிராயம்.

கடல் நீர் உட்புகும்போது சமெந்துக் கலவை கொண்டு ஒருமாதிரியாகச் சமாளித்து விடலாம் தானே? அடிப்பாகத்தில் செப்புத்தகடுகளை பொருத்தும் போது உரிய ஊசி (ஆணி) போடாமலும் இருந்திருக்கலாம். அது நீருக்குள் மறைந்து விடும் பகுதி தானே? இப்போது செப்புத்தகடுகள்

**செய்திக்கட்டுரை**

சில கழன்ற நிலையும் காணப்படுகின்றது. வலை நட்டியும் உடைந்துள்ளது.

மாரி மழை காலங்களில் சைபீரியத் தாராக்கள் நெடுந்தீவுக்கு வருவது எப்படி வழமையானது ஒன்றோ, அதே போன்று மாரி மழை காலங்களில் குமுதினியும் நோய்க்கு இலக்காவது வழக்கமாகிவிட்டது. தடிமனோ! தும்மலோ! எதுவானாலும் ஒன்று நிச்சயம் வந்தேதீரும். அந்தவேளைகளில் நெடுந்தீவு மக்கள் பலத்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இப்போது நெடுந்தீவுக்குத் தேவை தரமான நவீன வசதிகள் கொண்ட இரண்டு மோட்டார் படகுகள். ஒன்றுக்கே வழியைக்காணோம், இரண்டு என்கிறானே என யாரும் எண்ணலாம். ஒன்று சேவையில் ஈடுபடவும், அடுத்தது சேவைக்குத் தயார் நிலையிலுமாக இரண்டு படகுகள் அவசியமானதே. இது 1974இல் இருந்து நெடுந்தீவு முன்னேற்றக்கழகத்தால் வலியுறுத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

முன்பெல்லாம் நெடுந்தீவில் இருந்துவரும் படகின் நிலைமைகளை அவதானிக்கும் பொருட்டு யாழ். நகரில் இருந்து சம்பந்தப்பட்ட திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் குறிகாட்டுவானுக்கு வந்து திரும்புவதுண்டு. குறிகாட்டுவானில் சிறிய அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டதற்கு முன்னரும் இப்படி இடம்பெற்றது. இப்போதோ யாராவது ஒரு உத்தியோகத்தர் வருகைதந்து நிலைமைகளை அவதானித்துச் சென்றதாக அறிய முடியவில்லை.

இப்போது புதிய படகு அவசரம் என எல்லோரும் வலியுறுத்துகிறார்கள். நெடுந்தீவுக்கு வருகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட நிதி ஒதுக்குகிறோம். நிச்சயம் புதிய படகுதருவோம் என்றெல்லாம் வாக்குறுதிகளை அள்ளி வீசிச் செல்கிறார்கள். 'அந்தப் பெரிய மண்டபம் (தேவா மண்டபம்) இங்கு எதற்கு? அதற்குச் செலவான பணத்தில் நல்லதோர் படகை கட்டியிருக்கலாமே' என்று மண்டபத்தை அமைப்பதில் முன்னின்றவர்களே தற்போது தெரிவித்துள்ளனர்.

குமுதினிக்கும் வயதாகிவிட்டது. உடல் ஆடத் தொடங்கியுள்ளது. உடல் முற்றாகத் தளர்ந்து உடைந்து போகும் நிலைக்குக் குமுதினியை உட்படுத்தாமல் தமிழீழப் போருடன் இணைந்து கொண்ட ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுச் சின்னமாக நெடுந்தீவுத் துறைமுகத்தில் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும் நெடுந்தீவு மக்களுக்கு உண்டு. 1985 ஆவணி 15ஆம் திகதியை யார்தான் மறக்கமுடியும்.

தாமதமின்றிப் புதிய படகுகளை வழங்க வேண்டிய பொறுப்பும் கடமையும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் உண்டு. முற்றாகச் சேதமடைவதற்கு முன்னதாக வரலாற்றுச் சின்னமாக அதனைப் பாதுகாக்க நெடுந்தீவு பிரதேச சபையும் மக்களும் செயற்பட வேண்டிய கட்டாயம் நெடுந்தீவைச் சேர்ந்த அனைவருக்கும் உண்டு. ★

**லக்ஸ்மன்**
**நெடுந்தீவு பிரதேச செய்தியாளர்**

# பயிற்சிகளை கடற்புலிகள் நிறுத்தாவிட்டால் நடவடிக்கை எடுப்போம் என்கிறது கடற்படை

## கண்காணிப்புக் குழுவுக்கு எழுத்து மூலம் தெரிவிப்பு

கொழும்பு,நவ.4

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடற்புலிகள் படகுகளைப் பயன்படுத்தி பயிற்சிகளை மேற்கொள்வதை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் தடுத்துநிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடின் தாங்கள் தலையிட்டு கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகக் கடற்படையினர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமையகத்திற்கு எழுத்து மூலமாகத் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து வெளியாகும் சிங்கள வார இதழ் ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

கடற்புலிகள் தமக்குச்சொந்தமான தாக்குதல் படகுகள் உட்பட 16 கடற் கலங்களைப் பயன்படுத்தி கடந்த மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் பயிற்சிகளை மேற்கொண்டதையடுத்தே கடற்படையினர் அது தொடர்பான முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

கண்காணிப்புக் குழுவினரை அழைத்துச் சென்று கடற்படையினர் புலிகள் பயிற்சி பெறுவதைக் காட்டியுள்ளனர்.

விடுதலைப் புலிகள் முன்னர் முல்லைத்தீவுக் கரையோரத்திலிருந்து சுமார் ஒன்றரை மைல் தூரத்திற்குள் அமைந்த பகுதியிலேயே தங்கள் கடற்பயிற்சிகளை மேற்கொண்டனர். ஆனால், தற்போது கரையில் இருந்து சுமார் 6, 7 கடல் மைல் தூரம் வரை சென்று அவர்கள் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்களது இத்தகைய பயிற்சிகளை நிறுத்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நடவடிக்கை எடுக்காவிடின் புரிந்துணர்வு உடன்பாட்டின் நிபந்தனைகளுக்கு இணங்க தங்களால் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கடற்படையினர் கண்காணிப்புக் குழுவினருக்குத் தெரிவித்துள்ளனர்.

இதுவரையும் கடற்படையினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு முன்னர் அது குறித்துக் கண்காணிப்புக் குழுவினருக்கு தெரிவித்து வந்தனர். ஆனால், தற்போது சந்தேகத்திற்கிடமான படகுகள் மீது சோதனைகள் மேற்கொள்வது மற்றும் மிகக் குறைந்தளவு பலப் பிரயோகத்தை மேற்கொள்ளுதல் ஆகிய நடவடிக்கைகளை கடற்படையினர் கண்காணிப்புக் குழுவினருக்குத் தெரிவிக்காமலேயே மேற்கொள்வர் எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ம)

# புத்தூர்-ஆவரங்கால் கடைகளில் காலாவதியான பொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம்,நவ.4

ஆவரங்கால், புத்தூர் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் கடந்த 27 ஆம் திகதி திங்களன்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் திடீர் பரிசோதனைக்கு உட்படுததப்பட்டன.

இந்தப் பரிசோதனையின்போது காலாவதியான பிஸ்கெட் வகைகள், பால்மா வகைகள், இனிப்புப் பண்டங்கள், ரின்பால் என்பன கைப்பற்றப்பட்டன.

அத்துடன், 2 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த திடீர் பரிசோதனைக் குழுவில் புத்தூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பொ.கோபாலேந்திரன், சிறுப்பிட்டி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.சின்றிமோகன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். (எ)

# சிறப்புப் படையணியின் நூல் வவுனியாவிலும் வெளியிடப்பட்டது

கிளிநொச்சி,நவ.4

விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் வெளியீடான 'நெருப்பாற்று நீச்சலற பத்தாண்டுகள்' என்ற நூலின் அறிமுக விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா முத்தையா மண்டபத்தில் மாலை 4 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செங்கதிர் ஏற்றிவைத்தார். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்புரையை வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் எழிலன் நிகழ்த்தினார். நூலினை படையணியின் தளபதி லெப்.கேணல் கோபி வெளியிட்டு வைத்தார். வெளியீட்டு உரையினை படையணியின் தாக்குதல் தளபதி அமுதாப்பும் மதிப்பீட்டுரைகளை இராணுவ ஆய்வாளர் டி.சிவராம் மற்றும் வவுனியா வடக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் கஜேபச்சந்திரன் ஆகியோரும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் போராளிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-9)

# தேசிய விளையாட்டு விழாவுக்கான அழைப்பிதழில் தமிழ்க் கொலை!

யாழ்ப்பாணம்,நவ.4

குருநாகலில் நடைபெற்ற மாபெரும் தேசிய விளையாட்டு விழாவுக்காக தமிழில் அச்சிடப்பட்ட நினைவு நாள் விழா அழைப்பிதழ்களில் படுமோசமான எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் விளையாட்டுத் துறை சார்ந்தவர்களுக்கும், ஏனைய பிரமுகர்களுக்கும் அனுப்பப்பட்ட இந்த அழைப்பிதழில் காணபடும் தவறுகள் பலருக்கும் அதிர்ச்சியைக்கொடுத்திருக்கிறது. விசேட பிரமுகர்களுக்காக (வி.ஐ.பி) அச்சிடப்பட்ட அழைப்பிதழிலேயே இவ்வாறு தமிழ்க்கொலை இடம்பெற்றிருக்கிறது.

அரச கரும மொழியாகிய தமிழ் மொழியை இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு இவ்வாறு கீழ்த்தரமான வகையில் அச்சிட்டு வெளியிட்டிருப்பது விளையாட்டு ஆர்வலர்களுக்கு கவலை அளித்திருக்கிறது.

இது தொடர்பாக சிலர் அமைசசுக்கு எழுத்து மூலம் முறையிடவுள்ளனர்.



யாழ். முஸ்லிம் வட்டாரத்திலுள்ள இக்ராஃ பாலர் பாடசாலையின் கலை நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். மக்கள் பணிமனையின் தலைவர் மௌலபி பி.ஏ.எஸ். சுபியான் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ)

# பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி 'பீ.ஏ' பரீட்சை முடிவு பன்னிரண்டாம் திகதி வெளியாகும்

திருகோணமலை,நவ.4

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகள் கிளையினால் கடந்த ஆண்டில் நடத்தப்பட்ட பொதுக்கலைமாணி பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் 12 ஆம் திகதி வெளியாகவுள்ளன.

இந்தவாரம் நடைபெறவுள்ள இடக்குநர் சபைக் கூட்டத்தை அடுத்து இந்தப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படும் என்று வெளிவாரிப் பரீட்சைக் கிளை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்கு பரீட்சை முடிவுகளுடன் சேர்த்து அடுத்த பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதியாக விண்ணப்படிவங்கள் இணைத்து அனுப்பி வைக்கப்படவுள்ளன என்றும் -

அவ்வாறு விண்ணப்பிப்பவர்கள் அடுத்தமாதம் நடைபெறவுள்ள பொதுக் கலைமாணிப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள பரீட்சையில் தோற்றவுள்ளோருக்கு விசேட கருத்தரங்குகளும் நடைபெறவுள்ளன. மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் வெளிவாரிப் பரீட்சைகள் கிளையின் 081-2388057 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-10)

# உள்ளூராட்சி அதிகாரிகள் குழு நாளை யாழ்ப்பாணம் வருகின்றது


யாழ்ப்பாணம்,நவ.4

தென்னிலங்கையின 34 உள்ளூராட்சி மன்றங்களின் உயரதிகாரிகள் குழு நாளை புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

சமஸ்தா லங்கா உள்ளூராட்சி மன்ற தலைவர் பி.முகாந்திரம் தலைமையில் வரும் இந்தக குழுவினர், நாளை மறுதினம் வியாழக்கிழமை முதல் தொடர்ச்சியாக நான்கு தினங்கள் குடாநாட்டில் உள்ள அனைத்து பிரதேச சபைகளுக்கும் விஜயம் செய்வர்.

துறைசார் நிபுணர்களின் கருத்தரங்குகளும் செயலமர்வுகளும் இந்த விஜயத்தின் போது இடம்பெறும் என பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி.கிருஷ்ணசாமி தெரிவித்தார். (எ-185)



நல்லூர் திருநெறிய தமிழிசை வெளியீட்டுக்கழகம் நல்லூர் கம்பன் கோட்டத்தில் அண்மையில் நடத்திய தேவார இசைமணி தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் பாடியுள்ள திருமுறை தேனமுது ஒலிப்பேழை - ஒலித்தட்டு வெளியீட்டு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கந்தர்மடம் ஸ்ரீ.சிவகுருநாத குருபீடத்தின் குருபீடாதிபதி ஸ்ரீமத். சோமாஸ்கந்தவேள் சுவாமிகள் அருளாசியுரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு சிறப்புரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். விழாவுக்குத் தலைமைவகித்த யாழ்.இந்து முன்னாள் பிரதி அதிபர் க.சிவராமலிங்கம் மற்றும் பிரமுகர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

*(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

# இப்படியும் நடக்கிறது திருட்டு!

நெடுந்தீவு,நவ.4

"பக்கத்து வீட்டில் வேலை செய்கிறோம் உங்களது கோடாரியை அல்லது கத்தியை வாங்கிவரட்டாம்" என்று கூறி அவை கிடைக்கும் பட்சத்தில் அவற்றை சுருட்டிக்கொண்டு மறைந்துவிடும் சம்பவங்களும் இப்போது யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வருகின்றன.

சுமார் 22,23 வயது மதிக்கத்தக்க இரு இளைஞர்கள் இப்படி ஏமாற்றி வாங்கிய அரிவாள் கத்தியுடன் மாயமாகிய சம்பவம் கடந்த வெள்ளியன்று கந்தர்மடம் - வீரமாகாளி அம்மன் வீதியில் இடம்பெற்றது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது, முதலில் ஒரு வீட்டிற்குச் சென்ற இளைஞர் தான் பக்கத்து வீட்டில் வளவு துப்புரவு செய்வதாகவும் உங்களிடம் கோடாரி அல்லது கத்தி இருந்தால் வாங்கிவரும்படி சொன்னார்கள் எனக் கூறியபோது வீட்டுக்காரர் தங்களிடம் அவை இல்லை எனக் கூறிவிட்டார்.

அடுத்த வீட்டிற்குச் சென்ற இந்த நபர் முன்சொன்னது போன்றே கூறியுள்ளார். பக்கத்து வீடு என்பதால் அவர்களும் தம்வசம் இருந்த அரிவாளைக் கொடுத்து உதவியுள்ளனர்.

அரிவாளை வாங்கிக் கொண்டு வந்த நபரும் அவருடன் வந்தவரும் பக்கத்து வீட்டிற்குச் செல்லாமல் சைக்கிளில் ஏறி விரைந்து மறைந்து விட்டனர். பின்னர் விசாரித்தபோதுதான் குட்டு வெளியானது. (மு-111)

## ரமழான் சிந்தனை



ரமழான் மாதம் எத்தகையதென்றால், அதில் தான் மனிதனுக்கு வழிகாட்டியாகவும், நேரான வழியினை தெளிவாக்கக் கூடியதாகவும், நன்மை, தீமையினைப் பிரித்தறியக் கூடியவாறுமுள்ள அல் குர்ஆன் (எனும் வேதம்) அருளப்பெற்றது. ஆகவே, அம்மாதம் வந்ததும் நோன்பிருங்கள்.

நன்றி : மக்கள் பணிமனை.

# இசை மூலம் விடுதலை...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது சுமார் 18 - 20 வயது மதிக்கத்தக்க இளைஞர்கள் பலர் போதையில் இருந்ததை அவதானிக்க முடிந்தது. அது மிகவும் வேதனையாக இருந்தது. இருப்பினும், இப்போது 18 - 20 வயதில் இருப்பவர்களுக்கு 1995ஆம் ஆண்டு 10 - 12 வயதுதான் இருந்திருக்கும் எனவே, அவர்களுக்கு போராட்டத்தின் மகிமை, அதன் துன்பச் சுமைகள் என்பவற்றைத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அத்தகைய இளைஞர்கள் திட்டமிட்டு திசைதிருப்பப்பட்டிருக்கலாம் எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

எப்படி இருப்பினும், இங்குள்ள மக்களின் அடி உணர்வு நிலைகளில் மாற்றங்கள் எதனையுங் காண முடியவில்லை. தமிழர்கள் என்ற வகையிலே விடுதலைப் போராட்டத்தின் மீதான பற்றுதியும் தலைவர் மீதான விசுவாசமும் இம்மியளவும் மக்களிடம் குறைந்து விடவில்லை என்பதே எனது கருத்தாகும்.

அண்மையில் இங்கு பலதடவைகள் இசை நிகழ்ச்சிகளை செய்தோம். அப்போது, யாழ். மக்கள் மத்தியில் அதற்கு இருந்த வரவேற்பையும், உற்சாகத்தையும் கண்டு உண்மையில் நெகிழ்ந்துதான் போனேன்.

கேள்வி:- எதிர்காலத்தில் இசைத் துறையில் உங்களது பங்களிப்பு எப்படி அமையும்?

*பதில்:-* இசை என்பது என்னைப் பொறுத்தவரையில் கடவுளால் எனக்கு கொடுக்கப்பட்ட கொடை என்றே கருதுகின்றேன். எனவே, தொடர்ந்தும் என்னால் இயன்றவரை விடுதலைப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் பாடல்களைப் பாடிக்கொண்டே இருப்பேன்.

இன்னும் எவ்வளவுகாலம் பாடுவேன் என்பது ஆண்டவனைப் பொறுத்தது. மக்கள் எனது பாடல்களுக்கு வரவேற்புத் தந்திருப்பதை என்னால் உணரமுடிகிறது. அதேநேரம், மக்களுக்கு எனது குரல் பிடிக்கவில்லை - அவர்கள் அதனை ரசிக்கவில்லை - என்ற கட்டம் வந்தால் நான் பாடுவதை நிறுத்திவிடுவேன். ★

# மயூரணி கொலை வழக்கில் திடீர் திருப்பம் பாலபிரசன்னா மட்டும் முக்கிய எதிரி

இலங்கை மாணவி மயூரணி கொலை வழக்கில் பாலபிரசன்னா மட்டும் முக்கிய எதிரியாக சேர்க்கப் பட்டுள்ளார்.

சோலைமலைத்தேவர் உட்பட 4 பேர்விடுவிக்கப்பட்டு உள்ளதால் இந்த வழக்கில் திடீர் திருப்பம் ஏற்பட் டுள்ளது.

இந்த கொலை தொடர்பாக மாண வன பாலபிரசன்னா, கல்லூரி நிறுவனர் சோலைமலைத்தேவர்,அவரது மனைவி ராக்கம்மாள், வேலைக்காரர் வீரணன் மாணவன் ஹாஜி அலி ஆகிய 5பேரை பொலீஸார் கைதுசெய்தனர்.

இந்த வழக்கு மதுரை நீதிமன்றத் தில் நடந்துவருகிறது. இந்த வழக்கில் இதுவரை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் இருந்து வந்தது. இந்த நிலையில் அண்ணா நகர் பொலீஸ் இன்ஸ்பெக்டர் மாரிமுத்து பெண் பொலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் மீனாம் பிகை ஆகியோர் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தனர்.

அந்த குற்றப்பத்திரிகையில் குறிப் பிடப்பட்டு இருப்பதாவது:-

இலங்கை திருகோணமலையை சேர்ந்தவர் தியாகராஜா. அரச அதிகாரி. இவரது மகள் மயூரணி (வயது24) இவர் கணனிப் படிப்பில் பட்டம் பெற வேண்டும் என்ற தீராத ஆசையில் இந் தியா வந்தார். மதுரை அண்ணா நக ரில் உள்ள ஒரு கல்லூரியில் பி.எஸ்சி. இரண்டாம் ஆண்டு படித்து வந்தார்.

கல்லூரி நிறுவனர் சோலைமலைத் தேவர் வீட்டின முதல் மாடியில் உள்ள பின்புற அறையில் தங்கி படித்துவந்தார்.

அப்போது அதே வீட்டில் இரண் டாவது மாடியில் தங்கி மயூரணி படித்து வந்த கல்லூரியைச் சேர்ந்த மெட்ரிக் குலேசன் பள்ளியில் இலங் கையைச் சேர்ந்த மாணவன் பாலபிர சன்னா பிளஸ் 2படித்து வந்தார். அவர் தனது நீண்ட நாள் ஆசையான மருத் துவராகவோ, என்ஜினீயராகவோ ஆக வேண்டும். என்ற எண்ணத்தில் தங்கிப் படித்துவந்தார். பள்ளி இறு தித் தேர்வில் கணக்குப் பாடத்தை சரியாக எழுதாததால் தான் எதிர் பார்த்த அளவு மதிப்பெண் பெறமுடி யாது என எண்ணினார். இதனால் அந்த தேர்வுத்தாளில் முழு மதிப் பெண் பெறுவதற்கு முயற்சித்தார்.

அப்படிச் செய்வதற்கு பணம் அதி கம் தேவைப்படும் என பாலபிர சன்னாவின் நண்பர்கள் கூறினர். இதற்காக ரூ.30 ஆயிரத்தில் இருந்து 40 ஆயிரம் வரை பாலபிரசன்னாவுக்கு தேவைப்பட்டது. இதனால் இலங்கை மாணவி மயூரணியிடம் உள்ள கணனி, பணம், நகைகள் ஆகியவற்றை கொள் ளையிட திட்டம் போட்டு உள்ளார். அதற்காக மயூரணியைக் கொலை செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டு அதற்காக கையுறை கத்தி ஆகிய வற்றை பாலபிரசன்னா வாங்கித் தயா ராக வைத்து உள்ளார்.

கடந்த 22.04.2003 அன்று பாலபிர சன்னா பிற்பகல் சுமார் 3மணி அள வில் மயூரணியின் அறைக்குச் சென்று தனியாக இருந்த மயூரணியை கட்டை யால் தலையில் தாக்கி மயக்கம் அடையச் செய்து விட்டு கணனி மற்றும அதன் உதிரி சாதனங்கள், பணம் ரூ.5 ஆயிரம் ஆகியவற்றை கொள்ளை அடித்துச் சென்று உள்ளார். பின்னர் நகையை எடுப்பதற்காக மீண்டும் வந்த போது தனது இடது கையில்வைத்து இருந்த கத்தியால் மயூரணியின் கழுத தில் குத்தி கொலை செய்து விட்டு அவள் அணிந்திருந்த எம் டாலருடன கூடிய தங்கசெயின், தங்க பிரெஸ் லெட், செல்போன் ஆகியவற்றை கொள்ளை அடித்துச் சென்று உள்ளார்.

இது சம்பந்தமாக சோலை மலைத் தேவர் கொடுத்த புகாரின் பேரில் அண ணாநகர் பொலீஸார் வழக்குப்பதிவு செய்து கடந்த 26.04.2003அும் திகதி பாலபிரசன்னா, சோலைமலைத்தேவர், அவரது மனைவி ராக்கம்மாள், வேலைக காரன் வீரணன், மாணவன் ஹாஜி அலி ஆகியோரை கைது செய்து நீதி மன்றக் காவலுக்கு அனுப்பிவைத்தனர்.

மேல் விசாரணையில் இலங்கை மாணவன் பாலபிரசன்னா தனது பணத் தேவைக்காக மயூரணியை கட்டை யால் தலையில் அடித்து மயக்கம் அடையச் செய்து கத்தியால் குத் திக் கொலை செய்து விட்டு சுமார் ரூ.40 ஆயிரம் பெறுமதியான கணனி மற்றும் அதன் உதிரிப்பாகங்கள் பணம் 5ஆயிரம், டாலருடன் கூடிய செயின், பிரெஸ்லெட், செல்போன் ஆகியவற்றை கொள்ளை அடித்துச் சென்று உள்ளது தெரிகிறது. இத னால் பாலபிரசன்னா மயூரணியை கொலை செய்து கொள்ளை அடித்த குற்றத்திற்காக 449, 302, 392 உடன் இணைந்த 397ஆவது பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய் யப்பட்டு உள்ளது.

- இவ்வாறு அதில் கூறப்பட்டு உள் ளது.

மயூரணி கொலை வழக்கில் பால பிரசன்னா, கல்லூரி நிறுவுனர் சோலை மலைத்தேவர், அவரது மனைவி ராக் கம்மாள், வேலைக்காரன் வீரணன், மாணவன் ஹாஜி அலி ஆகிய 5பேர் முதலில் கைது செய்யப்பட்டனர். இந்த நிலையில் மதுரை நீதிமன்றத்தில் பாலபிரசன்னா மீது மட்டும் குற்றப்பத் திரிகை தாக்கல் செய்யப்பட்டு உள் ளமை திடீர் திருப்பத்தையும் சந் தேகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

# குரங்குபாஞ்சானுக்கு சென்று மூக்குடைந்தது போதாதென்று சிங்கள-தமிழ் கலைக்கூடலிலும் சிஹல உறுமய அட்டகாசம்

## அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கிறார் செல்லச்சாமி

குரங்குபாஞ்சானுக்கு ஊர்வலம சென்று மூக்குடைந்த சிஹல உறுமய சிங்கள - தமிழ் கலைக கூடலின் போது நடத்திய அட்டகாசததை எவ்வகை யிலும் மன்னிக்க முடியாது.

இனவாதத்தின் உச்சக்கட்டத்தை சிஹல உறுமய அப்பட்டமாக வெளிக் காட்டியுள்ளது. வளரும் ஒற்றுமையைச் சீகுலைககத் திட்டமிட்டு மேற்கொள்ளப் பட்ட இந்த குழப்பம் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

- இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவரும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் ஆலோசகருமான எம்.எஸ்.செல்லச் சாமி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

உலக சமூகத்தின் ஆசீர்வாதத் தோடும் நல் ஆதரவுடனும் முனனெடுக் கப்பட்டுள்ள சமாதானப் பயணத்தை சீர்குலைத்து இன முரண்பாடுகளை வளர்த்து அதன மூலம் நாட்டையும் மக்களையும் சீர்குலைப்பதே சிஹல உறுமயவின் ஒரே எண்ணமாகும். சிங் கள, தமிழ் கலைக்கூடலின் போது காட்டுத்தர்பார் நடத்தி தமிழ் மக்க ளுக்கு எதிராக கோசங்களையும் இக்குழப்பக்காரார்கள் எழுபபியுள்ள னர்.

இது அவர்களின் இனவாதத்தின் உச்சக்கட்டமாகும். இந்தக் குழப்பத் தில் சிஹல உறுமய மட்டுமன்றி வேறு பல தீய நாசகார சக்திகளும் பங்கெ டுத்து இருந்ததாக சந்தேகம் எழுகின் றது.

இந்தக் கலைக்கூடல் நிகழ்வில் புத்தி ஜீவிகளே கூடுதலாகப் பங்கு பற்றியுள்ளனர். கலை இலக்கியவா திகள் பங்கெடுத்தனர். பழைய நிகழ் வுகளை எல்லாம் மறந்து புதிய சிந் தனையோடு நாடும் மக்களும் சமா தானத்தை நோக்கி நடைபயிலும் இந்த நல்ல சூழலில் மீண்டும் இந் நாட்டை இரத்தக் காடாக்க எந்தச் சமூகத்தினரும் தயாரில்லை.

காடைத்தனங்களுக்கும், காட்டு மிராண்டிச் செயல்களுக்கும் இனியும் இடமளிக்க முடியாது. முழு நாட்டுக்கும அவமானத்தை உருவாக்கிய சிஹல உறுமயக்காரர்களுக்கு எதிராக அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

### கிராமிய அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன்

# உற்பத்திப் பொருள்களை இனம்காண ஐந்து இடங்களில் களஞ்சியங்கள்

யாழ்ப்பாணம்,நவ.4

கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன், குடாநாட்டில் உள்ள 5 பிரதேச செயலர் பிரிவுகளில் உற்பத்திப் பொருள்களை இனங் கண்டு அவற்றை களஞ்சியப்படுத்தி விநியோகிப்பதற்கான களஞ்சியங் கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கென கிராமிய பொருளா தார அமைச்சு 25 லட்சம் ரூபாவை முதற்கட்டமாக வழங்கியுள்ளது.

தென்மராட்சி, சண்டிலிப்பாய் ஆகிய பிரிவுகளில் விவசாய உற்பத் திப் பொருள்களைக் களஞ்சியப்படுத்தி விநியோகிப்பதற்கான களஞ்சியமும் -

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மீனைக் களஞ்சியப்படுத்து வதற்கான களஞ்சியமும் -

கோப்பாய் பிரிவில் பால் களஞ்சியப் படுத்துவதற்கான களஞ்சியமும் -

உடுவிலில் பழவகைகளைக் களஞ் சியப்படுத்துவதற்கான களஞ்சிய மும் அமைக்கப்படவுள்ளன.

'ஒரு கிராமம் ஒரு உற்பத்தி' என்ற திட்டத்திற்கு அமைய குறிப் பிட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் ஒவ்வொரு கிராமம் தெரிவுசெய்யப் பட்டு, அக்கிராம மக்களின் பங்களிப் புடன் இக்களஞ்சியங்கள் அமைக் கப்படும். தொடர்ந்து பிரதேச செய லர்களின் மேற்பார்வையின் கீழ் இந்தக் களஞ்சியங்கள் இயங்கும்.

இத்திட்டத்தின் ஆரம்ப கட்ட வேலைகளை ஆரம்பிப்பது பற்றி ஆராய்வதற்கான கூட்டம் நேற்றுக் காலை யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாய கம்போல் தலைமையில் நடைபெற் றது. யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் என்.ரவிராஜ், உதவித் திட்ட மிடல் பணிப்பாளர் எஸ்.சிவபாதசுந் தரம் மற்றும் பிரதேச செயலர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்த்தனவி னால் இத்திட்டத்திற்கென ஒதுக்கப் பட்ட 25 லட்சம் ரூபா நிதியினை நாடா ளுமன்ற உறுப்பினர் என்ரவிராஜ் பெற்று அத்னை நேற்றைய கூட்டத்தில் ஒவ் வொரு பிரதேச செயலர் பிரிவுகளுக் கும் தலா 5 லட்சம் ரூபாவை காசோ லையாக பிரதேச செயலர்களிடம் கையளித்தார்.

இதன்மூலம் இத்திட்டம் செயற் படுத்தப்பட்டு, இது தொடர்பான இடைக்கால அறிக்கை ஒன்று கிரா மிய பொருளாதார அபிவிருத்தி அமைச் சிடம் கையளிக்கப்பட்டதும், இதற் கான மிகுதிக்கொடுப்பனவு வழங்கப் படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கான நிதியினை வழங்குமாறு யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களும், இந்து கலா சார அமைச்சர் தி.மகேஸ்வரனும் கிராமிய பொருளாதார அமைச்சிடம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(மற்றொரு செய்தி 6ஆம் பக்கத்தில்) (எ-8)

# போக்குவரத்து விழிப்புணர்வை துண்ட பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பு

யாப்பாணம்,நவ.4

யாழ் பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையமும் ஏனைய சாயி அமைப் புகளும் இணைந்து ஏற்பாடு செய்தி ருக்கும் போக்குவரத்து பாதுகாப்பு விழிப்புணர்வு வாரத்தை ஒட்டி யாழ். நகரப்பகுதி பாடசாலைகளில் மாண வர்கள் விழிப்புணர்வு அணிவகுப்புக் களை நடத்திவருகின்றனர்.

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தி யாலய மாணவர்கள் நேற்றுக்காலை 8.30 மணிக்கு சுலோக அட்டைகளைச் சுமந்தவாறு வீதிக்கு வெளியே வந்து அணிவகுப்பில் ஈடுபட்டனர். மாணவர்களுடன் பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் சத்திய சாயி நிலைய உறுப்பினர்களும் இந்த அணிவகுப் பில் கலந்துகொண்டனர்.

பாடசாலையில் இருந்து புறப்பட்டு நல்லூர் பின் வீதி வழியே பருத்தித் துறை வீதிக்குச் சென்று வீதியின் இருமருங்கிலும் சிறிது நேரம் அணி வகுத்து நின்றனர்.

போக்குவரத்துப் பாதுகாப்பு விழிப் புணர்வுச்சியைத் தூண்டும் பிரசுரங் களும் அங்கு விநியோகிக்கப்பட்டன. யாழ் பெருமாள் கோவிலடியில் உள்ள சன்மார்க்க வித்தியாலய மாணவர் களும் நேற்றுக்காலை இத்தகைய அணிவகுப்பு ஒன்றில் ஈடுபட்டனர்.

போக்குவரத்து விழிப்புணர்வைத் தூண்டும் இதுபோன்ற பல நிகழ்ச் சிகள் எதிர்வரும் 7ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன. (ஐ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



காரைநகரைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வதிவிடமாகவும் கொண்ட வ.பி.போ.ச. சிரேஷ்ட சாலைப் பரிசோதகரும், தேசிய ஊழியர் சங்க அமைப்பாளரும், சிவகௌரி சனசமூக நிலைய முன்னாள் தலைவரும், சிறந்த சமூகசேவையாளருமாகிய

### திரு. செல்வரத்தினம் செல்வராசா

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்தமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் அவரது சமூகசேவை நன்கு தொடர வேண்டுமென்று இறைவனை வேண்டி மகிழ்ச்சியுடன் வாழ்த் துகின்றோம்.

R.ஸ்ரீபவன், R.சிவனேசன்

(24329)(34-14-17) (சாலைப் பரிசோதகர், யாழ். சாலை, கோண்டாவில்).



## அமெரிக்கா விசா லொத்தர் (GREEN CARD)

E.Mail மூலம் அமெரிக்கா விசா லொத்தர் விண்ணப்பிப்பதற்கு தொடர்புகொள்ளவும்.

# ஸ்ரீமுருகன்

303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021-222-2670
Fax: 021-222-3214
e mail-del-smskr@eureka.LK

திருமுருகன்
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
T.P.: 021 - 222 7310

(C/3115) (30-14-17)


## தெல்லிப்பழையில் நேற்று மூளைக்காய்ச்சல் தடுப்பூசி

வலிவடக்கு,ஒக்.04

தெல்லிப்பழை வைத்திய அதி காரி பிரிவில் ஜப்பானிய மூளைக் காய்ச்சலுக்கான தடுப்பூசி வழங்கும் பணி நேற்று நடைபெற்றது.

தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலை யத்திலும், அளவெட்டி, சுன்னாகம், ஏழாலை, இணுவில், புன்னாலைக் கட்டுவன், உடுவில் பகுதிகளிலுள்ள மத்திய மருந்தகங்களிலும் இத் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

(எ-150-86)


## தவறிவிட்டது

கொடிகாமத்தில் இருந்து யாழ். நோக்கி வந்த மினிபஸ்ஸில் தேவகி சுப்பிரமணியம் என்பவருடைய தே.அ.அட்டை (இல - 808052105V) வி.அ.அட்டை, பல்கலைக்கழக அ.அட்டை, சாரதி அனுமதிப் பத் திரம், கைபடக்கத் தொலைபேசி என்பன அடங்கிய பேஸ் தவறிவிட் டது. கண்டெடுத்தவர்கள் தேவகி சுப்பிரமணியம், கச்சாய் வடக்கு, கொடி காமம் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (24395) (30)



## யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

### புதிய ஆண்டுக்கான மாணவர் அனுமதி - 2004

### தரம்-6

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களை 14.11.2003 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அலுவலக நேரத்தில் பெற்று 20-11-2003ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப் பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். ஆண்/பெண் இருபாலா ருக்குமான அனுமதிகள் வழங்கப்படும்.

*(நேற்றுப் பிரசுரமான இதே விளம்பரத்தில் தரம் 6 என்பதற்குப் பதிலாக தரம் 1 என்று தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம்)*

(சி-3116)(21-14-17) - அதிபர்



## மரண அறிவித்தல்

### திருமதி திருமணச்செல்வி பரமநாதர்

மூர்த்தி வீதி, தையிட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருமணச்செல்வி பரமநாதர் அவர்கள் 02.11.2003 ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து பரமநாதரின் மனைவியும் காலஞ்சென்ற ஞானயோகன் மற்றும் ஞானயசோதா, ஞானவேல் ஆகி யோரின் அன்புத் தாயாரும் சிவகுமார், கவிதா ஆகியோரின் மாமியும் பிருந்தா, வக்சிகா, மகியந்தி, சபீஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.11.2003 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கன்னான் லேன், இராஜ வீதி, கோப்பாய் தெற்கு.* (24399)(30-14-17)

தகவல்: ப. ஞானவேல் (மகன்)

# வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு எவற்றை வழங்கலாம்?

**சர்வதேச மட்டத்தில் பெரிய அளவில் செயற்படும் வங்கிகளில் சிற்றி வங்கியும் (CITY BANK) ஒன்று. இந்த வங்கி 102 நாடுகளில் கிளைகளைக் கொண்டுள்ளது. சிறிலங்காவில் இந்த வங்கியின் வியாபார நடவடிக்கைகளுக்குப் பொறுப்பு வகிப்பவர் வங்கி நடவடிக்கைகள் தொடர்பான நிறைந்த அனுபவமுடைய கபில ஜயவர்த்தனா ஆவார். பொருளாதார மற்றும் வங்கி நடவடிக்கைகள் தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துக்களை 'லங்காதீப' நாளிதழ் தொகுத்து வழங்கியுள்ளது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

கடந்த காலத்தில் தாழ்வுற்ற நிலையிலிருந்த இந்நாட்டின் தேசிய பொருளாதாரம் மிக வேகமாக முன்னேற்றமடைய ஆரம்பித்துள்ளது. பங்குச் சந்தை வியாபார அதிகரிப்பு. ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு மற்றும் வெளிநாட்டு உதவி ஆகிய பல காரணங்களால் நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்குப் புதிய வலு கிடைத்துள்ளது. இவ்வருட ஆரம்பத்தில் 5.6 வீதம வரையான வேகத்தில் பொருளாதார வளர்ச்சி காணப்பட்டதாக அரசு தெரிவித்துள்ளது. ஆனால், இவ் விடயத்தில் சிறு குற்றச்சாட்டொன்றும் இல்லாமலில்லை. இது இந்நாட்டின் ஏழ்மையில் வாழும் பொதுமக்களால் சுமத்தப்படும் குற்றச்சாட்டாகும்.

அரசு தெரிவிக்கும் அபிவிருத்தியின் பலன் தமக்குக் கிட்டவில்லையென இப் பொதுமக்கள் குறை கூறுகின்றனர். தனவந்தர்களுக்கு இதனால் பல வசதி வாய்ப்புக்கள் கிட்டியபோதிலும், ஏழைப் பொதுமக்களுக்கு இதனைவிட மேலாக ஏதாவது அரசு செய்தாக வேண்டுமென அவர்கள் கருதுகின்றனர்.

இவ்விடயத்தில் ஓரளவு உண்மையும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அது மிகுந்த அவதானத்துடன் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதொன்றாகும். அரசினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான பலாபலன் கிட்ட ஆரம்பித்து இப்போது ஏழெட்டு மாதங்களே கழிந்துள்ளன. அதற்கு முன்னர் 2001ஆம் ஆண்டில் மந்த நிலையில் காணப்பட்ட இப்பொருளாதார அபிவிருத்தி தற்போது இவ்வகையில் உயர்வு அடைய ஆரம்பித்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதொரு விடயமே.

பொருளாதார அபிவிருத்தியில் வளர்ச்சி காணப்பட்டமையையடுத்து நாட்டின் பணவீக்கம் தற்போது குறைவடைந்துள்ளது. முன்னர் 12 மற்றும் 13 விகிதமாகக் காணப்பட்ட பணவீக்கம் தற்போது 7 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. இவ்வாண்டு முடிவில் இது 6 சதவீதமாகக் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் பணவீக்க வேகம் குறைவடைந்ததையடுத்துப் பொதுமக்களுக்குச் சில நன்மைகள் கிட்டியுள்ளன. நாட்டில் பொருள்களின் விலையுயர்வு வேகம் குறைவடைந்துள்ளது. ஆனால், இதன் காரணமாக எவராவது பொருளகளின் விலை குறைந்துள்ளதெனக் கூறினால் அது உண்மையான கருத்தாக அமையாது. ஆதலால், தற்போதும் சிரமத்துடன் வாழ்க்கை நடத்திவரும் ஏழை மக்கள் இப்பொருள்களின் விலை விவரம் தொடர்பாக குற்றம் சுமத்தியே வருகின்றனர்.

எதிர்வரும் 12ஆம் திகதி அரசினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத்திட்டம் முக்கியமானதொன்றாகும். இதுவரையில் அரசு ஈட்டிய பொருளாதார வளத்தை பொதுமக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான வாய்ப்பு இவ் வரவு - செலவுத்திட்டத்தின் மூலமே கிட்டியுள்ளது. இவ் வரவு - செலவுத்திட்டம் மூலம் பொதுமக்களுக்கு எதுவித இலாபமும் கிடைக்காமற்போனால் பொதுமக்களின் குற்றச்சாட்டு போன்றே எதிர்பார்ப்பின் வீழ்ச்சியும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். ஆதலால், நியாயமான வகையில் சம்பள உயர்வு வழங்குவதுடன் ஓய்வூதியம் பெறுவோருக்கும் நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அரசின் பொறுப்பும் கடமையுமாகும்.

அதேவேளை, ஏழை மக்களை நேரடியாகப் பாதிக்கும் வரிகளில் ஏதாவது சலுகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமானால் அதுவும் சிறப்பாயமையும். பணம் படைத்த வர்த்தக சமூகத்தினருக்கு மட்டுமே அரசு இதுவரையில் வரிச் சலுகைகள் வழங்கிவந்துள்ளதாகச் சாதாரண பொதுமக்கள் குறைகூறி வருகின்றனர். இதனிடையே தொழிலாளி வர்க்கத்தினரிடமிருந்து அறிவிடப்படும் பிரத்தியேக வருமான வரியைக் குறைக்கவேண்டுமென்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது. தற்போது தொழில் பார்க்கும் தனிநபரொருவரிடமிருந்து 30 சதவிகித வரி அறவிடப்படுகிறது. முன்னர் 35 சத விகிதமாக அறவிடப்பட்ட இவ்வரி இந்த அரசினால் 30 சத விகிதமாக குறைக்கப்பட்டது. ஆயினும், இதில் மேலும் 5 சதவிகிதம் வரையில் குறைத்து அறவிடுவதால் அது தொழிலாளர் வர்க்கததினருக்கு அரசு அளிக்கும் நிவாரணமாக அமையும்.

இதனிடையே, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஏழைப் பொதுமக்கள் குறித்தும் அரசு கவனமெடுத்தல் வேண்டும். அவர்களுக்கு முடிந்த வரையான நிவாரணம் வழங்க முயல்



வதோடு வறுமை நிலையிலிருந்து அவர்களை மீட்டெடுக்கும் வகையில வேலை வாய்ப்புக்களை உருவாக்கி உதவவேண்டும். புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதன மூலம் அவர்களுக்கு பாதை அமைத்துக் கொடுக்கமுடிந்தால் அவர்களது வறுமை நிலையைப் போக்க முடியும்.

வெறுமனே ஏதாவது நிவாரணம் வழங்குவதைவிட தமது வாழ்க்கையை உறுதியானதாக அமைத்துக்கொள்ளக்கூடிய வகையில், அவர்கள் திருப்தியாக வாழக்கூடிய வசதி செய்து கொடுக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் புதிய வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டியது அவசியமென பொதுமக்கள் எண்ணுகின்றனர். அவ்விதம் இது சிறந்த முறையில் நிறைவேற்றப்படாவிட்டால் அரசு கூறிக்கொள்ளும் வகையில் நாட்டில் விரிவான வகையில் அபிவிருத்தி ஏற்பட்ட போதிலும், அதன் மூலம் தாம் எவ்விதபலனையும் அடைய முடியவில்லையேயென பொதுமக்கள் எண்ணக்கூடும். அத்துடன், அரசு வேண்டிக்கொண்ட விதத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நாட்டின் பொதுமக்கள் அமைதியாக, எதிர்பார்ப்புடன் காத்திருந்தமையை இங்கு சுட்டிக்காட்டியாக வேண்டும்.

இவ்வேளையில், மற்றுமொரு பிரச்சினை உருவாகியுள்ளது. கடந்த காலத்தில் அரசு சமர்ப்பித்த இரு வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் வர்த்தக சமூகத்தினர் பலதரப்பட்ட உதவிகளைப் பெற்றுக் கொண்டபோதிலும் தனியார் துறையில் எதிர்பார்க்கப்பட்ட வேலை வாய்ப்பு வசதிகள் அதிகரிக்கவில்லை. இது பாரியதொரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

உண்மையில் நாட்டின் பொருளாதாரத்தில் வளர்ச்சி காணப்படுகிறது. அரசு சமாதான முயற்சிகளை ஆரம்பித்து நாட்டில் அமைதியானதொரு சூழ்நிலையைப் பேணிவருவதால் அரசியல் ரீதியில் அமைதியை அவதானிக்க முடிகிறது. இவ்விதம் நாட்டின் அமைதியானதொரு நிலை உருவாக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையிலும் நமது நாட்டில் முதலீட்டாளர்கள் தமது நிதியை புதிய வர்த்தக நடவடிக்கைகளில் முதலீடுசெய்ய முன்வராதது நாம் எவரும் எதிர்பார்க்காததொரு நிலையாகும். கடந்த இருபது வருடங்களாக இடம்பெற்ற போரில் சம்பந்தப்பட்டிருந்த மக்கள் மத்தியில் தற்போதும் பலவகை அவநம்பிக்கை நிலவுவதாகத் தோன்றுகிறது. ஓரிரு ஆண்டுகளில் இத்தகைய மனநிலையை மாற்றிக்கொள்வது இலேசானதொன்றல்ல.

ஆனால், இவற்றுக்கு முற்றிலும் மாறுபட்டதொரு வகையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இயங்குவதாகத் தோன்றுகிறது. அவர்கள் முன்னரைவிடத் தற்போது பெரும் எண்ணிககையில் இன்று இந்நாட்டுக்கு வர ஆரம்பித்துள்ளனர்.

இதிலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சிறீலங்காவிலுள்ள வர்த்தக வாய்ப்புக்கள் தொடர்பாக எம்மைவிடப் புரிந்துள்ளனர் எனத் தெரிந்து கொள்ள முடிகிறது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களால் புதிய தொழில் முயற்சிகள் இங்கு ஆரம்பிக்கப்படுகின்றன. இதற்கென கட்டட நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, எதிர்வரும் ஆண்டில் தொழிலாளர்களுக்கான தேவை அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுமென்பது எனது தனிப்பட்ட அபிப்பிராயமாகும்.

இதுதவிர, அரசு கவனத்தில் எடுக்கவேண்டிய மற்றொரு விடயம் உள்ளது. அரசு கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ள தனியார் மயப்படுத்தல் திட்டமே அதுவாகும். அரசுடமைத் தோட்டங்களை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசு மிக வேகமாகச் செயற்பட்டு வருகிறது. ஏற்கனவே தனியார் மயப்படுத்தப்பட்ட சில அரச நிறுவனங்களில் கடமையாற்றும் மேலதிக தொழிலாளர்களை அவற்றைப் பொறுப்பேற்ற தனியார் துறையினர் வேலையிலிருந்து நீக்கி வருகின்றனர். இதனால் வேலை வாய்ப்புடன் சீவித்து வந்த குறிப்பிட்டதொரு தொகையினர் வேலையற்றவர்களது பட்டியலில் சேர்ந்து கொள்ளநேருகிறது. இந்நிலைமை குறித்து சீர்தூக்கி ஆராயப்பட வேண்டும். எவ்வாறாயினும் எதிர்வரும் ஓரிரு ஆண்டுகளுள் நாட்டில் பரந்த அளவிலான புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது.

நாட்டின் பொருளாதாரப் பயணத்தில் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தும் வங்கி வட்டி பற்றியும் நாம் கவனத்தில் கொள்ளல் அவசியமாகிறது. இந்த அரசு பதவியேற்றதன் பின்னர் வங்கி வட்டி விகிதம் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய வகையில் குறைக்கப்பட்டுள்ளது. இந் நடவடிக்கை இந்நாட்டின் கைத்தொழில் முதலீட்டு முயற்சிகளில் ஈடுபட்டுள்ள வர்த்தக சமூகத்துக்கு நன்மையளிப்பதாக அமைந்துள்ளதென்னமோ உண்மைதான். ஆயினும், தம்வசமிருந்த சகல நிதி வளத்தையும் வங்கிகளில் வைப்பிலிட்டு வைத்திருக்கும் ஓய்வூதியர்களைப் பொறுத்தவரை இவ்வட்டி விகிதக் குறைப்பு பெரும் பாதிப்பு அளிப்பதாய் அமைகிறது. இவ்விதம் சேவையிலிருந்து ஓய்வு பெற்றோரில் பெரும்பாலோர் தமது வைப்புப்பணத்துக்கான வட்டியைப் பெற்றே தமது தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர்.

வங்கி வைப்புப்பண வட்டியையே தமது நிரந்தர வருமானமாகக் கொண்டு ஜீவனம் நடத்துவோர் இன்று நாட்டில் பெரும் எண்ணிக்கையினர் உள்ளனர். இவ்விதம் வங்கிகள் வைப்புப் பணத்துக்கு வழங்கும் வட்டி விகிதத்தைக் குறைத்துக் கொண்டதால் அவர்கள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர். கடந்த ஓராண்டு காலத்துள் வங்கிகள் யாவும் இவ்விதம் வைப்புப் பணத்துக்கு வழங்கும் வட்டி விகிதத்தை 5 விகிதத்தால் குறைத்துக் கொண்டுள்ளன. நாட்டின் பணவீக்கம் அதிகரித்துச் செல்லும் அதேவேளை, தனிமனித வருமானம் வீழ்ச்சி கண்டு வருகின்றது. இதன் காரணமாக ஓய்வூதியர்கள் உட்பட வங்கி வட்டிகளைக் கொண்டு சீவியம் நடத்துவோர் அரசின் இவ்வட்டி வழங்கும் கொள்கை குறித்து அதிருப்தி கொண்டுள்ளனர்.

வைப்புப் பணத்துக்கு வட்டி வழங்குவது தொடர்பாக நாட்டிலுள்ள வங்கிகள் கடைப்பிடித்து வரும் கொள்கை குறித்து பொதுமக்கள் கேள்வி எழுப்பி வருவதாகத் தோன்றுகிறது. வைப்பிலிடும் பணத்துக்கு வழங்குவதாக ஒப்புக்கொள்ளும் வட்டி விகிதத்தை, மத்திய வங்கி வட்டி விகிதக் குறைப்புச் செய்யும் சகல சந்தர்ப்பங்களிலும் உடனடியாகவே தாமும் அவ்வித வட்டி விகிதக் குறைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளும் வர்த்தக வங்கிகள் -

தாம் வாடிக்கையாளர்களுக்குக் கடன் வழங்கும் சந்தர்ப்பங்களில் அவர்களிடமிருந்து அறவிடப் பொருந்திக் கொள்ளும் வட்டி விகிதத்தில் மத்திய வங்கி மேற்கொள்ளும் மாற்றங்களுக்கமைய அறவிட்டுக் குறைப்பை மேற்கொள்வதில்லையென இப்போது குற்றம் சுமத்தப்படுகிறது. இது தொடர்பாக வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது மிக அவசியமாகும். வங்கியொன்றில் கடன்பெற்றுக் கொள்ளும் ஒழுங்கான முறையில் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வாடிக்கையாளரொருவருக்கு குறைந்த வட்டி விகிதத்துடனும் -

சீரற்ற முறையில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வாடிக்கையாளரொருவருக்கு மற்றொரு கூடிய வட்டி விகிதத்துடனும் கடன் வழங்கும் நடைமுறையை வங்கிகள் கைக்கொண்டு வருகின்றன. வங்கியொன்று தனது வாடிக்கையாளரொருவருக்கு அவருடைய முன்னைய கடன் தொகையை நிபந்தனைகளுக்கமைந்த வகையில் செலுத்தியுள்ளாரென உறுதிப்படுத்திக் கொள்வதன் அடிப்படையிலேயே கடன் வழங்க முன்வருகின்றது. தான் ஒரு நேர்மையான வாடிக்கையாளரென தனது முன்னைய கொடுக்கல் வாங்கல்கள் மூலம் நிரூபிக்கக் கூடிய வங்கி வாடிக்கையாளரொருவர், குறிப்பிட்ட அவ்வங்கியில் மட்டுமன்றி ஏனைய வர்த்தக வங்கிகளிலும் தமது அறிக்கையைச் சமர்ப்பிப்பதன் மூலம் நியாயமான வட்டி விகிதத்துடன் கடனுக்கு விண்ணப்பிக்க இயலும்.

சாதாரணமாக நேர்மையான வாடிக்கையாளரென இனம்காணத்தக்க வாடிக்கையாளரொருவரால் தான் தொடர்புகொண்டுள்ள வங்கியுடன் வட்டி விகிதம் தொடர்பாக சவால் விடவும் இடமுண்டு. தான் தொடர்புகொண்டுள்ள வங்கி நிர்ணயிக்கும் வட்டி விகிதம் குறித்துத் திருப்தியடையாத விடத்து, மற்றொரு வங்கியுடன் தொடர்பை ஏற்படுத்தித் தனது தேவையை நிறைவேற்றிக்கொள்ள இயலும். இவ்விடயத்தில் வங்கியொன்றுடன் நேர்மையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை நிறைவேற்றிக் கொண்டதை உறுதிசெய்யும் கொடுக்கல் வாங்கல் அறிக்கையைக் கொண்டுள்ள ஒருவருக்கே இத்தகைய வாய்ப்புக்கிட்ட இடமுண்டு.

இன்று சிறிலங்காவில் அதிகரித்த போட்டி நிலவும் வர்த்தகத்துறையென வங்கித்துறையையே குறிப்பிட முடியும். ஆதலால், பல தரப்பட்ட வங்கிகளிடையே அவற்றின் வாடிக்கையாளர்களின் தொடர்புப்போட்டிகள் இன்று அதிகரித்துக் காணப்படுகின்றன. அதன் மூலம் இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்கள் வங்கிகளுடன் வற்புறுத்தல்களுடன் கூடிய கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட முடியும்.

இதனிடையே இன்று வங்கிகளின் முகாமைத்துவச் செலவுகளில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. நாளுக்கு நாள் புதிய தொழில்நுட்ப வசதிகள் வங்கிகளில் அறிமுகப்படுத்தப்பட வேண்டி நேர்ந்துள்ளது. அவற்றைக் கொள்வனவு செய்ய வங்கிகள் பெருந் தொகைப் பணத்தைக் செலவிடுகின்றன. அதேபோன்று வங்கி ஊழியர்களுக்கும் அதிகரித்த சம்பளம் வழங்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அது மட்டுமன்றி வங்கியின் பாதுகாப்புச் செலவினமும் அதிகரித்துச் சென்ற வண்ணமுள்ளது. இன்று நம்நாட்டின் வங்கித்துறை எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாக வங்கிகள் வழங்கிய கடன் தொகையில் திருப்பிச் செலுத்தப்படாத நிலுவையை அறவிடும் பணி அமைந்துள்ளது. இவ்விதம் பெற்ற கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தாத வாடிக்கையாளரொருவரிடமிருந்து அத்தொகையை அறவிடும் பொருட்டான நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைய நீண்டகால அவகாசம் தேவைப்படுகின்றது. அது மட்டுமன்றி வழக்கறிஞர்களுக்கும் கட்டணமாகப் பெரும் தொகை செலுத்த வேண்டி ஏற்படுகின்றது. மேற்கூறிய நடவடிக்கைகளுக்காக வங்கியொன்று வருடாந்தம் பெரும்தொகைப் பணத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது. இவ்விதம் வங்கியொன்று தனது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் செலவிட வேண்டிய இத்தொகைப் பணத்தை வாடிக்கையாளர்களிடமிருந்தே அறவிடவேண்டியுள்ளது.

இவைதவிர, மற்றொரு முக்கியமான பிரச்சினையையும் வங்கிகள் எதிர்கொள்ள வேண்டியுள்ளன. வங்கியொன்றில் வைப்பிலிடப்படும் ஒவ்வொரு ரூபாயின் 10 சத விகிதம் மத்திய வங்கியின் நடைமுறைக் கணக்கில் வைப்பிலிட்டு வைக்கப்பட வேண்டுமென்ற சட்ட விதி பின்பற்றப்படுகிறது. இவ்விதம் வர்த்தக வங்கிகளால் மத்தியவங்கியில் வைப்பிலிடப்படும் பணத்துக்கு மத்தியவங்கியால எவ்வித வட்டியும் வழங்கப்படுவதில்லை.

## [illegible]

இது வர்த்தக வங்கிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாகும். இப் பிரச்சினை காரணமாக வங்கிகளால் வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி விகிதத்தை உயர்ந்த மட்டத்தில் பேண வேண்டி ஏற்படுகின்றது. இவ்விதம் செய்யாமல் வங்கியின் சேவையை மேற்கொள்வது சிரமமான செயலாகும் உலகத்தின் ஏனைய நாடுகளில் வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்தாத வாடிக்கையாளர்களிடமிருந்து நிலுவை அறவிடப்படும் வேகம் நமது நாட்டில் அவ்வித நடவடிக்கைகளில் காட்டப்படும் வேகத்தை விடப் பெரிதும் கூடியதாகும். அவ்வித நடவடிக்கைகளைக் கைக்கொண்டு நமது வங்கிகளுக்குள்ள சிரமங்களைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமானால், மத்தியவங்கியால் அறவிடப்படும் வட்டி விகிதங்கள் போன்ற அனுகூலங்களைப் பொதுமக்களுக்கு வழங்குவதில் சிரமம் எதுவும் கிடையாது.

# கராத்தே போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம்,நவ.4

தமிழீழ விளையாட்டுத்துறையால நடத்தப்பட்ட மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த கராட்டிச் சுற்றுப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டம் சம்பியன் கிண்ணத்தை தனதாககியது. கிண்ணத்தைப் பெறுவதற்கு ஏ.ஓ.எம்.ஏ. கராட்டி கழக மாணவர்கள பெரும் பங்காற்றியுள்ளனர்.

இச்சுற்றுப் போட்டியில் கிளிநொச்சி அணிசார்பாக பங்குபற்றி வெற்றியீட்டிய ஏ.ஓ.எம்.ஏ. கழக வீர, வீராங்கனைகள் விவரம் வருமாறு:-

25கிலோ நிறை (பெண்கள்) - செ. செல்விகா (தங்கம்), செ.ஜெயராணி (வெள்ளிப்பதக்கம்), ந.சுபாசினி, மு.சுகந்தினி (வெண் கலப்பதக்கம்).

25கிலோ நிறை (ஆண்கள்)- பொ.பேரின்பராஜா (தங்கம்), பெநகுலேந்திரன் (வெள்ளி), யோ.அன்ரனிஸ், க. அருளானந்தம் (வெண்கலம்).

33கிலோ நிறை (பெண்கள்) - க. புவனேஸ்வரி (தங்கம்), ஆ. வசந்தகுமாரி (வெள்ளி), த.ராதிகா (வெண்கலம்).

35கிலோ நிறை (பெண்கள்) - த.கலைச்செல்வி, க.வினோஸ்யந்தி (தங்கம்), ப.வசந்தவேணி (வெள்ளி), கவினோதினி (வெண் கலம்).

35கிலோ நிறை (ஆண்கள்)- வெ.உதயகுமார் (தங்கம்), தி.திருச்செல்வம்(வெள்ளி), அ.மேகநாதன் (வெண்கலம்).

34 கிலோ நிறை (ஆண்கள்) - சி.தவராசா (தங்கம்), சி.தர்மபாலன் (வெள்ளி), சி.சிவகாந்தன் (வெண்கலம்).

38கிலோ நிறை (பெண்கள்) - சி.சியாமிளா (தங்கம்), து.விஜயலட்சுமி (வெள்ளி), செ.றிமோனா மேரி, இ.நாகலோஜினி (வெண்கலம்).

40கிலோ நிறை (பெண்கள்) - எஸ்.சுபாசினி (வெண்கலம்), 40கிலோ நிறை (ஆண்கள்) - து.துஜீபன (தங்கம்), பு.தீபன் (வெள்ளி), ச.பிரசாத் (வெண்கலம்).

48கிலோ நிறை (பெண்கள்) - க.தனுஸ்யந்தி (வெள்ளி), நந்தினி (வெண்கலம்).

45கிலோ நிறை (ஆண்கள்)- ஜெ.ஜெயராஜ்குமார் (வெள்ளி), என்.கிருஸ்ணகுமார் (வெண்கலம்).

31கிலோ நிறை (ஆண்கள்)- றி.கிஷான்(வெள்ளி), இ.இராஜ்குமார்(வெண்கலம்).

60கிலோ நிறை (ஆண்கள்)- ம.அருள்ஜோன்சன் (தங்கம்), பீமதன் (வெண்கலம்).

55கிலோ நிறை (ஆண்கள்)- இ.ஆனந்தகுமார் (வெள்ளி), கோ.ஜெனிபேட் (வெண்கலம்).

50கிலோ நிறை (ஆண்கள்)- ஏ.அகிலதாஸ் (வெள்ளி).

70கிலோ நிறை (ஆண்கள்)- சே.கேதீஸ்வரன் (வெள்ளி)

75கிலோ நிறை (ஆண்கள்) எஸ்.ஜஸ்ரின குறூஸ்(வெள்ளி)

(ம-5)

## யாழ் பல்கலைக்கழகம்
## பதவி வெற்றிடம்
### கனரக வாகன சாரதி

(குறிக்கப்படும் பணிகளை நிறைவேற்ற மட்டும்)

குறிக்கப்படும் பணிகளை நிறைவேற்ற மட்டும் கனரக வாகன சாரதி ஒருவர் தேவை. 45 வயதுக்கு மேற்பட்டவராகவும் மூன்று வருடங்களுக்குக் குறையாத முன் அனுபவம் உடையவராகவும் இலங்கையின் எல்லாப்பிரதேசங்களுக்கும் வாகனத்தைச் செலுத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். சிங்கள மொழியில் பேசக் கூடியவராயின் விரும்பத்தக்கது. கொடுப்பனவு பற்றி நேரில் பேசித்தீர்த்துக் கொள்ளலாம்.

தகுதி உடையவர்கள் கீழே குறிப்பிடப்படும் மூலப்பிரதி ஆவணங்களுடன் நாளை (05.11.2003) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பதிவாளர் அலுவலகத்தில் நேரடியாக சமுகமளிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

1. பிறப்புப் பதிவுச்சான்றிதழ்
2. கனரக வாகனச் சாரதி உரிமம்
3. சமீபத்தில் பெற்ற நல்லொழுக்கச் சான்றிதழ்
4. அனுபவச் சான்றிதழ்

(சி-31119)(36-16-18) .பதிவாளர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை மின்சார சபையில் பணி புரிபவரும், சிறந்த சமூக சேவையாளரும், திருமறைக் கலாமன்ற முன்னாள் செயலாளருமாகிய

**திரு.C.M.நெல்சன்** அவர்கள்

அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன், அவரது சேவை மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

37,கொண்டடி வீதி,
யாழ்ப்பாணம். (24400)(36-16-18) A.மாரியதாஸ் குடும்பத்தினர்.

## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ.து)

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கி சேமிப்புக் கணக்கு, நிலையான வைப்புக் கணக்கு, கடன்கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தல்.

மேற்படி சங்கத்தின் 2002.12.31 ஆம் திகதிய நிதியாண்டின் கணக்காய்வு நடைபெறுவதால் கிராமிய வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் 05.11.2003 ஆம் திகதி தொடக்கம் 17.11.2003 ஆம் திகதிக்குள் தங்கள் கணக்கின் மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். உறுதிப்படுத்தப்படாத பட்சத்தில் பேரேட்டு மீதிகள் சரியென ஏற்றுக்கொள்ளப்படும்.

(சி/31118)(36-16-18) -பொதுமுகாமையாளர்.

## சாரதி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றிற்கு மும்மொழிகளிலும் சரளமாகப் பேசக்கூடிய ஆற்றலும் அனுபவமும் உள்ள சாரதி ஒருவர் தேவை. தகுதியுடையோர் கீழ்க்காணப்படும் முகவரிக்கு 6-11-2003 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நேரில் வரவும், சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

AMDA,33 , ஆசீர்வாதம் லேன்,
வைத்திய சாலை வீதி, யாழ்ப்பாணம்.
T.P.NO:- 021-222-6527
(24401)(36-16-18)

## எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்





பஜாஜ் - எனது நண்பன்



பஜாஜ் - எனது கைஉதவியாளன்



பஜாஜ் - எனது மூத்தவன்

**வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயணங்கள் உண்டு.**

அந்த போக்குவரத்துக்காக வீணாகும் செலவையும், நேரத்தையும், களைப்பையும் குறைப்பதற்கும், அந்த செலவழியும் பணத்தையும் காலத்தையும் சேமித்து அதை எங்களின் குடும்ப முன்னேற்றத்துக்காக பயன்படுத்த எங்களின் பஜாஜ் வண்டியினால்தான் உதவ முடிந்.

பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இயங்கும் என்பது எங்களின் விசுவாசம்.

விலை ரூ.. 195,350/- இலிருந்து.மேல்
(எல்லா வரிகளும் அடங்கும்)



பஜாஜ் - எனது காவலன்

### டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

த.பெ 1009,75, ஹைட்பார்க் கோனர், கொழும்பு 02. தொ.பே: 074-700600. பக்ஸ்: 074-700677 ,268717 Web Site: http//:www.dpmco.com

பிரதேச கிளை அலுவலகங்கள்: • 1748 கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொ.பே:082-228146 பக்ஸ்: 082-238134 • 27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய: தொ.பே: 027-2250037 பக்ஸ்: 027-2250222 • 382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ.பே: 041-2228488 பக்ஸ்: 041-2227488 • நீதல் மாவத்தை, அம்பாறை. தொ.பே 063-2222967 பக்ஸ்:063-2223662 • 31பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம் தொ.பே:025-2225048/9 பக்ஸ்: 025-2225050 • தனசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ.பே/பக்ஸ்: 045-2222389 • இல. 116, குருணாகல் வீதி, புத்தளம். தொ.பே 032-2267410 பே/பக்ஸ்: 032-2267411 • பிராந்திய அலுவலகம்: இலக்கம் 72 ... நுவரெலியா: 052-2235760/61/62/63 பக்ஸ்: 052-2235764 • இல. 83, கண்டி வீதி, யக்கல. தொலை பேசி: 074-672019 தொலை பேசி/பெக்ஸ்: 033-2225522 • இல.30, ரேஸ்கோஸ் வீதி, பதுளை. தொ. பேசி : 055-2224800/1

மேல் விபரங்களுக்கு இக்கூப்பனை நிரப்பி கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு தபாலில் அனுப்பி வையுங்கள்.

பெயர்________________

விலாசம்________________

சேவை நிலையம்__________ தொலைபேசி__________

பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விபரங்களை அனுப்பி வையுங்கள்.

Tradlanka Advertising

# மன்னாரில் அம்புலன்ஸ்கள் விபத்து: இரண்டு தாய்மார் உட்பட எண்மர் காயம்!

## ஒருவரின் நிலை கவலைக்கிடம்!

மன்னார்,நவ.4

மன்னார் உயிலங்குளத்தில் நேற்று இரண்டு அம்புலன்ஸ்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதனால் 8பேர் காயமடைந்துள்ளனர்.

மன்னாரில் இருந்து சென்ற பொலீஸ் அம்புலன்ஸ் ஒன்றும், வவுனியாவில் இருந்து வந்த மன்னார் ஆதார வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் ஒன்றும் நேருக்குநேர் மோதிக்கொண்டதனால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்களில் இருவர் சத்திர சிகிச்சை செய்து குழந்தை பிரசவித்த தாய்மார்கள். மற்றைய இருவர் அவர்களின் உறவினர்கள். காயமடைந்த ஒரு தாயாரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## மோட்ச தீபக் கிரியை அறைபு

அன்புடையீர்!

நிகழும் சுபானு வருடம் ஐப்பசி மாதம் 6ஆம் நாள் 23.10.2003 வியாழக் கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

### கனகாம்பிகை இராமமூர்த்தி

அவர்களின் மோட்ச தீபக் கிரியை வழிபாடுகள் ஐப்பசி மாதம் 18ஆம் நாள் இன்று (04.11.2003) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அவ்வேளையில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சமுகமளித்து மோட்ச தீபக் கிரியைகளில பங்குபற்றுவதுடன், இன்று நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

"கனகாம்பிகை வாசா"
இணுவில் தெற்கு இணுவில். (31126)(29-16-18)
-குடும்பத்தினர்.

## கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோவில்

### அந்தரீத பிரதிஷ்டா பிராயச்சித்த கும்பாபிஷேகம்

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஐப்பசி 19ஆம் நாள் 05.11.2003 புதன்கிழமை காலை தனு இலக்கின சுபமுகூர்த்த வேளையில் 09.15 - 10.15இற்கு இடையில் பிராயச்சித்த அஷ்ட பந்தன கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அடியார்கள் வருகைதந்து அம்பிகை அருள் பெறுக.

கோப்பாய்,
பலானை கண்ணகை அம்மன்
தேவஸ்தானம். (C/31124) (33-11-18-29)
ஆலயபரிபாலன சபையினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
19 ● 07 ● 1908



மறைவு
05 ● 10 ● 2003

அமரர்

### அ.க.முருகேசு சின்னம்மா

(மணியகாரர் வீட்டடி வேலணை)

05-10-2003 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத தலைவியின் வீட்டுக்கிருத்தியம் இன்று (04.11.2003) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணம், கந்தர்மடத்திலுள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெறுகிறது. ஆகவே அன்னாரின் வீட்டுக்கிருத்திய மற்றும் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.66/2, டிறும் றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (24403) (32-11-15)

மக்கள் மு.திருநாவுக்கரசு,
மு.சண்முகசேகரம்,
மு.வரதராஜா R.D.O.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் குட்டிப்பிள்ளை

கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் குட்டிப்பிள்ளை அவர்கள் நேற்று (03.11.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிட்டினர் குட்டிப்பிள்ளையின் அன்பு மனைவியும் சந்திரமலர், அரசேஸ்வரன் (ஆசிரியர், அரியாலை G.T.M.S), யோகேஸ்வரன் (ஜேர்மனி), செல்வனேஸ்வரன் (ஆரணி நகைமாடம், கல்வியங்காடு), மகேந்திர குமார் (லண்டன்), சந்திரகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சண்முகலிங்கம், சர்மிளா, புஸ்பவதி, லோகதர்மினி, நாகேஸ்வரி, ராகினி, ஆகியோரின் மாமியாரும் சர்மிளா (சுவிஸ்), ராஜினி, ஜனார்த்தன், பவானி, அஸ்வத்தன், சுபீத்தன், டெனோகா, அனிதா, சுருஷன், நிவிஷ, கஷ்வியன் ஆகியோரின் நேசமான பேர்த்தியும் மதுஷன், அபிஷா, முல்லை நிலவன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் (பி.ப) நடைபெற்று, பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு. (C/31125) (33-16-18-29)
தகவல்:
கு.அரசேஸ்வரன் (ஆசிரியர்).

## உதைபந்தாட்ட கழகங்களுக்கு!

வலி.வடக்கு,நவ.3

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குக்கு உட்பட்ட உதைபந்தாட்ட விளையாட்டுக்கழகங்களை பதிவுசெய்து கொள்ளும்படி வலிகாமம் உதைபந்தாட்ட லீக் கேட்டுள்ளது.

ஏற்கனவே பதிவுசெய்த கழகங்களும் புதிதாக பதிவுமேற்கொள்ள விரும்பும் கழகங்களும் நாளை புதன்கிழமைக்கு முன்பாக செயலாளருடன தொடர்புகொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளது. (ஒ-86)

## அரையிறுதிக்கு 4அணிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ்ப்பாணம் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் வி.டி. ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்திற்கு மானிப்பாய் பரீஸ், ஜொலிஸ்ரார், கொக்குவில் கே.சி.சி.சி. மற்றும் யங் ஸ்ரார் ஆகிய நான்கு விளையாட்டுக் கழக அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (ம-5)

## கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.4

திருநெல்வேலி, முடமாவடி ஞான வைரவர் விளையாட்டுக்கழகம் நடத்தும் பூபாலசிங்கம் ஞாபகார்த்த கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறும் 4நபர் கொண்ட சுற்றுப் போட்டியில் காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணியும் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக 'ஏ' அணியும் மோதவுள்ளன. (ம-5)

## கூடைப்பந்தாட்டம்

ஹற்றன் நஷனல் வங்கியால் யாழ. மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணி முதல் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★பிற்பகல் 3.30மணி - சென்றலைட்ஸ் வி.க. எதிர் ஜொலிஸ்ரார் வி.க.

★மாலை 5.00மணி - அரியாலை ஐக்கிய வி.க. எதிர் பமிலியன்ஸ் வி.க (ஒ-5)


நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், பூமிகா நடித்த
பத்ரி (தமிழ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.ப.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
xXx

லிபேட்டி அச்சுவேலி
இன்று முதல் சரத்குமார் (இருவேடம்), கிரண், வடிவேல் நடித்த



திவான் (தமிழ்)
காட்சி நேரம்: 3.00, 7.00.

லஷ்சுமி சினிமா இணுவில்



விஜய், ரம்பா, மணிவண்ணன், குஷ்பு இன்னும் பலர் நடிப்பில்
மின்சாரக் கண்ணா (தமிழ்)
காட்சிநேரம்: 10.30, 3.00, 7.00. (பி.நே.)
(C-41049)

நாகம்ஸ் சுன்னாகம்
2ஆவது வெற்றி வாரம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினத்தில் வெளியாகிய
இளைய தளபதி விஜய், ஜோதிகா, கிரண், விவேக் நடித்த



தினசரி காட்சிகள் 11.00 3.00 7.00 (பி.நே)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதினத்தில் வெளியாகிய
சேதுபுகழ் விக்ரம், சூர்யா, லைலா நடித்த
பாலாவின் பிதாமகன்



காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30. (பி.நே.)
ஆசனங்களை முன்பதிவு செய்துகொள்ளலாம்.
(C-29904) (30)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி அடைக்கலம் பிளசம் குணமணி

யாழ்ப்பாணம், இல.05, டேவிற் வீதியைப் பிறப்பிடமாகவும் இல.111, டேவிற் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அடைக்கலம் பிளசம் குணமணி அவர்கள் நேற்று (03.11.2003) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோர்ஜ் குணநாயகம் - அந்தோனியாப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், சுவாம்பிள்ளை அடைக்கலம் (ஓய்வுபெற்ற அதிபர் - புலோப்பளை R.C.) அவர்களின் அன்பு மனைவியும் ஜினா பிறிங்கா, ஜீன் (ஆசிரியை - அரியாலை சிறிபாரதி வித்தியாசாலை), ஜேன் (மாணவி - School of Agriculture, வவுனியா) அவர்களின் அன்புத் தாயாரும் போல் அருள்நாயகம் (Excecutive Ceylon Tobacco Company) அவர்களின் பாசமிகு மாமியாரும் ஜரின் யூலியாவின் அன்புப் பேர்த்தியாரும் ஜோர்ஜ் ஜோசப் குணநாதன் (மருந்தாளர் - கொழும்பு), றீற்றா ஜெயமணி (OMMI), கிருபைநாதன் (அன்ரன் - விவசாயத் திணைக்களம் - கண்டி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் எலிசபெத் பத்மாமணி (மருந்தாளர்), ஞானமணி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜோசப் பிரதீபன், அன்றூ சஜீவன், அன்ரனைனஸ் ஞானோதயன், ஆன பிரியந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.111, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம். (24406) (26-18-24)
தகவல்:
S.P.அருள்நாயகம் (மருமகன்)

### ஆறுமுகம் செல்வமாணிக்கம்

பருத்தித்துறை, ஐயனார் கலட்டியை வசிப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் செல்வமாணிக்கம் நேற்று (03.11.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னப்பா அவர்களின் அன்பு மகனும் நவமணி, புனிதவதி, சற்குணம், சபாரத்தினம், ராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இரத்தினவடிவேல் மற்றும் திருநாவுக்கரசுமுதலி, விஜாகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவஞானம், இளங்கோ, இளவளகன், பாபு, அருநாவுக்கரசு, மகேஸ்வரன், வளர்மதி, இந்துமதி, கலாமதி, கலைவாணி, மதுமதி, மகேஸ்வரி, தேவி, நிமால் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2003) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுககொள்ளவும்.

ஐயனார் கலட்டி,
பருத்தித்துறை. (24389) (33-29-11-18)
தகவல்:
இ.சிவஞானம்,
தி. அருநாவுக்கரசு (மருமக்கள்)

### பொன்னம்பலம் இராசையா

(சிறி தேவி பஸ் - உரிமையாளர்)

தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் நந்தாவில் அம்மன் வீதி, கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் இராசையா அவர்கள் நேற்று (03-11-2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - இராமசிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் செல்வம் அவர்களின் அன்புக் கணவரும் துரைச்சாமி, தங்கப்பிள்ளை, வேலாயுதம், சிங்கராஜா, அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாஸ்கரன் (சவுதி), வசந்தி (சுவிஸ்), முரளீதரன் (சுவிஸ்), ரவீந்திரன், ஜெயந்தி காலஞ்சென்றவர்களான ஜெயதேவி, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுமாரி, ஈசன் (சுவிஸ்), சாந்தி (சுவிஸ்), கலாசோதி ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிராமி, ஆதவன், பிரவீன், பிரவிதன், சுசிகா, பிரியங்கா, கேதீஸ்வரன், பிரமீளா, கேசவன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2003) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோயில் வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (24402) (29-11-18)
தகவல்:
செல்வம் (மனைவி),
ரவி (மகன்).

### இரட்ணகோபால் சிவராஜா

காரைநகர், கேணியடியைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளி, ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இரட்ணகோபால் சிவராஜா நேற்று (03.11.2003) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் இரட்ணகோபால - காலஞ்சென்ற பத்மகுலோசினி அம்மா ஆகியோரின் அன்புப் புதல்வனும் கந்தசாமி - யோகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் தமிழ்ச்செல்வியின் (சுகுணா) அன்புக் கணவரும் அஜித்குமார் (கனடா), விஜித்குமார், சருண்குமார், கிசோக்குமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயராசாவின் அன்புச் சகோதரனும் அமுதகுமாரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சந்திரகாந்தி மற்றும் கலைச்செல்வி (கனடா), சிவஞானச் செல்வன் (ஜேர்மனி), சிவயோகச்செல்வன் (பிரான்ஸ்), பங்கயச்செல்வி (கனடா), வசந்தகுமாரி (கனடா), மோகனச்செல்வன் (குமரன் - ஈச்சமோட்டை), குகதாஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.11.2003) செவ்வாய்க்கிழமை காலை 10மணியளவில் 2ஆவது அப்பீள் லேன், வெள்ளவத்தையில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, தகனக்கிரியைக்காக கனத்தை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6/6,விதானையார் வீதி,
ஈச்சமோட்டை,
சுண்டுக்குளி. (24402) (29-11-18)
தகவல்:
கே.மோகனச்செல்வன்
(குமரன்-மைத்துனர்).

### திருமதி வீரசிங்கம் இரத்தினம் (திரவியம்)

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் தற்போது முனீஸ்வரம், சிலாபத்தில் வசித்தவருமான திருமதி வீரசிங்கம் இரத்தினம் நேற்று (03.11.2003) திங்கட்கிழமை சிலாபத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மூர்த்ததம்பி வீரசிங்கம் அவர்களின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மனைவியும் புஸ்பலீலா, பத்மலீலா, பாஸ்கரலீலா, பத்மசீலன், பங்கஜலீலா, வேலாயுதசெயோன், சிவகுமார், ரூபசெயோன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான செல்லையா, யோகலிங்கம் மற்றும் ஜெயானந்தசிங், ஜெயராஜா, தேவிகாராணி, விமலராணி, பாலசௌந்தரி, யாழினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.11.2003 வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் குருநாகல் றோட், முனீஸ்வரம் சிலாபத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

த.ஜெயானந்தசிங்,
குருநாகல் றோட்,
முனீஸ்வரம், சிலாபம்
T.P.NO.: 0722 429324 (24405) (29-11-18)
தகவல்:
வீ. வேலாயுதசெயோன் (மகன்)
(கிராம சேவையாளர்,
திருநெல்வேலி வடகிழக்கு).

## மூதூரில் மின் துண்டிப்பு

மூதூர் பிரதேசத்தில் கடந்த 27 ஆம் திகதி முதல் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால், மூதூரில் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகள், வங்கிகள், அரச அலுவலகங்கள் ஆகியவற்றில் மக்கள் தங்களது தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமலிருக்கின்றனர்.

இதேவேளை, மூதூர் தமிழ்ப் பிரதேசங்களுக்கு பஸ் போக்குவரத்தும் ஆரம்பிக்கப்படவில்லை. அத்துடன், தமிழ் பிரதேசங்களுக்கான தபால் விநியோகமும் இன்னும் நடைபெறவில்லை.

மூதூர் கிழக்கு மக்கள் மூதூருக்கு செல்ல முடியாதுள்ளதால் மூதூர் கிழக்கிலுள்ள மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற தனிப்பட்ட ரீதியில் விண்ணப்பிக்க முடியாமல் தடுமாறிக்கொண்டிருக்கின்றனர்.

## பெற்றோரிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சிறுவனை விடுதலைப் புலிகள் தமது வாழைச்சேனை அலுவலகத்தில் வைத்து ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை, கடந்து செவ்வாய்க்கிழமை அன்று புலிகள் அமைப்பில் இணைய முன்வந்த 14 வயது சிறுமியொருத்தியும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஒ-9)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் செயற்பாட்டுச் சூழ்நிலைகள் ஆகியவை குறித்து கணிப்பீடு செய்ய உதவியும் -

உத்திகள், தொழில்நுட்பங்கள் மற்றும் செயற்பாட்டு முறைகள் ஆகியவை பற்றிய தகவல்களை வழங்கியும் -

நிபுணத்துவ வளப் பரிமாறலில் அமெரிக்க விமானப்படையினர் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவது சாத்தியம் என்றும் -

அது, நிரந்தர சமாதானத்துக்கும் ஒஸ்லோ மற்றும் டோக்கியோவில் வெளிப்படுத்தப்பட்ட அறிக்கைகள் மற்றும் கொள்கைகளுக்கு அமைவான அரசியல் முறைமையையும் எட்டுவதற்கும் வழிசெய்யும் என்றும் - நாம் மேலும் நம்புகின்றோம்.

நோர்வே அரசின் தொடரும் அனுசரணைப் பணிக்கு மரியாதை செலுத்துகிறோம் - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதிலும் தேசிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதிலும் அமெரிக்கா அதிக அக்கறை காட்டிவருகிறது. அதேசமயம் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுடன் இலங்கை நெருங்கிய தொடர்பு வைத்துள்ளது.

சமீபத்தில் பிரதமர் ரணில் இந்தியா சென்று இந்தியத் தலைவர்களுடன் பரஸ்பர உறவுகளை அபிவிருத்தி செய்து கொள்வது குறித்து பேசி இருந்தர். தற்பொழுது இடம்பெறும் அமெரிக்கா விஜயம் அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும், இடையிலான உறவுகள் மேலும் அதிகரிக்க உதவும்.

இப்படி அமைச்சர் மிலிந்த மொறகொட கூறினார்.

## ஜனாதிபதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ இவர்களின் திடீர் விஜயம் பற்றி சகல ஊடகங்களுக்கும் இவர்கள் மறைத்தமை.

★ பொறுப்புவாய்ந்த பாதுகாப்பு அதிகாரிகளின் துணையின்றி விடுதலைப் புலிகளின் பகுதிக்குச் சென்றமை.

★ அரசின் சமாதான நடவடிக்கைக்கு எதுவித சம்பந்தமும் இல்லாத அமைச்சர்கள் நால்வர் அங்கு சென்றமை.

★ இந்த அமைச்சர்கள் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டுள்ளமை.

★ புலிகளின் இராணுவப் பிரிவில் 15 வருடங்களுக்கு மேல் கடமை புரியும் - இராணுவத்துக்கு எதிரான பல தாக்குதலில் கலந்துகொண்ட - புலித்தேவனை சந்தித்துப் பேசியமை.

★ ஜனாதிபதியின் நடமாட்டம் பற்றி அறிவதற்கு கொழும்புக்கு வந்து ஹில்டன் ஹோட்டலில் தங்கியிருந்தவர் புலித்தேவன் என்பதைத் தெரிந்தும் அவரைச் சந்திக்கச் சென்றமை.

★ அங்கு நடந்த பேச்சுக்களை வெளியே சொல்லாமல் இவர்கள் இரகசியமாய் செயற்பட்டமை.

மேற்கூறிய விடயங்கள் எமது சந்தேகத்தை மேலும் வலுவடையச் செய்துள்ளன.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகத் திட்டவரைவுக்கு இணங்கி புலிகள் கேட்டதை கொடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அதைத் தடுக்கும் ஒரு பிரதான நபராக ஜனாதிபதி செயற்படுவதால் அவரைத் தீர்த்துக்கட்டும் நோக்குடன் இச்சந்திப்பு இடம்பெற்றிருக்கலாம் என நாம் சந்தேகப்படுகின்றோம்.

ஜனாதிபதியுடன் செயற்படும் முக்கிய உறுப்பினர்களான லக்ஷ்மன் கதிர்காமர், டக்ளஸ் தேவானந்தா, மங்கள சமரவீர, விமல் வீரவன்ஸ, ரிஸ்வின் சில்வா உட்பட எதிர்க்கட்சியின் 20 பேரைக் கொலை செய்வதற்கு விடுதலைப் புலிகள் திட்டம் தீட்டியுள்ளனர் எனப் பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

எமது சந்தேகத்தை மக்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம் - இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வஜன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைப்புத் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு உத்தரவிடுமாறு கோரும் இந்த மனுவை சேருவில ரஜமகா விகாரையின் விகாராபதி வண.தர்மகீர்த்தி தேரர் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அரசுத் தரப்பில் ஆஜரான சட்டமா அதிபர் பூர்வாங்க ஆட்சேபனை ஒன்றைக் கிளப்பினார்.

'சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கான உத்தரவை விடுக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு இல்லை. அத்தகைய அதிகாரம் ஜனாதிபதிக்கே வழங்கப்பட்டுள்ளது அத்தோடு இந்த மனுவில் ஜனாதிபதி எதிர் மனுத்தாரராகவும் குறிப்பிடப்படவில்லை. எனவே இந்த மனுவை விசாரணைக்கு ஏற்காது தள்ளுபடி செய்யவேண்டும்

என்று அவர் வாதிட்டார்.

அதனையடுத்து இந்த மனுவை விசாரணைக்கு ஏற்பதா என்பது தொடர்பான பூர்வாங்க ஆட்சேபனை மீதான தீர்ப்பை டிசெம்பர் 18ஆம் திகதிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்து.

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்ற ஏற்பாடு கடந்த பதினைந்து வருடங்களாக அதிகாரத்தில் இருக்கும் ஜனாதிபதிகளினால் வருடாவருடம் ஒத்திவைக்கப்பட்டு வருவதும்

கடந்த வருடம் இவ்வாறு ஜனாதிபதி குமாரதுங்கவினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு எதிர்வரும் 17ஆம் திகதி காலாவதியாக இருப்பதும் குறிப்பிடத்தக்கவை.

அந்த உத்தரவை மேலும் ஒரு வருடம் நீடிப்பதற்கான பணிப்புரையை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி விடுக்கத்தவறினால் கிழக்கில் இது தொடர்பான சர்வஜன வாக்கொடுப்பு நடத்துவதற்கான ஏற்பாடுகள் உடன் செய்யப்படும் நிலைமை உருவாகும்.


**INFORMATION TECHNOLOGY PARK**

MINISTRY OF REHABILITATION, RESETTLEMENT & REFUGEES
National Housing Secretariat Building, in front of Kachcheri,
Kandy Road, Jaffna, Sri Lanka
e-mail: itp@sltnet.lk Office: 021 222 3641

தகவல் தொழில் நுட்பப் பூங்காவின் புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். விண்ணப்பப் படிவங்களை மேற்படி முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**Certificate Courses**

| Courses | Duration | | Courses | Duration | |
|---|---|---|---|---|---|
| Ms- Word | 3 | Fee 1000/- | Webpage&Graphics Design | 4 | Fee 1800/- |
| Ms- Excel | 3 | | C/C++ | 4 | |
| Ms- Access | 3 | | Visual Basic | 4 | |
| PageMaker | 3 | | Java | 4 | |
| CorelDRAW | 3 | | Oracle | 4 | |
| AutoCAD | 3 | | Hardware | 4 | |
| | | | Internet & E-mail | 4 | |
| | | | HTML & Java Script | 4 | |

**Diploma course (on line)**

Diploma in PC Application & Office Management (Including Ms-office Syllabus)
Duration - 3 months Fee - 2750/-
*(Week day batches only)*

குறிப்பு: 1) பயிற்சிநெறிகள் யாவும் நவம்பர் மாத முதல் வாரத்தில் இருந்து ஆரம்பமாகும்.
2) இடைநிறுத்தப்பட்டிருந்த விரிவுரைகள் யாவும் எமது புதிய முகவரியில் ஆரம்பமாகிவிட்டன. செய்முறை வகுப்புக்கள் 09.11.2003 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகும்.

Centre for Information Technology
*For further Details: Course Manager* *Information: Director*



**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக....**

ஆசிரியர் கைந்நூலை அடிப்படையாகக் கொண்டு எதிர்பார்ப்புக் கட்டுரைத் தொகுப்பு

★ அநேக மாணவர்கள் கட்டுரைப் பகுதியை எழுதாது விடுகின்றார்கள்.
★ கட்டுரைக்குக் கிடைக்கின்ற 12 புள்ளிகளையும் வீணாக இழக்கின்றார்கள்.
★ இதனால் பரீட்சையில் சித்தியடையத் தவறுகின்றார்கள்.

இக்குறைபாடுகளை நீக்கி கட்டுரை எழுதும் ஆற்றலை வளர்த்திட புதிய பாடத்திட்டத்தை அமைவாகக் கொண்டு

**ஆசிரியர் திரு. வே.அன்பழகன் அவர்களால்**

விசேடமாகத் தொகுக்கப்பட்ட கட்டுரைத் தொகுப்பு வெளிவந்துவிட்டது! அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்!

தொடர்புகளுக்கு:
**தயா அச்சகம்** யாழ்ப்பாணம். T.P.: 222-2881
**ஞானக்குழந்தை கல்விக்கழகம்** சிவன் வீதி, திருநெல்வேலி. T.P.: 777-244094
(C/31113) (22-11-4-1)



தமிழீழப் போரியல் வரலாற்றில் போராளிகளோடு தோள் நின்று களமாடி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட எல்லைப்படை மாவீரர்கள் நினைவாக தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவு நடத்தும் 11பேர் கொண்ட

**மாபெரும் உதைபந்தாட்டம்**

**இடம்: ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம்**

ஒரு கழகத்தில் இருந்து ஓர் அணி மட்டும் நுழைவுக்கட்டணமாக ரூபா 150/= செலுத்தி விண்ணப்பத்தினை வலிகாமம் லீக், யாழ்ப்பாணம் லீக், பருத்தித்துறை லீக் செயலாளர்களுக்கு நேரடியாக 07-11-2003 இற்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு:- இப்போட்டிகளின்போது,
I) சிறந்த கழகம் தெரிவுசெய்யப்படும்.
II) சிறந்த விளையாட்டுவீரர் தெரிவுசெய்யப்படுவார்.
III) யாழ். மாவட்ட உதைபந்தாட்ட தெரிவு அணி என்பன தெரிவுசெய்யப்பட்டு தமிழீழ தேசிய விளையாட்டு விழா 03 இற்கு பங்குபற்றும்.

மேலதிக தொடர்புகளுக்கு 0776 027509 தொடர்புகொள்ளவும்

❋ போட்டிகள் மின்னொளியிலும் இடம்பெறும்.

**தமிழீழ விளையாட்டுத் துறை**
**யாழ்மாவட்டம்**
(C/31101) (32-12-1-4)



**வேலையாள் தேவை**

எமது நிறுவனத்தில் கடமையாற்ற ஆண் உதவியாளர் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும்: 05.11.2003 புதன் 4.30 (ப.நே.)

**பொருளியற் கல்லூரி**
கே.கே.எஸ். றோட், இணுவில்.



**ஈகன் கல்வி நிலையம்**
சிப.சாதிகவியல்
**A/L 2004**
**PASTPAPER CLASS**
கடந்தகாலப் பரீட்சை வினாக்களின் மீட்டல் வகுப்பு
Thu. 3.30 - 5.30 p.m.
திரு.குமரன் (B.Sc.)
ஆரம்பம்: 06.11.2003 (Thu.)



**வடமராட்சி, யாழ். - கொழும்பு பயணிகள் வான் சேவை**
நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஆசனம் பதிவு செய்யலாம்
வாடிக்கையாளர் கட்டணம் 900/=
ஜெயா ட்ரான்ஸ்போட் & கொமினிகேசன்
JEYA COMMUNICATION, COLOMBO-13
Tel:01-2478... 01-2478442, 0772-251478
லொறி மூலம் பொருள்களை அனுப்பலாம்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.11.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.